விலை ரூபா: 20.00


# தமிழ்நாதம்

Thamil Naatham

இராகம் 01 | தாளம் 05 | வள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 12 செவ்வாய்க்கிழமை (26.06.2012) | பக்கங்கள்: பதினாறு




# புதிய, பழைய பாடத்திட்டங்களுக்கு தனித்தனியான இஸட்(Z) புள்ளிகள்



## உச்சநீதிமன்றம் தீர்ப்பு

2011ஆம் ஆண்டுக்கான பல்கலைக் கழக அனுமதி தொடர்பில் வெளியிடப்பட்ட இஸட் புள்ளி (Z Score) கணிப்பீட்டை ரத்துச் செய்துள்ள உச்சநீதிமன்றம் பழைய பாடத்திட்டத்திற்கும் புதிய பாடத் திட்டத்திற்குமென தனித்தனியான இஸட் புள்ளிகளை கணிப்பிட்டு புதிதாக வெளியிடுமாறு பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு உத்தரவிட்டுள்ளது.

கடந்த வருடம் வெளியிடப்பட்ட க.பொ.த. உயர்தரப்பரீட்சை தொடர்பான இஸட் புள்ளி முடிவுகளை ரத்துச் செய்யுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுவை ஆராய்ந்த மூவரடங்கிய உச்சநீதி மன்ற நீதியரசர் குழு நேற்று இந்தத் தீர்ப்பை அறிவித்தது.

ஏற்றுக்கொள்ளக்கூடிய கொள்கைகள், நடைமுறைகள், தரவுகள் என்பவற்றினடிப்படையில் தனித் தனியாக இரு பாடமுறைமைகளுக்கும் இஸட் புள்ளிகளை கணிப்பிட்டு தேவையற்ற தாமதங்களின்றி இஸட் புள்ளி முடிவுகளை வெளியிடுமாறு உச்ச (2 ஆம் பக்கம் பார்க்க)

## அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் மீள்குடியேறாதோரை இரண்டு வாரத்துள் குடியேற்ற துரித நடவடிக்கை

### சுகாதாரம், குடிநீர், மின்சாரம், போக்குவரத்து உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் தீர்மானம்

மீள்குடியேற அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் சென்று குடியமர்வதில் உள்ள இடர்பாடுகளை நீக்கி அப்பகுதிகளில் மக்களை மீள்குடியேறச் செய்வதற்கான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

மீள்குடியேற அனுமதிக்கப்பட்டும் சுகாதாரம், குடிநீர், மின்சாரம், போக்குவரத்து உள்ளிட்ட அடிப்படை வசதிகள் இன்மை காரணமாக அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களில் மீள்குடியேறாத மக்களுக்காக இத்துரித திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இதற்காக சம்பந்தப்பட்ட திணைக்களங்கள், நிறுவனங்களை ஒன்றிணைத்து செயற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மீள்குடியேற்றத்துக்காக அனுமதிக்கப்பட்ட பல பகுதிகளில் மீள்குடியேற்றாமல் நண்பர்கள் உறவினர்கள் வீடுகளில் தங்கியிருக்கின்றவர்களை சொந்த இடங்களில் இரண்டு வாரங்களில் மீள்குடியேறாமல் யாழ் மாவட்டச் செயலகம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. (2 ஆம் பக்கம் பார்க்க)

## சட்டவிரோத குடியேற்றக்காரர்களைத் தடுப்பதில் அவுஸ்ரேலியாவே உறுதியாக இருக்க வேண்டும்

**சட்டவிரோத குடிவரவாளர்களை ஏற்பதில்லை என்ற கொள்கை அவசியம்**

இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா செல்பவர்களை தடுப்பது தொடர்பாக அவுஸ்திரேலிய அரசாங்கமே கடுமையாக செயற்பட வேண்டுமென வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக அமுனுகம கூறினார்.

அவுஸ்திரேலியாவிற்கான சட்டவிரோத குடியேற்ற விவகாரம் தொடர்பில் அந்நாட்டு அரசாங்கத்துடன் மிகவும் நெருக்கமான முறையில் செயற்பட்டு வருகின்றோம். இருப்பினும் சட்டவிரோதமாக குடியேறுபவர்களை (2 ஆம் பக்கம் பார்க்க)

## பட்டதாரி பயிலுநர் ஆட்சேர்ப்பு

## கட்டம் கட்டமாக நியமன கடிதங்கள் அனுப்பப்படும்

பட்டதாரி பயிலுநர் ஆட்சேர்ப்பு நேர்முகத் தேர்வுக்கு தோற்றி உரிய தகைமைகளைக் கொண்டுள்ள சுமார் ஆயிரத்து 300க்கு மேற்பட்ட பட்டதாரிகள் விரைவில் பிரதேச செயலகங்களில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள் என யாழ்.அரச அதிபர் சு.அருமைநாயகம் தெரிவித்தார்.

தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகளுக்கு கட்டம் கட்டமாக நியமனக் கடிதங்கள் அனுப்பப்பட்டு நியமனம் வழங்கப்படும் எனவும் அவர் கூறினார்.

பட்டதாரி பயிலுநர் ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பங்கள் (2 ஆம் பக்கம் பார்க்க)

## அரச மொழிக் கொள்கைகளை மீறிச் செயற்படும் அரச அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

### அமைச்சர் வாசுதேவ எச்சரிக்கை



அரச மொழிகள் தொடர்பான கொள்கைகளை மீறிச்செயற்படும் அரச அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார எச் சரித்துள்ளார்.

அரச நிறுவனங்களில் சேவைகளை பெற்றுக்கொள்ள வரும் இலங்கையர்கள் தமது மொழிகளில் தமது பணிகளை செய்து கொள்ளலாம் என்று அரசியல் அமைப்புச் சட்டத்தில் உறுதிப் படுத்தப் பட்டுள்ளது எனச் சுட்டிக் காட்டியுள்ள அமைச்சர்,

அரச நிறுவனங்களில் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய தேசிய மொழிகளில் பணியாற்ற வேண்டும் எனக் கூறியுள்ளார்.

இந்த மொழி உரிமைச் சட்டத்தை மீறி செயற்படும் (2 ஆம் பக்கம் பார்க்க)

## பிஜியில் இலங்கையர் கைது

போலி பயண ஆவணங்களை வைத்திருந்த இலங்கை பிரஜை ஒருவர் நேற்று பிஜி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார்.

குறித்த இலங்கை பிரஜை மீது போலி பயண ஆவணங்கள் தயாரித்தமை உள்ளிட்ட மூன்று குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளதாக பிஜி ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (2 ஆம் பக்கம் பார்க்க)

## காணி சுவீகரிப்பு போராட்டத்தை தடுத்ததாக த.தே.கூ.நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

தங்கள் ஜனநாயக ரீதியான போராட்டத்தை பயங்கரவாத போராட்டமாக நீதிமன்றத்துக்குக் கூறி காணி சுவீகரிப்புப் போராட்டத்தைத் தடுப்பதற்கு நீதிமன்றத் தடையுத்தரவைப் பெற்று யாழ். பொலிஸ் நிலையத் தலைமைப் பொறுப்பதிகாரிக்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளதாக அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

மக்களின் ஜனநாயக ரீதியான போராட்டத்தைக் குழப்புவதற்கு யாழ்.பஸ் நிலையத்தில் கலகமடக்கும் பொலிஸாரைக் குவித்ததை ஜனநாயக மக்கள் சார்ந்த போராட்டங்களை தேவையில்லாமல் தடுப்பதற்கு முயற்சிக்கின்றமை போன்ற விடயங்களை உள்ளடக்கியே மேற்படி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு (2 ஆம் பக்கம் பார்க்க)

• கிளிநொச்சி • வவுனியா • அம்பாறை • திருமலை

## புதிய சரணாலயங்களை அமைக்க நடவடிக்கை

வடக்கு, கிழக்கில் புதிய தேசிய பூங்காங்கள் மற்றும் சரணாலயங்களை அமைப்பது பற்றி அரசாங்கம் ஆராய்ந்து வருவதாக வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

யுத்தம் முடிவடைந்து நாட்டில் சமாதானம் ஏற்படுத்தப்பட்டிருக்கும் சூழ்நிலையில் வனவிலங்குகள் திணைக்களத்தின் வலயங்களில் வடக்கு, கிழக்குப் பகுதிகளும் உள்வாங்கப்பட்டுள்ளன. வடக்கு, கிழக்கில் புதிதாக நான்கு வலயங்கள் உருவாங்கப்பட்டிருப்பதாக வனஜீவராசிகள் திணைக்களத்தின் தொடர்பாடல் பிரிவு தெரிவித்துள்ளது.

வனஜீவராசிகள் திணைக்களம் (2 ஆம் பக்கம் பார்க்க)

## "எம் உயிருக்கு அதிகாரிகளே பொறுப்பு"

செங்கல்பட்டு இலங்கை அகதிகள் முகாமில் 30-க்கும் மேற்பட்ட இலங்கை தமிழர்கள் அடைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தங்களை திறந்தவெளி முகாமுக்கு மாற்றக் கோரி வருகிறார்கள். அகதிளால் முன்னர் மேற்கொள்ளப்பட்ட உண்ணாவிரதம் அதிகாரிகளால் வழங்கப்பட்ட உறுதிமொழிக்கமைய கைவிடப்பட்டது. (2 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ், முஸ்லிம் புரிந்துணர்வு: மன்னார் ஆயர் முஸ்லிம் பிரதிநிதிகளுடன் சந்திப்பு

மன்னாரில் அண்மைக்காலமாக தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடயில் ஏற்பட்டுவரும் இடைவெளியை சீர் செய்யும் நோக்கில் மன்னார் ஆயர் பேரருட்திரு இராயப்பு ஜோசப் ஆண்டகைக்கும் முஸ்லிம் சமய, சமூகத் தலைவர்களுக்குமிடையில் முக்கிய சந்திப்பொன்று இடம் பெற்றுள்ளது.

தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையில் நட்புறவையும் புரிந்துணர்வையும் வலுப்படுத்தும் முயற்சியாக இந்த சந்திப்பு அமைந்ததுடன் மன்னார் ஆயரில்லத்தில் நடந்த இச்சந்திப்பினை மன்னார் சர்வமதப் பேரவை ஏற்பாடு செய்திருந்தது.

இச்சந்திப்பு தொடர்பாக மன்னார் சர்வமதப் பேரவையின் தலைவர் அருட்திரு. தமிழ்நேசன் அடிகளார் கருத்துத் தெரிவிக்கையில் இச்சந்திப்பு சுமூகமானதாகவும் சினேகபூர்வமானதாகவும் அமைந்ததோடு பரஸ்பரம் கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ளவும், மன ஆதங்களை வெளிப்படுத்தவும் சிறந்த களமாக அமைந்திருந்தது எனவும் குறிப்பிட்டார்.

இச்சந்திப்புத் தொடர்பாக தமிழ்நேசன் அடிகளார் மேலும் தெரிவித்ததாவது, மன்னாரில் அனைத்துச் சமூகங்களையும் சேர்ந்த மக்கள் மன்னாரில் இனங்களுக்கிடையில், மதங்களுக்கிடையில் அண்மைக் காலத்தில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலை குறித்து மிகுந்த வேதனை கொண்டுள்ளனர்.

இம்முறுகல் நிலையை மேலும் வளரவிடாமல் தடுப்பதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினரை சந்திக்க வைத்து பிரச்சினைகளைப் பேசித் தீர்க்க வழிசெய்ய வேண்டும் என்ற எதிர்பார்ப்பையும் கொண்டிருந்தனர். அதுமட்டுமல்ல மன்னாருக்கு வெளியே உள்ள நல்மனம் கொண்ட பல தரப்பினரும் இந்த நிலைமை தொடர்பாக தங்கள் அக்கறையை வெளிப்படுத்தியுள்ளனர்.

எனவேதான் மக்களின் இந்த உணர்வுகளைப் புரிந்துகொண்டு மன்னாரில் இன, மத நல்லிணக்கத்தை மீண்டும் கட்டியெழுப்பும் நடவடிக்கையாக இச்சந்திப்பை மன்னார் சர்வமதப் பேரவை ஏற்பாடு செய்தது.

## அனுமதிக்கப்பட்ட பகுதிகளில்... (தொடர்)

யாழ்ப்பாணத்தில் உள்ள ஆறு பிரதேச செயலக பிரிவுகளில் முதற் கட்டமாக இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது. நெடுந்தீவு வேலணை, சங்கானை, உடுவில், தெல்லிப்பளை, காரைநகர் போன்ற பிரதேச செயலகர் பிரிவுகளிலேயே இந்த மீள் குடியேற்றம் செய்யப்படவுள்ளது.

ஆறு பிரதேச செயலக பிரிவுகளில் 4659 பேர் இவ்வாறு உறவினர்கள் நண்பர்கள் வீடுகளில் தங்கி வருகின்றனர். இவர்களை குறித்த பிரதேச செயலக பிரிவுகளில் உடனடியாக மீள்குடியேற்றம் செய்வது தொடர்பாக பிரதேச செயலாளர்களுடன் கலந்துரையாடல் நேற்று யாழ் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இதில் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்து கொடுத்தால் மக்கள் சொந்த இடங்களில் குடியேறுவதற்கு சம்மதிப்பார்கள் என்று பிரதேச செயலர்களினால் தெரிவிக்கப்பட்டது.

அந்த மக்களுக்கு தேவையான வீட்டு வசதிகளை வழங்க தொண்டு நிறுவனங்கள் முன்வந்துள்ள நிலையில் குறித்த பிரதேசத்தில் மக்களுக்குத் தேவையான மின்சாரம், போக்குவரத்து, மருத்துவ வசதிகள், கல்வி, குடிநீர் போன்ற பிரச்சினைகள் விரைந்து தீர்ப்பதற்கு சம்மந்தப்பட்ட அதிகாரிகள் இணக்கம் தெரிவித்திருந்தனர்.

மீண்டும் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் மீளக்குடியேற வேண்டியவர்களின் பட்டியல் மீள் தயாரிப்பு செய்யப்பட்டு அவர்களிற்கு வேண்டிய அறிவுரைகள் வழங்கப்படுவதுடன் இந்த இரண்டு வாரகாலத்திற்குள் மக்களை மீள்குடியேற்றம் செய்வது தொடர்பாக விழிப்புணர்வை பத்திரிகைகள் மூலம் செய்வதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆளுனர் சந்திரசிறி நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், சில்வெஸ்திரி அலன்ரின், யாழ் அரச சதிஸ் சுந்தரம் அருமை நாயகம், யாழ் மேயர் யோகேஸ்வரி பற்குணராஜா, பிரதேச செயலர்கள், பிரதேச சபை, உறுப்பினர்கள், திணைக்களத் தலைவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## புதிய, பழைய பாடத்திட்டங்களுக்கு.... (தொடர்)

நீதிமன்றம் உத்தரவிட்டது.

பழைய மற்றும் புதிய பாடத்திட்டங்கள் இரண்டிற்கும் ஒரே இஸட் புள்ளி முறையை தீர்மானித்ததன் மூலம் பல்கலைக்கழக மாணவர்களின் அடிப்படை உரிமையை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மீறியுள்ளதாகவும் உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

2011இல் வெளியிடப்பட்ட இஸட் புள்ளி கணிப்பீட்டுக்கு எதிராக இலங்கை ஆசிரியர் சங்கமும், உயர்தரப்பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் சிலரும் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மீறல் மனுமீதான தீர்ப்பு பகிரங்க நீதிமன்றத்தில் வெளியிடப்பட்டது. 38 பக்கங்களைக் கொண்ட தீர்ப்பை பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்க, உச்சநீதிமன்ற நீதியரசர்களான நிமல் காமினி அமரதுங்க, கே.ஸ்ரீபவன் ஆகிய நீதியரசர் குழு வெளியிட்டது.

2000ஆம் ஆண்டு முதல் பழைய பாடத்திட்டத்திற்கும் புதிய பாடத்திட்டத்திற்கும் எனத் தனித்தனியாக இஸட் புள்ளி முறை கணிப்பிடப்பட்டு வந்தது. 2011ஆம் ஆண்டில் முதன்முறையாக இந்த முறை மாற்றப்பட்டு இரு பாடத்திட்டங்களுக்கும் ஒரே இஸட் புள்ளிமுறை அறிமுகப்படுத்தப்பட்டது.

இவ்வாறு மாற்றம் செய்வது தொடர்பாக மாணவர்களுக்கு முன்கூட்டியே அறிவிக்கப்படவில்லை. இத்தகைய மாற்றம் மேற்கொள்வதற்கு முன்னர் மாணவர்களுக்கு முன்னறிவித்தல் வழங்கியிருக்க வேண்டும். இம்முறையும் பழைய இஸட் புள்ளி முறைப்படியே கணிப்பீடு செய்யப்படும் என மாணவர்கள் எதிர்பார்த்திருந்ததாகவும் உச்சநீதிமன்ற தீர்ப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாறு முன்னறிவித்தலின்றி இஸட் புள்ளி முறையில் மாற்றம் செய்தது தவறு எனவும் உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

உயர்தரப்பரீட்சைக்கான சில வினாத்தாள்களில் உள்ள கேள்வியின் தன்மை, விடையளிப்பதற்கு வழங்கப்பட்ட காலம், புள்ளி வழங்கும் முறை என்பவற்றில் தெளிவான மாற்றம் இருக்கும் நிலையில் இரு பாடத்திட்டங்களுக்கும் ஒரே புள்ளிமுறையின் மூலம் கணிப்பீடு செய்வது தவறு எனவும் உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது. இருந்தாலும் பரீட்சை பெறுபேறு தொடர்பில் எதுவித உத்தரவும் வழங்கப் போவதில்லை எனவும் உச்சநீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

மனுதாரர்கள் சார்பாக சட்டத்தரணி ஜே.சீ.வெலியமுன சட்டத்தரணி சஞ்சீவ சாமநில ஆகியோர் ஆஜரானார்கள்.

பிரதிவாதிகள் சார்பாக ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா பேராசிரியர் ஆர்.ஓ. தடில், அரச சட்டத்தரணி நெரில்புள்ளே ஆகியோர் ஆஜரானார்கள்.

## சட்டவிரோத குடியேற்றக்காரர்.... (தொடர்)

பொறுப்பேற்க முடியாது என்ற கொள்கையில் அவுஸ்திரேலிய அரசாங்கம் உறுதியாக இல்லாத வரை இதனை முற்றாக ஒழிப்பது கடினமெனவும் அவர் குறிப்பிட்டார்.

சட்டவிரோதமான படகுகள் மூலம் அவுஸ்திரேலியா செல்வோர் தொகை அண்மைக் காலமாக அதிகரித்துள்ளது. இந்த விவகாரம் தொடர்பில் இரு நாட்டு அரசாங்கங்களும் பல்வேறு மட்டத்தில் இருதரப்பு பேச்சு வார்த்தையில் ஈடுபட்டு வருகின்றன. அவற்றிற்கும் மேலதிமாக பாளிடயலொக் ,ஆசியாவின் பேரவை ஆகியவற்றிலும் அவுஸ்திரேலியாவிற்கான சட்டவிரோத குடியேற்றம் தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றன.

இதனைத் தவிர இலங்கைப் பொலிசார், கடற்படையினர், கரையோர பாதுகாப்பு படையினர் முழுநேர பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டு வருகின்றனர். நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட இலங்கைத்தீவிலிருந்து எப்படியோ படகுகள் மூலம் சட்ட விரோதமாக அவுஸ்திரேலியா செல்வது தொடர்ந்த வண்ணமேயுள்ளது.

அவுஸ்திரேலிய அரசாங்கத்தினர், சர்வதேச சட்ட கொள்கையினை கடைப்பிடிக்க வேண்டியுள்ளதால் தமது நாட்டில் தஞ்சமடைவோரை பொறுப்பேற்க வேண்டிய கட்டாயத்திலிப்பதாக வலியுறுத்தினார். சர்வதேச சட்டக் கொள்கையினை நாமும் ஏற்றுக்கொள்கிறோம். அதற்கு மறுப்புத் தெரிவிக்கவில்லை. இருப்பினும் அவுஸ்திரேலிய அரசாங்கம் இந்த விடயத்தினில் தமது கொள்கையினை சற்று தளர்த்தி மாற்றுக் கொள்கையினைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம்.

எமது நாட்டுப் பிரஜைகளை அவுஸ்திரேலியாவிற்குள் பொறுப்பேற்க வேண்டாமெனக் கூறுவதில் நாம் கவனம் செலுத்தவில்லை. சட்ட விரோதமான முறையில் பாதுகாப்பற்ற தீவுகளில் சிக்கி அவஸ்தைக்குள்ளாதல் போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் எமது இலங்கைப் பிரஜைகளுக்கு பொறுப்புக் கூற வேண்டிய கடப்பாடு எமது இலங்கை அரசாங்கத்திற்கே உள்ளது.

இதனை வியாபாரமாக சிலர் பணம் சம்பாதிக்கின்றனர், ஏமாறுகின்றனர். இவற்றை தடுத்து நிறுத்த வேண்டியது எமது பொறுப்பு. அதற்காகவே சட்டவிரோதமாக குடியேறுபவர்களை நாட்டுக்குள் ஏற்றுக்கொள்ளக் கூடாது என்பதில் உறுதியாக கேட்டுக்கொள்கிறோமெனவும் அவர் தெரிவித்தார்.

# ஆயுர்வேத பாதுகாப்புச் சபை கூட்டம்

யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் உள்ள ஆயுர்வேத பாதுகாப்புச்சபையினது கூட்டமொன்று எதிர்வரும் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 2.30 மணியளவில் யாழ் பிரதேச செயலர் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சபையின் தலைவர் வைத்திய கலாநிதி பிறிட்டோ டக்ளஸ் தலைமையில் நடைபெறவிருக்கும் இந்தக் கூட்டத்தில் யாழ் சித்த ஆயுர்வேத மத்திய மருந்தகத்தில் முறிவு நொறிவு வைத்தியராக கடமையாற்றி வருகின்ற சௌந்தரராசன் வழங்கும் முறிவுநொறிவு வைத்தியம் சம்பந்தமான விளக்[illegible] வுரையும் இடம்பெறவிருக்கின்றது.

## பிஜியில்.... (தொடர்)

சந்தேகநபரிடம் இருந்து போலி பிரித்தானிய மற்றும் இந்தியக் கடவுச்சீட்டுக்களும் மீட்கப்பட்டுள்ளது.

## காணி சுவீகரிப்பு.... (தொடர்)

எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## கட்டம் கட்டமாக... (தொடர்)

கோரப்பட்டு இம் மாதம் 5 ஆம் திகதி தொடக்கம் 7ஆம் திகதி வரை நேர்முகத் தேர்வு நடைபெற்றது.

இதனடிப்படையில் தகைமையுள்ளவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் பட்டத்தகைமைகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ள பட்டதாரிகள் 300 பேர் பிரதேச செயலகங்களில் இணைத்துக் கொள்ளப்படுவர் என அவர் மேலும் கூறினார்.

பட்டதாரி பயிலுனர் நியமனம் தொடர்பில் பட்டதாரிகள் மத்தியில் பல்வேறு கருத்துக்கள் தொடர்பாக குழப்பநிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## எம் உயிருக்கு.... (தொடர்)

இந்த நிலையில் உறுதிமொழிகள் நிறைவேற்றப்படாததால் இலங்கை அகதிகள் மீண்டும் உண்ணாவிரதத்தை தொடங்கினர். மொத்தம் 8 பேர் கடந்த 10 நாட்களாக உண்ணாவிரதம் இருந்த வந்தனர்.

இவர்களின் உடல்நிலை மோசமடைந்ததையடுத்து செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அங்கும் அவர்கள் உண்ணாவிரதத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

தங்களது உயிருக்கு ஆ[illegible]து ஏற்பட்டால் அதற்கு அதிகாரிகளே பொறுப்பு என அவர்கள் தெரிவித்தனர்.

## புதிய சரணாலயங்களை.... (தொடர்)

இலங்கையை 7 வலயங்களாகப் வகுத்திருந்தது. யுத்தம் காரணமாக வடக்கு, கிழக்கு மாகாணங்கள் வடமத்திய மாகாண வலயத்துக்குள்ளேயே உள்ளடக்கப்பட்டிருந்தன. நாட்டில் சமாதானம் ஏற்படுத்தப்பட்டிருக்கும் சூழ்நிலையில் வடக்கு, கிழக்கில் புதிதாக நான்கு வலயங்கள் உருவாங்கப்பட்டுள்ளன. அவற்றையும் சேர்த்து நாடு முழுவதிலும் மொத்தமாக 11 வலயங்கள் உள்ளன.

கிளிநொச்சி, வவுனியா, திருகோணமலை மற்றும் அம்பாறை ஆகிய பகுதிகளிலேயே புதிதாக நான்கு வலயங்கள் உருவாக்கப்பட்டிருப்பதாக வனஜீவராசிகள் திணைக்களத்தின் தொடர்பாடல் அதிகாரி கூறினார்.

இந்த நிலையில் வடபகுயில் புதிதாக தேசிய பூங்காக்கள் மற்றும் சரணாலயங்கள் அமைப்பது பற்றி ஆராய்ந்து வருகின்றோம். சுண்டிக்குளம், மடுவீதி மற்றும் ஊர்காவற்துறை ஆகிய இடங்களில் தேசிய பூங்காங்கள் மற்றும் சரணாலயங்களை அமைப்பது பற்றி ஆராய்ந்து வருவதாகவும் அந்த அதி[illegible] குறிப்பிட்டார்.

## அரச மொழிக்.... (தொடர்)

அதிகாரிகள் குறித்து கண்டறிய மொழி ஆய்வு அதிகாரிகள் அரச நிறுவனங்களில் கண்காணிப்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளதுடன் நாட்டு மக்கள் அரசியல் அமைப்புக்கு கட்டுப்பட்டவர்கள் என்பதால் அரசாங்கத்தின் மொழி தொடர்பான கொள்கை தனியார் துறையினருக்கும் பொருந்தும்.

எனவே தனியார் துறையினரும் மொழி கொள்கையைக் கடைபிடிக்க வேண்டும் எனவும் மேலும் தெரிவித்துள்ளார்.

## இன்றைய இராசி பலன் (26.06.2012)

நந்தன வருடம் ஆனித் திங்கள் 12ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
**நட்சத்திரம்:** உத்தரம் பின்னிரவு 3.20 வரை. அதன்பின் அத்தம்
**திதி :** ஸப்தமி மாலை 6.56 வரை. அதன்பின் அட்டமி
**சுபநேரம் :** 10.25 - 11.55 **இராகுகாலம்:** 2.55 - 4.25
(இந்த நேரங்கள் பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்)

**மேடம் :** குடும்பத்தில் மகிழ்ச்சி, வெளியூர் பிரயாணம், தொழில்தடை நீங்கும்.
**இடபம் :** மனக்குழப்பம் நீங்கும், பணவரவு, தாய்வழி ஆதரவு
**மிதுனம்:** ஆன்மீக நாட்டம், பிறரால் மதிப்பு, காரிய வெற்றி
**கடகம் :** குடும்ப உறவு, வியாபார விருத்தி, மகிழ்ச்சியான பயணம்
**சிங்கம் :** கடன் வாங்கும் பலன், வியாபாரப் போட்டி, தொழில் வகையில் பிரச்சினை
**கன்னி :** உறவினர் மதிப்பு, வீடு வாகனம் மாற்றம், வியாபாரத்தில் பணவரவு
**துலாம் :** சுறுசுறுப்பு, பெற்றோரின் ஒத்துழைப்பு, காரிய அனுகூலம்
**விருட்சிகம் :** வேலைச் சுமை, அவமானம், தொழில் வகையில் அவதானம் தேவை
**தனுசு :** விருந்தினர் வருகை, குடும்பத்தில் மகிழ்ச்சி, வியாபாரத்தில் இலாபம்
**மகரம் :** தன்னம்பிக்கை, பணவரவு, மேலதிகாரிகளின் ஒத்துழைப்பு
**கும்பம் :** தொழில் தடை நீங்கும், வெளியூர் பயணம், விருந்தினர் வருகை.
**மீனம் :** பணவரவு, மனநிம்மதி, தாய்வழியால் ஆதரவு

# தம்பபன்னி, குதிரைமுனையை சுற்றுலா மையமாக்கத் திட்டம்

வரலாற்றுச் சிறப்புமிக்க இடமான தம்பபன்னி, குதிரைமுனைப் பிரதேசத்தை சுற்றுலா மையமாக அபிவிருத்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடமேல் மாகாண சபை, புத்தளம் நகர சபை, வண்ணாத்திவில்லு பிரதேச சபை ஆகியன இணைந்து இந்த அபிவிருத்தித் திட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக புத்தளம் நகர பிதா கே.ஏ. பாயிஸ் தெரிவித்தார்.

புத்தளம்-மன்னார் ஆகிய மாவட்டங்களின் எல்லையில் உள்ள மோதகம் ஆற்றை அண்டிய பகுதியில் தம்பபன்னி, குதிரைமுனை ஆகிய பிரதேசங்கள் உள்ளன. இங்கு விஜயன் வந்து இறங்கியமை, விஜயனுக்கும் - குவேனிக்கும் இடையில் சந்திப்பு நிகழ்ந்தமை போன்றவற்றுக்கான தடயங்களும் இருப்பதாகக் கூறப்படுகிறது.

இதைவிட அல்லிராணி கோட்டை அராபியர்கள், இந்தியர்கள் இப்பிரதேசங்களூடாக வந்து சென்றமைக்கான சான்றுகள் உண்டு என்றும் சொல்லப்படுகிறது.

குதிரைமுனைப் பிரதேசத்தில் புராதன காலத்து வெளிச்ச வீடு ஒன்றிற்கான சிதைவுகள் உள்ளன.

குதிரை ஒன்றின் வடிவைப் போன்ற இவ்வெளிச்ச வீடு சுமார் 40 அடி உயரத்தில் இருந்திருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். முஸ்லிம்கள் வருகைக்கான தடயமும் இங்கு உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### இவ்வாண்டின் முதல் ஐந்து மாதத்தில்

## இலங்கையில் உல்லாசப் பயணத்துறை மூலம் 399.3 மில். டொலர் வருமானம்

இவ்வாண்டின் முதல் ஐந்து மாத காலப்பகுதியில் இலங்கையின் உல்லாசப் பயணத்துறை 399.3 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானத்தை பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஆண்டின் இதே காலப் பகுதியில் 318.1 மில்லியன் அமெ ரிக்க டொலர்களாக இருந்த வருமானம், 25.5 சத வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று இக் காலத்தில் இலங்கைக்கு வரும் உல்லாசப் பயணிகளின் வருகை 18.2 சத வீதத்தால் அதிகரித்துள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வருடத்தின் முதல் ஐந்து மாதத்தில் 3,87,622 பயணிகள் இலங்கை வந்துள்ளனர். யுத்தம் முடிவடைந்ததற்கு பின்னர் இவ்வாண்டில் உல்லாசப் பயணத்துறை படிப்படியாக அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வடக்கின் பின்தங்கிய பிரதேச அபிவிருத்திக்கு பெருந்தொகை நிதி

### அமைச்சர் ரிஷாட் பதியுதீன்

"முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற பின்தங்கிய பகுதிகளின் அபிவிருத்திக்கென கோடிக்கனக்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

சுமார் முப்பது வருடங்களுக்கு மேலாகப் பின்தங்கியிருந்த மக்களுக்கு இது வரப்பிரசாதமாக அமையும்" என்று கைத்தொழில் மற்றும் வாணிபத் துறை அமைச்சர் ரிஷாட் பதியுதீன் குறிப்பிட்டார். முல்லைத்தீவில் சத்திரசிச்சைக் கட்டிடத்துக்கான அடிக்கல் நாட்டு விழாவில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். யுத்த வடுக்களைச் சந்தித்த மக்களுக்கு இதுவொரு நற்செய்தி.

பாதிக்கப்பட்ட மக்கள் நிம்மதியாக வாழ்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுமெனவும் அவர் கூறினார்.

## வரட்சிக் காலநிலையை சமாளிக்க நீர், மின்சார சிக்கனம் அவசியம்

### அமைச்சர்கள் வேண்டுகோள்

எதிர்வரும் பத்து நாட்களுக்கும் தொடர்ந்து வறட்சியான காலநிலை இலங்கையில் நீடிக்குமாக இருந்தால் அரசாங்கம் மின்விநியோகத்தினை வெட்டுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தயங்காது என நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அமைச்சர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

நாட்டின் அனைத்து பிரதேசங்களிலும் நிலவி வரும் வறட்சியான காலநிலையினால் மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதுடன், குடிநீர்த் தட்டுப்பாடும் தலையெடுத்துள்ளது.

இந்த நிலையில் மக்கள் மின்சாரத்தினையும், தண்ணீரையும் சிக்கனமாகப் பாவிக்க வேணடும். மக்கள் தண்ணீரை வாகனங்களை சுத்தம் செய்வதற்கும், பூச்செடிகளுக்குப் பாய்ச்சுவதற்கும் பயன்படுத்துவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் தினேஸ்குண வர்த்தன தெரிவித்தார்.

அதேவேளை, இரவு நேரங்களில் இரண்டு மின் குமிழ்களைப் பயனபடுத்துவதோடு, மாலை ஆறு மணி தொடக்கம் பத்து மணி-வரை சிக்கனமாக மின்சாரத்தை பாவிக்க வேண்டும். தேவையில்லாமல் குளிர்சாதனப் பெட்டிகள், தொலைக்காட்சிப் பெட்டிகளை பாவிப்பதை தவிர்க்க வேண்டுமென எரிபொருள் மின்சக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அத்துடன் தென்மேற்கு பருவக்காற்று மழை உரிய வேளையில் பெய்யாது பொய்த்துள்ளதால், மலையக பிரதேச நீர்த்தேக்கங்களில் நீர் மட்டம் குறைவடைந்துள்ளதுடன், நீர்மின்சார உற்பத்தியும் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் அனல் மின்சார உற்பத்தி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இதற்கு பெருமளவு செலவு ஏற்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## வலி. வடக்கில் ஐந்து வீதிகள் புனரமைப்பு

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் சிறுநகர அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் வலிகாமம் வடக்கு பிரதேசசபை எல்லைக்குட்பட்ட ஐந்து வீதிகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

மக்களின் இலகுவான போக்குவரத்து மற்றும் பிரதேச அபிவிருத்தி என்பவற்றை நோக்கமாகக் கொண்டு இவ்வீதிகள் புனரமைக்கப்பட வுள்ளன.

இதனடிப்படையில் அளவெட்டி வடக்கிலுள்ள பெரிய கிணற்றடி வீதி, மல்லாகம் தெற்கிலுள்ள கணக்காளர் வளவு வீதி மற்றும் குருவளை வீதி, அளவெட்டி மேற்கிலுள்ள தம்மனை வீதி, மல்லாகம் மத்தியிலுள்ள சோடாக் கொம்பனி வீதி ஆகியனவே புனரமைக்கப்படவுள்ளன.

உலக வங்கியின் கடனுதவியால் மேற்கொள்ளப்படவுள்ள இவ் வீதி புனரமைப்புகளுக்காக ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

## நாட்டில் நாளொன்றுக்கு நான்கு பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள்

நாட்டில் நாளாந்தம் ஆகக் குறைந்தது நான்கு பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் இடம் பெறுகின்றன. இவ்வாறு பாதிக்கப்படுபவர்களில் அதிகமானோர் பதினாறு வயதுக்குக் குறைந்த பிள்ளைகளாவர் என்று பொலிசாரின் புள்ளிவிபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பல பாடசாலைப் பிள்ளைகள் அவர்களின் நெருங்கிய உறவினர்களாலேயோ அல்லது அவர்களுக்கு நன்கு தெரிந்தவர்களாலேயே துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்படுகின்றனர் என்றும் பொலிஸ் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

## திருமுறிகண்டியில் 80 குடும்பங்கள் மீள்குடியேற்றம்

முல்லைத்தீவு, திருமுறிகண்டியில் சுமார் எண்பது குடும்பங்கள் மீள்குடியேற்றப்பட்டன.

இவர்களில் நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வந்த 47 குடும்பங்களும், நண்பர்கள் மற்றும் உறவினர்கள் வீடுகளில் வசித்து வந்த 33 குடும்பங்களும் உள்ளடங்குகின்றன.

இவர்களுக்கான காணி உறுதிப்பத்திரங்களை அம்பாந்தோட்டைப் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச வழங்கினார். இவர்கள் குடியிருப்புகளை அமைப்பதற்கு 94 இலட்ச ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

சுமார் 147 குடும்பங்கள் திருமுறிகண்டிக் கிராமத்தில் வாழ்ந்து வந்தனர். முதற்கட்டமாகவே எண்பது குடும்பங்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளன. நேற்றுமுன்தினம் நண்பகல் நடைபெற்ற இம் மீள்குடியேற்ற நிகழ்வில் வணிக, கைத்தொழில் அமைச்சர் ரிஷாட் பதியுதீன், தனியார் போக்குவரத்துத்துறை அமைச்சர் சி.பி.இரத்நாயக்கா, எம்.பி.க்களான மு.சந்திரகுமார், ஹுனைஸ் பாருக் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## சந்தை, ஆயுர்வேத வைத்தியசாலை புனரமைப்பு செய்ய நடவடிக்கை

கிளிநொச்சி மாவட்டம் பூநகரி பிரதேசத்திலுள்ள வலைப்பாடு சந்தை மற்றும் இரணைதீவு ஆயுர்வேத வைத்தியசாலை என்பன புனரமைக்கப்படவுள்ளன.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் உள்ளூர் பிரதேச கிராமிய, சிறுநகர அபவிருத்தித் திட்டத்தின் கீழ் இவை புனரமைக்கப்படவுள்ளன.

யுத்தத்தின் பின்னர் பூநகரி பிரதேசத்தில் மீளக்குடியேறியுள்ள பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு சந்தையும் ஆயுர்வேத வைத்தியசாலையும் புனரமைக்கப்படவுள்ளன.

உள்ளூர் சேவைகளை மேம்படுத்தும் அரசாங்கத்தின் இந்தத் திட்டத்திற்கு உலக வங்கி கடனுதவி வழங்குகிறது.

இப்புனரமைப்பு நடவடிக்கைகளில் வலைப்பாடு சந்தையை புனரமைப்பதற்கு ரூபா 4.94 மில்லியனும் இரணைதீவு ஆயுர்வேத வைத்தியசாலை புனரமைப்புக்கு 4.105 மில்லியன் ரூபாவும் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இப்புனரமைப்புக்காக ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்களும் கோரப்பட்டுள்ளன.

## கிளிநொச்சி நகரக் கடைகளுக்கு காணி உறுதிப் பத்திரங்கள்

"கிளிநொச்சி நகரிலுள்ள இந்தக் கடைகளுக்கான காணி உறுதிப் பத்திரங்கள் வழங்குவதில் ஏற்பட்ட தாமதத்துக்கு அரசின் தவறுகள் காரணமல்ல. அத்தாடசிப் பத்திரம் வழங்குவதில் சில பிரச்சினைகள் ஏற்பட்டமையே இதற்குக் காரணம்" என்று யாழ் மாவட்ட எம்.பி. மு.சந்திரகுமார் தெரிவித்தார்.

யுத்தம் காரணமாக இக்கடைகள் பெரும் சேதத்துக்கு இலக்காகின. இவற்றின் எல்லைகளைக் கூட நிர்ணயம் செய்வதில் பெரும் சிக்கல்கள் ஏற்பட்டன. இப்போது 25 கடைகளுக்குக் காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கப்படுகின்றன. இன்னும் ஐந்து கடைகளுக்கு அசல் பத்திரங்கள் வழங்கப்பட வேண்டியுள்ளன. இது தொடர்பாக இருக்கும் சிக்கல்கள் தீர்ந்ததும் அவற்றின் காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கப்படுமென்றும் சந்திரகுமார் தெரிவித்தார்.

கிளிநொச்சி நகரில் 25 கடை உரிமையாளர்களிடம் காணி உறுதிப் பத்திரம் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இங்கு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

## ஆவரங்கால் நடராஜா இராமலிங்க சுவாமி ஆலய மகோற்சவம்

ஆவரங்கால் நடராஜா இராமலிங்க சுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் கடந்த 17ஆம் திகதியன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடை-பெற்று வருகிறது. நேற்று 25ஆம் திகதி திங்கட்கிழமை இரதோற்சவம் நடைபெற்றது. இன்று செவ்வாய்க்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறவிருக்கிறது.

மகோற்சவ தினத்தையொட்டி தினந்தோறும் மாலை 6.30 மணி முதல் அருட்சொல்வாரி சைவப் புலவர் செ.கந்த சத்தியதாசன் 'சிவனருட்செல்வர்' எனும் தலைப்பில் நிகழ்த்தும் தொடர்சொற்பொழிவு இடம் பெற்று வருகிறது.

## பிரிட்டன் மாணவர் குழு யாழ்ப்பாணம் வருகிறது

வட மாகாண மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் பிரித்தானிய நொட்டிங்ஹாம் பல்கலைக்கழக மாணவர் குழு ஒன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் யாழ். மாவட்டத்திற்கு இந்த பல்கலைக்கழக மாணவர் குழு விஜயம் செய்யவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

இவர்கள், வடக்கில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல்வேறு சுயதொழில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குரிய கற்பித்தல் மற்றும் பயிற்சிகளை வழங்குவார்கள் என பயண ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக யுத்தத்தில் கணவர்மார்களை இழந்த 70 பெண்களின் பொருளாதார மேம்பாட்டை கருத்தில் கொண்டு செயற்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி தையல், உணவு உற்பத்தி மற்றும் பதனிடல், கூடை தயாரிப்பு உட்பட பல சுயதொழில் பயிற்சிகளை வழங்குவார்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த பிரித்தானிய நொட்டிங்ஹாம் பல்கலைக்கழக மாணவர் குழுவில் சீன மாணவர்கள் உட்பட பல நாட்டவர்களும் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# மீளக்குடியேறிய மக்கள் எதிர்கொள்ளும் சவால்கள்

யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட மூன்று ஆண்டுகளுக் குள் இறுதி யுத்தம் நடை பெற்ற கணிசமான பிரதேசங் களில் பொதுமக்களை அவர்களுடைய சொந்த வீடுகளில், குடியிருப்பு நிலங்களில் மீளக் குடியேற அனுமதித்துள்ளமை அந்த மக்களின் மனங்களில் ஓரளவு க்கேனும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இருந்தபொழுதும் இந்த மீள்குடியேறிய மக்கள் தமது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையிலான வருமானத்



தினைப் பெற்றுக்கொள்ளக் கூடிய நிரந்தரமான தொழிலைத் தேடி அலைகின் றனர். குறிப்பாக முல்லை த்தீவு, கிளிநொச்சி மாவட்டங் களில் மீளக் குடியமர்த்தப் பட்ட மக்கள் நிரந்தரமான ஒரு தொழிலை பெற்றுக் கொள்வதில் பாரிய சவால் களை எதிர்கொள்கின்றனர். தினமும் நாட் கூலியாக 400 ரூபா தொடக்கம் 500 ரூபா ஊதியத்துடன் தமது உழைப்பினை வழங்க வேண்டியவர்களாக உள்ளனர்.

இறுதி யுத்தத்தின்பொழுது பல்வேறு பிரதேசங்களுக்கு மாறிமாறி இடம்பெயர்ந்து அனர்த்தங்களை எதிர் கொண்டு முற்றாகப் பொருளாதார இழப்புகளை எதிர்கொண்ட இப்பகுதி மக்கள் தமது வாழ்வாதாரத் தினை வளப்படுத்திக் கொள்ள வேண்டியவர்களாக வுள்ளனர்.

இதனால் கிடைக்கின்ற தொழிலைத் தேடிச் செல் கின்ற இந்த மக்களுக்கு நாட்டின் ஏனைய பகுதிகளில் கிடைக்கின்ற கூலி கூடக் கிடைப்பதில்லை, வறுமை யினால் வேறு வழியின்றி இத்தொழிலைச் செய்ய வேண்டிய நிர்க்கதிக்கு இவர்கள் உள்ளாகியுள்ளனர்.

மீளக் குடியமர்ந்தவர்களு க்கான கொடுப்பனவுகள், வாழ்வாதார உதவிகள் என்பன இந்த மக்களின் சகல அடிப்படைத் தேவை களையும் பூர்த்தி செய்து கொள்வதற்குப் போதுமான தாக இல்லை. இந்த நிலையில் இப்பகுதிகளில் வசிக்கின்ற பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களின் நிலை மிகவும் வேதனையளிப் பதாகவுள்ளது. ஆண்களின் துணையற்ற இந்தக் குடும்பங் களின் தலைவிகள் வறுமை யினால் தமது குழந்தைகளுக் காக மிகவும் குறைந்த கூலிக்கு வேலை செய்கின்றனர்.

இந்த நிலையினைப் போக் கக்கூடிய வகையில் தத்தமது பிரதேசங்களிலேயே தமக்கான நிரந்தரமான வேலைவாய்ப்புக் களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய நிறுவனங்களையும் கைத்தொழில் பேட்டைகளை யும் உடனடியாகவே ஆரம்பிக்க வேண்டுமென இந்த மக்கள் வேண்டுகின் றனர்.

இதேபோன்று பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பத் தலைவி கள் தமக்கு நிரந்தரமான வேலையினைப் பெற்றுத்தரக் கூடிய விசேட திட்டங்களை உடனடியாகவே அமுல்படுத் துமாறு கோரிக்கை விடுத்து ள்ளனர்.

யுத்தத்தினால் பாதிக்கப் பட்ட விதவைகளின் பொருளாதார மேம்பாட்டுக் கென விசேட திட்டங்கள் எவையுமே இதுவரையும் முன்வைக்கப்படவில்லை. இவர்கள், தமக்கு வாழ்வாதார உதவி என்ற பெயரில் கிடைக்கின்ற உதவிகளுக்கு அப்பால், எதிர்காலத்தில் நிரந்தரமான வேலை வாய்ப்பு க்களைப் பெற்றுத்தரக் கூடிய தொழிற்சாலைகளை உருவாக்கித் தருமாறு கோரியுள்ளனர்.


யுத்தத்திற்கு முன்னரான காலத்தில் வடபகுதியில் பாரிய தொழிற்சாலைகள் பல இயங்கி வந்துள்ளன. குறிப்பாக காங்கேசன்துறை சீமெந்து உற்பத்தி ஆலை, ஆனையிறவு உப்பு உற்பத்தித் தொழிற்சாலை, பரந்தன் இரசாயனக் கூட்டுத் தாபனம், ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை, புன்னாலைக்கட்டுவன் (ஈவினை) அஸ்பெஸ்ரோஸ் கூரைத்தகடு உற்பத்தி நிலையம், யாழ்ப்பாண லேடன் ஆடை உற்பத்தி நிலையம் போன்ற தொழிற் சாலைகள் பாரிய அளவான முதலீட்டுடன் அதிகளவான பிரதேச மக்களுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கக்கூடிய வகையில் இயங்கியுள்ளன. ஆனால் இவை அனைத்தும் யுத்தத்தினால் முற்றாக நாசமாக்கப்பட்டுள்ளன.

இந்தத் தொழிற்சாலைகளை மீளவும் இயங்க வைப்பதன் ஊடாக இந்த பிரதேச மக்களின் வேலையில்லாப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும்.

இவைகளை மீண்டும் இயங்க வைக்க வேண்டும் என்பதும் மேலும் வாய்ப்புக் களை ஏற்படுத்தக் கூடிய புதிய தொழிற்சாலைகளையும் கைத்தொழில் பேட்டைகளை யும் உருவாக்க வேண்டும் என்பதும் இந்த மக்களின் வேண்டுகைகளாக வுள்ளன.

மேலும் தொண்டர் நிறுவன ங்கள் பிரதேசங்களின் அபிவிருத்திகள் தொடர்பாகச் சிந்திக்கும்பொழுது நீண்டகால இலக்குடன் மக்களின் விருப்பு வெறுப்புக்களை இனங்கண்டு நிரந்தரமான பிரதேசத்தின் அபிவிருத்தியை நோக்கி யதாக திட்டமிட வேண்டும் என்பதும் இந்த மக்களின் கோரிக்கையாகவுள்ளது.

தொண்டு நிறுவனத்தினர் தாம் விரும்புகின்ற வகையில் தமது திட்டமிடலுக்கு அமைய தமக் கான உதவிகளை வழங்காது பிரதேசமக்களுக்கு நிரந்தர மான வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்தக்கூடிய திட்டங்கள் தொடர்பாகச் சிந்திக்க வேண்டும்.






ஒரு பிரதேசத்தின் அபிவிரு த்தி நாட்டினுடைய பொருளா தார அபிவிருத்தியில் முக்கிய பங்கு வகிக்கும் என்பதையும் இந்த அபிவிருத்திக்கு அந்த நாட்டினுடைய வளங்களில் இருந்து உச்சப்பயனைப் பெறவேண்டும் என்பதையும் யாருமே மறுக்க முடியாது.

எனவே இப்பிரதேசத்தின் அபிவிருத்திக்கு இந்தப் பிரதேசத்தின் வளங்களை வினைத்திறனான முறையில் பயன்படுத்த வேண்டும். இதன் ஊடாகவே போரால் பாதிப்புக்களை எதிர்கொண்ட இந்தப் பகுதி மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்த முடியும்.

தென்பகுதியில் இருந்து

**யாழரசன்**

வடபகுதிக்கு வருகின்ற தனியார் துறையினரும் வடபகுதியில் இருக்கின்ற தனியார் துறையினரும் மிகஇலகுவாக வடபகுதி இளைஞர், யுவதிகளின்



உழைப்பினையும் மனித வலுவையும் குறைந்த கூலி கொடுத்துச் சுரண்டுகின்றனர் என்ற குற்றச்சாட்டும் உண்டு. மூன்றுபேர் கொண்ட ஒரு குடும்பத்தினுடைய ஆகக் குறைந்த வாழ்கைச் செலவு சுமார் 12000/- ரூபாவாக உள்ளபொழுது மீளக் குடியமர்த்தப்பட்ட பகுதி களில் 400 - 500 ரூபா கொடுத்து மனித வலுவைச் சுரண்டுகின்றனர்.

தனிநபர் ஒருவருடைய நாளாந்த வாழ்க்கைச் செல வைக்கூட ஈடுசெய்ய முடியாத மிகக் குறைந்த கூலிக்கு வடபகுதி இளைஞர், யுவதிகள் தென்பகுதிக்கு அழைத்துச் செல்லப்படு கின்றனர்.

இவ்வாறு அழைத்துச் செல்லப்படுகின்ற இளைஞர், யுவதிகளிடம் தென்பகுதி களில் உள்ள தனியார் உற்பத்தி நிறுவனத்தினர் மிகக்குறைந்த கூலியுடனும் கீழுழைப்புடனும் வேலை வேண்டி வருகின்றனர்.

ஒரு பிரதேசத்தின் அபிவிரு த்தியைத் திட்டமிடுகின்ற பொழுது அப்பிரதேச மக்களின் வறுமை ஒழிப்புக்கான விசேட திட்டங் களையும் முன்வைக்க வேண்டும்.

மீள்குடியமர்த்தப்பட்ட பகுதிகளின் அபிவிருத்தியின் பொழுது மக்களுக்கு நிரந்தரமான வேலைவாய்ப்பு க்களைப் பெற்றுத்தரக்கூடிய விசேட திட்டங்களை செயற்படுத்தி வேலைவாய்ப் புக்களை வழங்க வேண்டும்.

தன்னிறைவுப் பொருளா தாரத்துடனும் மிகுந்த செல்வச் செழிப்புடனும் வாழ்ந்த இந்த மக்களுக்கு ஏற்பட்ட போர்ப் பாதிப்பு க்களை கருத்தில் கொண்டு நிரந்தர வேலை வாய்ப்புக்களை வழங்கக் கூடிய விசேட திட்டங்களை அரச, அரச சார்பற்ற நிறுவனத்தினர் முன்வைப்பார்களா? என்பதைப் பாறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# நாம் வாழும் பூமிக்கு நாமே தீ மூட்டலாமா?



பல்லாயிரம் கோடி ஆண்டுகளாக விண்வெளியில் பயணப்பட்டுக் கொண்டிருக்கும் இப்பூமியோடு, மின்னல் கீற்றைப்போல் தோன்றி மறைந்து கொண்டிருக்கும் மனித சமூகம் முட்டி மோதிக் கொண்டிருக்கிறது. எனினும் பூமியைச் சிதைக்கும் வேலையை இடைவிடாமல் செய்து வருகிறது.

19ஆம் நூற்றாண்டில் வளர்ச்சி என்ற பெயரில் இயற்கை வளங்கள் வரம்புகளின்றி அழிக்கப்பட்டன. மனித குல முன்னேற்றத்துக்கே எனச் சொல்லி அவ்விதமாக அழிக்கப்பட்ட இயற்கையை எவ்வளவு முயன்றும் மனிதர்களால் சீரமைக்க இயலவில்லை.

மனித குல முன்னேற்றத்துக்காக அதை இதையெல்லாம் செய்தோம் என கருத்துக் கூறுவது நியாயமல்ல.

18ஆம் நூற்றாண்டில் தொழிற் புரட்சியின் தொடக்கம்தான் இதற்கு ஆணிவேராக தொடங்கித் தொடர்கிறது. மின் உற்பத்தி நிலையங்கள், தொழிற்சாலைகள், வாகனங்கள் இவற்றின் எண்ணிக்கை பெருகியதன் விளைவாக வளிமண்டலத்தைச் சூடாக்கும் கரியமிலவாயு, மீத்தேன், நைட்ரஸ் ஆக்சைடு போன்ற பசுமை இல்லாத வாயுக்களின் வெளியீடு அதிகரித்துவிட்டது. இச்செயல்களால் புவியின் வெப்பநிலை உயர்ந்ததன் காரணமாக கால நிலையில் பெருமளவு மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன.


இயற்கையால் ஏற்படும் சிற்சில மாற்றங்களைக் காலப்போக்கில் பூமியால் சமநிலைப்படுத்திக் கொள்ள இயலும் என்றுதான் அறிவியல் போதிக்கிறது. ஆனால், செயற்கையான மாற்றங்கள் பூமிக்கன்றி நமக்கே பேரழிவாக அமைகிறது. வடதுருவத்தில் உள்ள பனிப்படலத்தின் அளவானது 1960-ம் ஆண்டில் இருந்ததைவிட இப்போது 10 முதல் 15 விழுக்காடு குறைந்துள்ளது. பனி உறைந்து கிடக்கும் கால அளவும் கணிசமாகக் குறைந்திருக்கிறது.

இமாலயத்தில் பல்வேறு பனிமலைகளின் தன்மைகள் மாறிக் கொண்டே வருகின்றன. சிறுசிறு பனிமுகடுகள் இருந்த இடம் தெரியாமல் கரைந்து கொண்டிருக்கின்றன.

இமயமலையில் ஏற்பட்டுள்ள வெப்ப உயர்வு உலக சராசரியைவிட மிகவும் அதிகம் என பல ஆய்வுகள் கூறுகின்றன. பருவ நிலை மாற்றத்துக்கான ஐக்கிய நாட்டு சபையின் ஆய்வுக்குழு தனது ஆய்வறிக்கையில் இப்போதிருக்கும் வெப்ப உயர்வு தொடருமானால் இமாலயத்தின் பனிமலைகள் உருகி சுருங்கிப் போகும் என்று கணிக்கிறது.

மலையும், பள்ளத்தாக்கும் அபாயமான அளவுக்கு வெப்பமடைந்து வருவதால் வெப்ப உயர்வு அங்குள்ள உயிர்ச்சூழலை அழித்து அரிய வகை உயிரினங்களையும் மறையச்செய்துவிடும்.





கரியமில வாயுவின் அளவு வளிமண்டலத்தில் அஞ்சத் தகுந்த அளவு அதிகரித்து வருகிறது என்ற காலநிலை மாற்றத்துக்கான நாடுகளுக்கு இடையேயான அமைப்பு தெரிவிக்கிறது. 2100ஆம் ஆண்டு புவியின் சராசரி வெப்பநிலையானது ஒரு டிகிரி சென்டிகிரேடு முதல் 5.8 டிகிரி சென்டிகிரேடு வரை அதிகரிக்கலாம் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

2001ஆம் ஆண்டுக்கான காலநிலை மாற்றம் தொடர்பான நாடுகளுக்கிடையேயான குழுவின் தலைவர் ராபர்ட் வாட்சன் பின்வருமாறு கூறினார். புவி சூடாவதால் வெப்பமண்டலப் பகுதிகளில் வேளாண்மை விளைச்சல் குறையும். ஏற்கனவே பட்டினி தாண்டவமாடும் அப்பகுதி மேலும் பாதிக்கப்படும். 1998-க்குப் பிறகு வந்த ஆண்டுகளும் சூடான காலநிலை உள்ள ஆண்டுகளாகவே தொடர்கின்றன. இவ்வகையான புவி வெப்பமடைதல் மாற்றத்துக்கு வளர்ச்சி அடைந்த நாடுகளில் அமெரிக்காவுக்கு மிகப்பெரிய பங்குண்டு. உலக மக்கள் தொகையில் வெறும் 4 வீதமானது அமெரிக்கா. எனினும் 25 சதவீத கரியமில வாயுவை வளிமண்டலத்துக்குக் கவலையின்றிக் கொண்டு சேர்க்கிறது.



இவை யாவும் பேராசை நடவடிக்கையின் வெளிப்பாடாகவே தொடர்கின்றன. இதனால் சுற்றுப்புறச் சூழல் முன்னைவிட விரைவாக மாறிக்கொண்டே இருக்கிறது. இயற்கை வளங்களை அதிகமாக உற்பத்திக்காகப் பயன்படுத்தும்போது நீர் மற்றும் எரிசக்தியின் சமன்பாடு குலைகிறது.

விஞ்ஞானத் தொழில்நுட்பப் புரட்சியானது உற்பத்தியில் இயற்கை வளங்களைப் பயன்படுத்துவதைப் பெரிதும் ஊக்கப்படுத்தி அதிகரிக்கச் செய்கிறது. இன்றுள்ள வேகத்தில் இவ்விதமாகப் பயன்படுத்தும்போது இயற்கை வளங்களின் இருப்புகள் தீர்ந்து போகும். தீவிர உற்பத்தியின் நடவடிக்கைகள் சுற்றுச்சூழலை அசுத்தமாக்குகிறது. அழிக்கிறது.

நவீன உற்பத்தியின் தீவிர விளைவுகளை இயற்கையால் தானாகவே சமாளிக்க முடிவதில்லை. எனவே, சுற்றுச் சூழலைப் பாதுகாக்க ஆகும் செலவுகள் விரைவாகக் கூடி வருகின்றன. பூமியின் இயற்கை வளங்களின் மீதான கட்டற்ற ஆளுமையை ஏற்படுத்திக் கொண்டு, விவேகமற்று செயல்பட்டதன் விளைவு இது.

இந்த உலகின் தாவரங்களில் மூன்றில் இரண்டு பங்கு காடுகளில் இருக்கின்றன. ஒவ்வோராண்டும் பல லட்சம் ஹெக்டர் காடுகள் அழிக்கப்படுகின்றன. அவ்விதம் அழிக்கப்படும் காடுகள் பனாமா நாட்டின் நிலப்பரப்புக்குச் சமம். காடு அழிப்பு கரியமில வாயு அதிகரிக்கக் காரணமாகிறது.

நவீன தொழில் வளர்ச்சிகள், நவீன வாழ்க்கைச் சிக்கல்களை வடிவமைக்க மூலகாரணமாகிவிட்டன. மனித இன வளர்ச்சிக்கான செயல்கள் எனச் சொல்லப்பட்டவை பூமியைக் கெடுத்து இங்கு வாழும் உயிர்களின் அனைத்து விதமான உரிமைகளையும் புறந்தள்ளிவிட்டன.

சுற்றுச்சூழல் என்பது உலகில் உள்ள உயிரற்ற பொருள்கள் (நீர், காற்று, நிலம்) இன்னும் பிற உயிரினங்களின் இயக்கத்தின் தொகுப்பாகும். இந்த இரண்டும் அவற்றின் உட்கூறுகளில் நடைபெறும் மாற்றம் ஒரு சுழற்சி இயக்கப்போக்கில் மற்ற அனைத்தையும் மாற்றியமைக்கின்றன.

சுற்றுச்சூழலின் தாக்கம் தனித்தொரு மூலையில் நடந்தாலும் அது கடுமையான பாதிப்பை அந்தப் பகுதியின் எல்லைகளையெல்லாம், தாண்டி உருவாக்குகிறது என்ற உண்மையைப் புரிந்து கொள்ளாமல் இதே வேகத்தில் பயணம் செய்வோமானால் இருக்கிற ஒரே பூமியும் நம்மைக் கைவிட்டுவிடும்.

உலகின் நன்னீர் இருப்பு நாளுக்குள் குறைந்து, நிலத்தடி நீர் பாதாளத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. தொழிற்சாலைக் கழிவு, வெளியிடப்படும் புகை ஆகியவற்றின் கைங்கரியத்தால் உலகமே மூச்சுவிடத் திணறி வருகிறது.

புவியைக் காப்பாற்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்புக் கண்ணிகளில் நாமும் ஒரு கண்ணியாக மாறுவதுதான் நாம் செய்ய வேண்டிய முதல் வேலை.

**மூலம்: இணையம்**

இதுவரை கடந்து சென்ற காலங்களில் இன்றுள்ள காலம்தான் மிக மோசமான விளைவுகளை உமிழ்கிற காலமாக இருக்கிறது.

மனிதனும் இயற்கையின் ஓர் அங்கம் என உணரும் நிலைதான் பிரச்னைகளைக் கொஞ்சமேனும் தீர்ப்பதற்கு உதவும். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் சுற்றுச் சூழல் காக்கும் தொலைநோக்கு முயற்சிகளில் இறங்க வேண்டும். அரசுகளுக்கும் சுற்றுச்சூழல் காக்கும் செயல்பாடுகளில் அதிகம் பங்கிருக்கிறது.

# தமிழ்நாதம்

Thamil Naatham

ஜூன் மாதம் 26ஆம் திகதி செவ்வாய்க்கிழமை


## வருகிறார் இந்திய பாதுகாப்பு ஆலோசகர்

இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் நாளை மறுதினம் கொழும்பு வருகிறார். அவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடனும், பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுடனும் தனித் தனியாகச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை நடத்துவாரென ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதனால் இரண்டு நாடுகளும் சம்பந்தப்பட்ட விடயங்கள் மட்டுமல்ல, தேசிய-சர்வதேச விவகாரங்கள் தொடர்பாகவும் பேச்சுவார்த்தைகளின்போது கலந்துரையாடப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியா சுமார் 110 கோடி மக்களைக் கொண்ட நாடு. இலங்கை இரண்டு கோடிக்கும் சற்று அதிகமான மக்கள் தொகையைக் கொண்ட நாடு. இரு நாடுகளினதும் நிலப்பரப்பை ஒப்புநோக்கிப் பார்த்தால் சுமார் ஆறு இந்திய மாநலங்கள் அல்லது யூனியன் பிரதேசங்களே இலங்கையை விடச் சிறிய வையாகும். இலங்கையிலிருந்து சுமார் இருபது கடல் மைல்களுக்கு அப்பால் இந்தியாவின் தென்கோடிக் கரை உள்ளது. இந்தியாவின் தமிழக மாநிலத்தில் சுமார் ஆறரைக் கோடி தமிழ் மக்கள் வாழ்கிறார்கள். இலங்கையில் கிட்டத்தட்ட 35 அல்லது 40 இலட்சம் தமிழ் மக்களே வாழ்கிறார்கள், இருந்தபோதிலும் தமிழகத் தமிழ் மக்களுக்கும் இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கும் இடையில் வரலாற்று ரீதியான அரசியல், கலாசார, பண்பாட்டுத் தொடர்புகள் இருந்து வந்திருக்கின்றன.

இலங்கை - இந்திய உறவுகளில் அவ்வப்போது ஏற்ற இறக்கங்கள் ஏற்பட்டதுமுண்டு. பொதுவாக எந்தவொரு நாட்டினதும் தேசியக் கொள்கையின் விஸ்தரிப்பாகவே வெளிநாட்டுக் கொள்கைகள் அமைவதுண்டு. சோவியத் யூனியனுக்கும் அமெரிக்காவுக்குமிடையிலான பனிப்போர் உச்சம் பெற்றிருந்த காலப் பகுதியில் இலங்கை - இந்திய உறவுகள் சீர்குலைந்திருந்தன. 1977இல் ஆட்சிக்கு வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் அரசாங்கம் அமெரிக்க சார்பு நிலைப்பாட்டை எடுத்திருந்தது. வொய்ஸ் ஒப் அமெரிக்க நிறுவனத்தை இலங்கையில் அமைப்பதற்கான பேரப் பேச்சுகள் இடம்பெற்றன. திருகோணமலை எண்ணெய்த் தாங்கிகளை வெளிநாட்டுக்குக் கையளிக்கும் முயற்சிகளும் இடம்பெற்றன. இலங்கை, அமெரிக்காவின் செல்வாக்குப் பிராந்தியமாக இருந்த அக்கால கட்டத்தில், இந்தியா, சோவியத் யூனியனின் செல்வாக்குப் பிராந்தியமாகத் திகழ்ந்தது. இந்தியாவுக்கும் சோவியத் யூனியனுக்குமிடையில் இராணுவ ஒப்பந்தம் கூட இருந்தது. இதேவேளை இந்தியாவின் பரம எதிரியாகத் திகழ்ந்த பாகிஸ்தானுக்கு அமெரிக்காவுடன் இராணுவ ஒப்பந்தம் இருந்தது.

இந்தக் காலகட்டத்தில்தான் 1987ஆம் ஆண்டு 'வடமராட்சி ஒப்பரேசன்' இராணுவ நடவடிக்கையின்போது இந்திய விமானங்கள் யாழ்ப்பாண எல்லைக்குள் அத்துமீறிப் பறந்து வந்து சீனியும், பருப்பும் போட்டன. இந்திய 'றோ' உளவுப் படை தமிழீழக் குழுக்களுக்கு ஆயுதப் பயிற்சி அளித்ததும் இதே காலப்பகுதிகளில்தான் இலங்கையில் தனித்தமிழ்நாடு உருவாவதை இந்தியா என்றுமே விரும்பாத போதிலும் இவ்வாறான நடவடிக்கைகளை எடுத்தமைக்குக் காரணங்கள் இருக்கின்றன. முன்னாள் இந்தியப் பிரதமர்களான இந்திரா காந்தியும், ராஜீவ் காந்தியும் இலங்கையில் நாடு பிரிவினையை வலுவாக எதிர்ப்பதாக வெளிப்படையாகவே தெரிவித்திருக்கிறார்கள். இலங்கையில் தமிழ் இராஜ்யம் உருவானால் கோடிக்கணக்கான தமிழ் மக்களைக் கொண்ட தமிழ்நாட்டில் அது பாரிய பாதிப்பை ஏற்படுத்தும் என்பது இந்தியாவுக்கு ஒன்றும் தெரியாததல்ல.

1983இல் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனசங்காரத்தையடுத்து இந்தியா, இலங்கையை ஆக்கிரமிக்கப் போகிறது என்ற அச்சம் கூட அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவுக்கு ஏற்பட்டிருந்தது.

ஒரு நாட்டின் அரசியல், பொருளாதார சமூக நிலைமைகளுக்கு ஏற்பவே பிரதான முரண்பாடுகளும் மாற்றமடைகின்றன.சுதந்திரக் கட்சியின் ஆட்சிக் காலங்களில் இலங்கை - இந்திய உறவுகள் நெருக்கமாகவும், இறுக்கமாகவும் இருந்திருக்கின்றன. ஜே.ஆரின் ஆட்சிக் காலத்திலேயே இரு நாடுகளின் உறவு நிலைகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தன. இந்திரா காந்திக்கும் ஜே.ஆருக்கும் இடையில் தனிப்பட்ட குரோதங்கள் கூட நிலவின. "பசுவும் கன்றுக் குட்டியும்" என்று இந்திரா காந்தியையும் அவரது புதல்வர் ராஜிவ் காந்தியையும் ஜே.ஆர். கேலி செய்திருக்கிறார். "கிழட்டு நரி" என்று ஜே.ஆரை இந்திரா காந்தி வர்ணித்தாரென்று கூடக் கூறப்படுகிறது.

இந்தியா எமது அண்டை நாடு. எமது இரு நாடுகளுக்கு மிடையில் வலுவான உறவுகள் பேணப்பட வேண்டும் இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை போன்று பல்வேறு பிரச்சினைகள் இரு நாடுகளுக்குமிடையில் உள்ளன. நேச மனப்பான்மையோடு இரு நாட்டுத் தலைவர்களும் கலந்து பேசிப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டும்.


இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

தொலைபேசி: 021-2219506, பக்ஸ்: 021-2219505

e-mail: tnaatham@yahoo.com


# இலங்கையில் இந்திய ஈடுபாடு அல்லது தலையீடு

1983 ஜூலையில் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனசங்காரத்தையடுத்து ஜூலை 26ஆம் திகதி இந்திய லோக்சபையில் கடும் கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டன. இதன்பின்னர் ஆகஸ்ட் 10ஆம் திகதிக்கிடையில் திருமதி இந்திரா காந்தி, மூன்று தடவைகள் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு ஜனாதிபதி ஜெயவ ர்த்தனவுடன் பேசினார். இலங் கைப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக இருநாட்டு அதிகாரிகள் மட்டத்திலான பேச்சுவார்த்தைகளும் இடம்பெற்றன. இவை தொடர்பாக இந்தியப் பாராளுமன்றத்தில் ஆகஸ்ட் மாதம் பிரதமர் இந்திராகாந்தி விளக்குகையில் கீழ்க்கண்டவாறு கூறினார்.

"இலங்கை அரசின் யோசனைகள் தமிழ் சிறுபான்மையின மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யப் போவதில்லை என்ற எனது கருத்தை நான் வெளியிட்டேன். ஐக்கிய இலங்கையென்ற வரையறைக்குள், நாட்டின் விவகாரங்களில் தமிழ்ச் சிறுபான்மையினருக்கு உரிய பங்கை அளிக்கக்கூடிய எந்தவித யோசனைகளையும் கவனத்தில் கொள்ள இலங்கை அரசாங்கம் விரும்புவதாகத் திரு.ஜெயவர்த்தன என்னிடம் கூறினார். இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழ் சமூகத்துக்குமிடையில் பரந்த அடிப்படையிலான பேச்சுவார்த்தை பயன்மிக்கதாக அமையுமென்றும், பேச்சுவார்த்தை மேசையிலேயே தீர்வொன்று காணப்பட வேண்டு மென்றும் நான் எனது கருத்தைக் கூறினேன். தேவைப்படும் எந்த உதவியையும் வழங்க இந்தியா தயாராக இருப்பதாகவும் சொன்னேன்"

இந்தப் பின்புலத்துடன் இலங்கையின் வடபகுதி எல்லைக்குள் இந்திய விமானங்கள் அத்துமீறி நுழைந்து சீனியும், பருப்பும் போட்ட சங்கதியைப் பார்க்க வேண்டும். வடபகுதி மீது பொருளாதாரத் தடையை ஜனாதிபதி ஜெயவர்த்தனா அமுல்படுத்திய போதுதான் இந்திய விமானங்கள் யாழ்ப்பாணத்தில் பொருட்களைப் போட்டன. இது 1987 ஜூன் 4ஆம் திகதி நடைபெற்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களான அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், சம்பந்தன் ஆகியோர் 1983 ஜூலை இனசங்காரத்தின் பின்னர், ஆகஸ்ட் மாதம் 14ஆம் திகதி பிரதமர் இந்திரா காந்தியைச் சந்தித்து நிலைமைகளை விளக்கினர். மறுநாள் 15ஆம் திகதி புதுடில்லி செங்கோட்டையில் நடைபெற்ற இந்திய சுதந்திரதின விழாவில் விசேட அதிதியாக அமிர்தலிங்கம் அழைக்கப்பட்டார். அத்துடன் அவருக்கு மேடையில் விசேடமாக ஓர் இடமும் ஒதுக்கப்பட்டிருந்தது. இது அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவுக்கு ஆத்திரமூட்டியது. ஜூலைக் குழப்பத்தை இனசங்காரமென்றே இந்தி ராகாந்தி விபரித்தார். 1987 ஜூலை இனசங்காரத்தின் சூத்திரதாரி ஜே.ஆர்.தான் என்பது மறுக் கமுடியாத உண்மை.


இந்தஇனசங்காரத்தோடு இந்திய - இலங்கை உறவில் விரிசல்கள் அதிகரித்தமைக்குப் பல தேசிய சர்வதேசக் காரணங்கள் இருக்கின்றன. இந்தியாவுக்கு, சோவியத் யூனியனுடன் இராணுவ ஒப்பந்தங்களோடு நெருக்கமான தொடர்புகளும் இருந்தன. இந்தியாவோடு மோதல்களில் ஈடுபட்ட பாகிஸ்தானுடன் அமெரிக்காவுக்கு இராணுவ ஒப்பந்தம் உட்பட நெருங்கிய தொடர்புகள் இருந்தன. அமெரிக்காவும் சோவியத் யூனியனுக்குமிடையில் பனிப்போர் நிலவிய காலமது. சோவியத் சார்பு நாடாக இந்தியாவும், அமெரிக்க மற்றும் இஸ்ரேலுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டதாக அப்போதைய ஜே.ஆர்.அரசும் விளங்கியது. தமிழக மக்களுக்கும் இலங்கை வாழ் தமிழ் மக்களுக்குமிடையில் நெருங்கிய இன, மத, மொழி மற்றும் கலாசாரத் தொடர்புகள் இருந்ததால் தமிழக மக்களின் அழுத்தங்களுக்க இந்திய மத்திய அரசு ஈடுகொடுக்க வேண்டியிருந்தது. தனிப்பட்ட ரீதியிலும் ஜே.ஆர். ஜெயவர்த்தனவும் இந்திரா காந்தியும் ஒருவரை யொருவர் கேலி செய்யுமளவுக்கு நிலைமை மோசமாகியிருந்தது. "பசுவும் கன்றும்" என்று இந்திரா காந்தியையும் ராஜீவ் காந்தியையும் இணைத்து ஜே.ஆர். கேலி செய்தார். ஜே.ஆரைக் "கிழட்டு நரி" என்று வர்ணித்தார் இந்திரா காந்தி.

1984ஆம் ஆண்டு வாக்கில்தான் இந்தியா தமிழ் ஆயுதக் குழுக்க ளுக்குப் பயிற்சியும் நிதியுதவியும் வழங்கியது. இருந்தபோதிலும் இலங்கை பிளவுபடுவதற்கு இந்தியா அனுமதிக்காதென்று இந்திரா காந்தி திட்டவட்டமாகவே தெரிவித்திருந்தார்.

ஜூலை இன சங்காரத்தை இலங்கை அரசாங்கமே கட்டவிழ்த்து விட்டதெனக் கண்டனம் தெரிவித்து சிறுபான்மையினருக்கு எதிரான பாரபட்சங்களைத் தடுத்தல் மற்றும் பாதுகாப்புக்கான ஐ.நா. உபகுழுவுக்கு இந்தியா பிரேரணையொன்றினை முன்வைத்தது. 1983ஆம் ஆண்டிலேயே இந்தப் பிரேரணை முன்வைக்கப்பட்டது.

இதனையடுத்து புலம் பெயர்வாழ் தமிழ்க்குழுக்கள் உற்சா கமடைந்தன. 1985ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஜெனீவாவில் இடம் பெற்ற ஐ.நா.மனித உரிமைகள் மாநாட்டில் இலங்கையைக் கண்டிக்கும் தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

ஆர்ஜன்டீனாவே இந்தப் பிரேரணையை முன்வைத்தது. போக்லாண்ட் விவகாரம் சபையில் முன்வைக்கப்பட்டபோது இலங்கை அரசு ஆர்ஜன்டீனாவுக்கு எதிராக வாக்களித்திருந்தது. இந்தப் பிரச்சினையைப் பயன்படுத்திய சில புலம்பெயர்வாழ் தமிழ்க்குழுக்கள் லத்தீன் அமெரிக்க நாடான ஆர்ஜன்டீனாவை இலங்கைக்கு எதிராக மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளை முன்வைக்கப் பயன்படுத்தியது.



இந்தக் குற்றச்சாட்டுப் பிரேரணைக்கு எதிராகவோ, ஆதரவாகவோ வாக்களிக்காமல் இந்தியா நடுநிலை வகித்தது. இதனால் இந்தப் பிரேரணை தோற்கடிக்கப்பட்டது.

இலங்கையுடன் நல்லுறவுகளைப் பேண வேண்டுமென்ற நோக்கத்தில் இந்தியா நடுநிலை வகித்ததாக அரசியல் நோக்கர்கள் கூறினர். அத்துடன் இலங்கை அரசையும் தமிழர் தரப்புகளையும் சமாதானப் பேச்சு வார்த்தையில் ஈடுபடுத்துவதற்கான முன்தயாரிப்பு முயற்சிகளில் இந்தியா ஈடுபட்டிருந்தமையினாலும் நடுநிலை வகித்திருக்கலாம்.

1987 ஜூலை 29ஆம் திகதி இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கும் இடையிலான ஒப்பந்தம் கைச்சாத்தானது. மறுநாள் 30ஆம் திகதி ராஜீவ் காந்தி புதுடில்லி திரும்பினார். அடுத்த நாள் 31ஆம் திகதி இந்த ஒப்பந்தம் குறித்து ராஜீவ் காந்தி இந்தியப் பாராளுமன்றத்தில் விளக்குகையில் கீழ்க்கண்டவாறு கூறினார்.

"இலங்கை இனப்பிரச்சினைக்கு நீடித்ததொரு தீர்வு காண்பதற்கான வரைமுறை யொன்றினை நாம் ஏற்படுத்தியுள்ளோம். தமிழர்களின் போராட்டத்தைத் தீவிரப்படுத்திய அடிப்படை அபிலாசைகளை ஒப்பந்தம் ஈடுசெய்கிறது. அதாவது தனித்துவமான இனச் சமூகமொன்று அங்கீகாரம் பெறுவதற்கான அவர்களின் விருப்பு, தமது அரசியல் எதிர்காலத்தை நிர்வகிப்பதற்கான அரசியல் சுயாட்சி, இந்த இலக்கை எட்டுவதற்குத் தேவையான அரச அதிகாரத் துக்கான உகந்த அதிகாரப் பகிர்வு, இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழர்களின் வரலாற்று வாழ்விடங்களை அங்கீகரித்தல், இலங்கையின் உத்தியோகபூர்வ மொழியாகத் தமிழையும் ஏற்று நிலைப்படுத்துதல் ஆகிய அடிப்படை அபிலாசைகளை இந்த ஒப்பந்தம் ஈடுசெய்கிறது.

# "மாயன்" பற்றிய சில தகவல்கள்!

2012 இல் உலகம் அழியும் என மயன் கலண்டர் சொல்வதாக ஒரு கதை உலாவுவதற்குக் காரணம் மயன் நாகரீகம் பற்றிய ஆராய்ச்சிக் குறிப்புகளைக் கொண்டே "2012" என்ற சினிமாப் படத்தை இயக்கியுள்ளார்கள். உலக அழிவைப் பற்றியே அந்தப் படம் காட்டுகிறது.

கிமு 2000 ஆண்டுகளுக்கு முன்பு தென் அமெரிக்காவில் மாயா என்ற ஓர் இனம் இருந்தது. 3500 ஆண்டுகள் வாழ்ந்த இந்த இனமானது கடந்த 15-ம் நூற்றாண்டில் அழிந்தது. இந்த இனத்தினர் விஞ்ஞானிகளைவிடவும் புத்திசாலியாக வாழ்ந்ததாக சரித்திரச் சான்றுகள் கூறுகின்றன. மயன் இனத்தவர் கட்டிடக் கலை, வான சாஸ்திரம், ஜோதிடம், அமானுஷ்யம், கணித சூத்திரம் போன்ற அனைத்துக் கலைகளிலும் தேர்ச்சிபெற்ற வித்தகர்களாக இருந்தனர்.



இன்றைக்கு இருப்பது போன்ற ஒரு நாட்காட்டியினை அவர்களும் வைத்திருந்தனர். இந்தக் காலண்டர் கிமு 313ல் தொடங்கியது. இதன்படி டிசம்பர் 2012ன் 21ம் தேதியுடன் முடிவடைகிறது. அதனால் உலகம் அந்தத் தேதியுடன் முடிவடையும் என்று அவர்கள் ஞானதிருஷ்டியால் உணர்ந்து முற்றுப்புள்ளி வைத்ததாக ஒரு நம்பிக்கை இருக்கிறது. அதாவது சூரிய மண்டலத்திற்கு 7நாள் என்பது பூமியைப் பொறுத்தவரை 25,625 வருடங்களாம். இதனை மயன் காலண்டர் 5 கால கட்டங்களாகப் பிரிக்கிறது. ஒவ்வொரு கால கட்டமும் 5125 வருடங்களைக் கொண்டிருக்கிறது. இதன்படி 4 கால கட்டங்கள் முடிவடைந்து இப்போது 5வது காலகட்டம் நடந்துகொண்டிருக்கிறது. அந்த நாட்காட்டி 21.12.2012ல் முடிவடைகிறது. அதன்படி 21.12.2012ல் உலகு அழியும் என்று ஒரு சாரார் நம்புகிறார்கள்.

நாட்காட்டி முடிவடைந்ததே தவிர 2012 ல் உலகம் அழியும் என்று மயன் இனம் எங்கும் சொல்லவில்லை. அவர்கள் தனது இனத்தின் அழிவைப் பற்றியே கூடச் சொல்லவில்லை. அது அவர்களின் கணக்குபடியான யுக மாற்றத்திற்க்காகவே இருக்கும். இயற்கைப் பேரழிவுகள் உலகம் தொடங்கிய காலந்தொட்டு நிகழ்ந்தவண்ணமே இருக்கின்றன. சுனாமியும் கூட அப்படி ஒன்றுதான். மக்களின் இந்த பயத்தை சினிமா உலகம் பயன்படுத்திக் கொண்டது.

**செய்தி**

கவுதமாலா நாட்டில் சுமார் 1600 ஆண்டுகள் பழமையான மயன் மன்னரின் கல்லறை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மயன் நாகரிகம், மத்திய மற்றும் வடக்கு அமெரிக்க பகுதிகளில் பரவியிருந்தது. மயன் அரசர்கள், மக்களால் கடவுள்போல கருதப் பட்டனர். கிபி 250 முதல் 900 வரை இவர்களது காலம் ஆகும். பிரவுன் பல்கலைக்கழகத்தை சேர்ந்த ஸ்டீபன் ஹூஸ்டன் தலைமையிலான அகழ்வாராய்ச்சியாளர்கள், கவுதமாலா நாட்டில் அகழ்வாராய்ச்சி மேற்கொண்டனர்.

அப்போது 1600 ஆண்டு பழமையான, மயன் மன்னரின் கல்லறை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதிலிருந்து 6 குழந்தைகளின் எலும்புக்கூடுகளும், பீங்கான், துணிகள் உள்ளிட்ட ஏராளமான பொருட்களும் கண்டெடுக்கப் பட்டுள்ளன. இந்த பொருட்கள், மயன் மன்னர் பயன்படுத்தியதாக இருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

குழந்தைகள், மயன் அரசன் இறந்தபோது அவனுக்காக பலி கொடுக்கப்பட்டவர்களாக இருக்கலாம் என கூறப்படுகிறது. இது, கிபி 350 - 400க்கு இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த மயன் மன்னரின் கல்லறையாக இருக்கலாம் என தெரிகிறது. கல்லறையில் குடைந்தும், செதுக்கியும் உருவாக்கப்பட்ட சிற்பங்கள் ஏராளமாக உள்ளன. கல்லறையில் இருந்து எடுக்கப்பட்ட பொருட்கள் குறித்து ஆராய்ச்சி நடந்து வருகிறது. இதன் மூலம் மேலும் பல தகவல்கள் தெரியவரும் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்..

**மயன் கலாச்சாரம்**

ஐரோப்பிய ஏகாதிபத்திய துப்பாக்கிகளுக்குத் தப்பிய வட மற்றும் தென் அமெரிக்க பூர்வகுடியினங்கள் வெகு சிலவே. இம்மக்களின் கலாச்சாரமும் வரலாறும் நான்கைந்து நூற்றாண்டுகளில் இருந்த இடம் தெரியாத அளவிற்கு மனிதாபிமானமற்ற முறையில் அழிக்கப்பட்டுவிட்டன.

"த மோட்டார் சைக்கிள் டயரி" எனும் படத்தில் "மயன்" அமெரிக்கப் பூர்வகுடியினரின் அழிந்துபோன பிரம்மாண்டமான நகரங்களையும் பெரும் பெரும் கட்டிடங்களையும் காணலாம்.

தற்காலத்தில் இருக்கும் மெக்சிகோ, குவாதிமாலா, ஹூந்துராஸ் போன்ற நாடுகள் விரவியிருக்கும் மத்திய அமெரிக்கப் பகுதிகளில் கிமு 2600 வாக்கில் மயன் நாகரிகம் தோன்றியது. மயன் இனத்தவர் கணிதம், எழுத்துமுறை, வானியல் போன்ற துறைகளிலெல்லாம் மேம்பட்டிருந்தனர். மிக விசாலமான, நுணுக்கமான கட்டிடக்கலை மயன் இனத்தவரின் சிறப்பாகும். கி.மு.150 வாக்கில் மயன் நாகரிகம் உச்சத்தை அடைந்தது. அதன்பின் பல்வேறு காரணங்களால் அது சீரழியத் தொடங்கியது.

ஸ்பெயின் நாட்டவர் குடியேற்றம், விசித்திரமான மூட நம்பிக்கைகள், பங்காளிச் சண்டைகள் மற்றும் முறையற்ற விவசாயம் போன்றவை மயன் கலாச்சார பேரழிவிற்கு காரணிகளாக இருக்கலாம் என நிபுணர்கள் கருதுகிறார்கள். தற்காலத்தில் சுமார் 6 இலட்சம் மயன் இனத்தவர் மெக்சிகோ, குவாத்திமாலா போன்ற நாடுகளில் இருப்பதாக அறியப் படுகிறது.



**மயன் கட்டிடக் கலை**

அமெரிக்காவின் பூர்வ குடிகளில் கட்டிடக் கலையில் மிகச் சிறந்து விளங்கியவர்கள் மயன்கள் என்று சொல்லப்படுகிறது. நவீன வரலாறு தொல்லியல் மற்றும் சமூகவியல் ஆராய்ச்சியாளர் களுக்கு மயன் காலாச்சாரத்தில் ஆர்வம் ஏற்பட்டதில் சிதிலமடைந்த மயன் நகரங்களும் கட்டிடங்களும் பெரும் பங்காற்றியிருக்கின்றன.

ஏனைய தொல் நாகரிகங்களைப் போல் அல்லாமல், மயன்கள் இரும்பு போன்ற உலோகங்கள் மற்றும் சக்கரங்களைப் பயன் படுத்தாமலயே மிகப் பெரிய மத சடங்குகளுக்கான இடங்களையும், பிரமிடுகளையும் இருப்பிடங்களையும் கட்டியுள்ளனர். மிக நுனுக்கமான வேலைப்பாடுகள் நிறைந்த சிற்பங்களையும் அவர்களின் கலாச்சார சின்னங்களாகக் காணலாம்.

> கிமு 2000 ஆண்டுகளுக்கு முன்பு தென் அமெரிக்காவில் மாயா என்ற ஓர் இனம் இருந்தது. 3500 ஆண்டுகள் வாழ்ந்த இந்த இனமானது கடந்த 15-ம் நூற்றாண்டில் அழிந்தது. இந்த இனத்தினர் விஞ்ஞானிகளைவிடவும் புத்திசாலியாக வாழ்ந்ததாக சரித்திரச் சான்றுகள் கூறுகின்றன. மயன் இனத்தவர் கட்டிடக் கலை, வான சாஸ்திரம், ஜோதிடம், அமானுஷ்யம், கணித சூத்திரம் போன்ற அனைத்துக் கலைகளிலும் தேர்ச்சிபெற்ற வித்தகர்களாக இருந்தனர்.

**மயன் வானியல்**

மற்றைய பெரு நாகரிகங்களைப் போல் மயன்களும் வானயலில் வல்லமை பெற்றிருந்தனர். அவர்கள் சூரியன், சந்திரன், புதன் மற்றும் சுக்கிரன் போன்றவற்றின் சுழற்சி முறைகளை வெகுவாக அவதானித்து ஆவணப்படுத்தி யிருந்தனர். சந்திர மற்றும் சூரிய கிரகணங்களை முன்கூட்டியே கணக்கிட்டுத் தீர்மானிக்கும் அளவிற்கு திறன் பெற்றிருந்தனர். சடங்குகளில் அதீத நம்பிக்கை பெற்றிருந்த மயன்கள் வானியல் நிகழ்ச்சிகளை அடியொட்டியே சட்ங்குகளை நடத்தினர். ட்ரெடெக்ஸ் எனப்படும் மயன் பஞ்சாங்கக் குறிப்பேட்டிலிருந்து இதற்கான ஆதாரங்கள் பெறப்படுகின்றன.

**மயன் நம்பிக்கைகள்:**

ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய நாகரிகம் என்பதற்கேற்ப மயன்கள் பல்வேறு வினோதமான மத சடங்குகளையும் நம்பிக்கைகளையும் கொண்டிருந்தனர். ஒவ்வொரு ஆண்டும் ஒரு முறை சிற்றரசர்கள் அவர்களுடைய கடவுளிடம் பேசி ஆலோசனை பெறும் ஒரு சடங்கை நடத்துவர். இச் சடங்கின் போது அரசன் தன் ஆண்குறியை கீறி அதில் வரும் இரத்தத்தை எடுத்து கூடியிருக்கும் மக்களிடம் காணிபித்து பின் கடவுளிடம் பேசி அதன் அலோசனையை மக்களிடம் கூறுவானாம். அதன் பின் அவனது அடிமைகளில் ஒருவரை பலியிடுவார்களாம். அந்த அடிமைகள் பெரும்பாலும் போரில் தோற்ற அண்டை நாட்டு அரசர்களாக இருப்பார்களாம்.

**இலக்கியம்:**

ஹைரோகிளிப்ஸ் என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் பட எழுத்து முறையை மயன்கள் பயன்படுத்தினர். கல்வெட்டுக்கள் சிற்பங்கள் போன்றவற்றில் எழுதியது மட்டுமில்லாமல், ஒருவகையான புத்தகம் தயாரிக்கும் முறையையும் அவர்கள் பயன்படுத்தி வந்தனர். இவ்வாறு பல புத்தகங்களை அவர்கள் எழுதியிருக்கலாம் எனக் கருதப் படுகிறது. ஸ்பானிய ஏகதிபத்தியத்துடன் வந்த அடிப்படைவாத கிறிஸ்தவர்கள் பல மயன் நூல்களை அழித்துவிட்டார்கள். இதில் தப்பியவை நான்கே நான்கு நூல்கள் தாம்.

**வீழ்ச்சி**

இவ்வளவு வளத்துடன் ஓங்கி செழித்து வளர்ந்த நாகரிகம் ஏறக்குறைய புல் பூண்டில்லாமல் போய்விட்டது. அதற்கான காரணத்தை அறிஞர்கள் இன்னும் அறுதியிட்டுக் கூறவில்லை. இவையாக இருக்கலாம் எனக். கருதப்படும் சிலவற்றில் முக்கியமானது, அண்டை நாடுகளுக்கிடையே அடிக்கடி ஏற்பட்ட பங்காளிச் சண்டைகள், காடுகளை அழித்து அவர்கள் நடத்திய விவசாயம் வெகு காலம் தாக்குப் பிடிக்கவில்லை, ஸ்பானிய குடியேற்றங்களுடன் வந்த அம்மை மற்றும் காலரா போன்ற வியாதிகள் பெருவாரியான மயன்களை மிகக் குறுகிய காலத்தில் அழித்திருக்கலாம். ஆனால் இவையெல்லாம் தாண்டி சுமார் 6 இலட்சம் மயன்கள் தற்காலத்திலும் மெக்ஸிகோ, குவதிமாலா போன்ற நாடுகளில் வசிக்கிறார்கள். ஆனால் அவர்களின் நிலைமை பின்தங்கிய நிலையிலே உள்ளது.

இணையத் தகவல் தொகுப்பு

# சிறுவர் போராளிகளும் உளவியல் பிரச்சினைகளும்

பேராசிரியர்.தயா சோமசுந்தரம் மற்றும் கலாநிதி.எம்.ஜயதுங்க

சிறுவர்களை இராணுவ நோக்கங்களுக்காக ஆட்சேர்ப்பு செய்வது மற்றும் எதிர்த்து போராட அவர்களை முன்னிலையில் வெளிப்படுத்துவதும், அவர்களின் அறிவாற்றல் மேம்பாட்டுக்கு சிக்கலாகிறது. சிறுவர்களுக்கு போதனை செய்து அவர்களை கொலைகள், அழிப்புகள், மற்றும் சித்திரவதைபோன்ற செயல்களை செய்யும்படி கட்டாயப்படுத்துவதனால் அவர்களின் அறிவாற்றல் அமைப்புகள் ஒரு நோயியல் மாற்றத்துக்கு திரும்புகின்றன. பிரச்சினைகளை தீர்க்கும் பட்டு விடுகின்றன. இந்தச் சிறுவர்களுக்கு எழுதவும் மற்றும் வாசிக்கவும் மட்டுப்படுத்தப்பட்ட நேரமே கிடைப்பதால் அவர்கள் கலாச்சார கருவிகளை இழந்து விட்டிருக்கிறார்கள். அவர்களது அகராதி பெரும்பாலும், யுத்தம் மற்றும் வன்முறை என்பனவற்றை அடிப்படையாக கொண்ட பதங்களையே கொண்டிருக்கின்றது. படைக் கலைப்பு செய்யப்பட்ட சிறுவர்களுக்கு வரையறுக்கப்பட்ட சொல்லகராதி மற்றும் மொழித் திறமை கிடைத்திருக்கிறது. வரையறுக்கப்பட்ட சொல்லகராதி அறிவுடன் இணைந்த பரந்த அளவிலான கற்கைக்கான நேரத்தை அவர்கள் தவறவிட்டிருந்தார்கள், மற்றும் துரதிருதிடவசமாக அவர்கள் முக்கியமான நேரத்தை போராளிகளுடன் கழித்திருந்தனர். எழுதுவதற்கும், படிப்பதற்கும், மற்றும் கணக்கு போடுவதற்கும் பதிலாக அவர்களுக்கு எப்படி சுடுவது மற்றும் கொல்வது என்றே போதிக்கப்பட்டது.

சில சிறுவர்களுக்கு கவனத்தை செலுத்துவது பிரச்சினையாக உள்ளது. அவர்களுக்கு ஏற்படும் ஞாபக சிரமங்களுக்கு அவர்கள் அனுபவிக்கும் உளவியல் நெருக்கடிகள் காரணமாக இருக்கலாம். வகுப்பறைகளில் பாடங்களைக் கற்பதற்கு அவர்கள் தொடர்ந்து போராடி வருகிறார்கள். சில பாடசாலைகளில் அவர்களின் கடந்தகால யுத்த அனுபவங்களின் வரலாற்றை காரணங்காட்டி சக மாணவர்கள் அவர்களை நிராகரிப்பது பதிவு செய்யப்பட்டிருக்கிறது. முன்னாள் சிறுவர் போராளிகளை சமூகங்கள் முற்றாக ஏற்றுக் கொண்டுவிடவில்லை. சமூக நிராகரிப்புக்கு முகம் கொடுக்கும்போது சிறுவர் போர்வீரர்கள் சங்கடம், குழப்பம், மற்றும் அவமானம் போன்றவற்றை அனுபவிக்க நேருகிறது, மேலும் அது கைக்கு கை மாறி அவர்களின் பாடசாலையிலுள்ள சக மாணவர்களின் பின்னால் சென்று நிற்கிறது. சிலர் மோசமான உந்துதல் காரணமாக பாடசாலைகளில் கோபத்தையும் வெறுப்பையும் காண்பிக்கிறார்கள். இதனால் பாதிக்கப்படும் சிறுவர்கள் வெட்கம், ஆவல், மற்றும் சுயமதிப்பை தாழ்வாக மதிப்பிடுவதால் எற்படும் உதவியற்ற நிலை,மற்றும் தாழ்வான சொந்த எதிர்பார்ப்புகள், என்பனவற்றை மீளவும் அடைகிறார்கள்.



நிபுணர்கள் கல்விதான் சமூக ஒருங்கிணைப்புக்கான சக்திமிக்க ஒரு அமைப்பு மற்றும் புனர்வாழ்வுக்கான ஒரு கருவியின் வடிவம் என்று நம்புகிறார்கள். எனவே போரினால் பாதிப்படைந்த அநேகமானவர்களுக்கு வெளிச்செல்லும் ஒரே வழியாக இருப்பது கல்விதான். எனினும் மேலதிக ஆய்வுகளிலி ருந்து கண்டறிந்திருப்பது, பெரும்பான்மையான சிறுவர்கள் கல்விக்கான வழியில் அதிக நன்மைகளைப் அடைந்தாலும், சில முன்னாள் சிறுவர் போர்வீரர்கள் தங்கள் கல்வியை தொடர்வதில் ஆர்வமற்று இருக்கிறார்கள் என்று.

செயற்பாடுகள் மறைந்துபோவதுடன் தர்க்கரீதியான சிந்தனைகளும், சித்தாந்தங்களால் அடக்கி ஆளப்படுகின்றன. சிந்திப்பதற்கு பதில் செயற்படுத்துவதற்கே அவர்களுக்கு கற்றுத்தரப் பட்டுள்ளது. அவர்கள் தங்கள் மூத்த தலைவர்களின் கட்டளைக்கு கீழ்படிந்து மிகச்சரியான ஒரு கொலை இயந்திரத்தை போலவே செயற்படுகிறார்கள். பயற்சிக் காலத்தில் அவர்கள் செலவழித்த நேரத்தின்போது அவர்கள் காடுகளில் மறைந்திருத்தல், மற்றும் பலவகையான தாக்குதல்களில் பங்கு கொள்வது போன்றவைகளை மட்டுமே செய்துவந்ததால் பயனுள்ளவைகளைக் கற்கும் வாய்ப்புகள் தீவிரமாக மட்டுப்படுத்தப் பட்டுவிட்டன.

ர்'யன் உளவியலாளர் லெவ் வாகொட்ஸ்கியின் சமூக கலாச்சார கொள்கை வலியுறுத்துவது, சிறுவர்கள் மற்றும் சமூகத்தில் உள்ள அதிகம் அறிவுடைய அங்கத்தவர்கள் இடையே கூட்டுறவான ஒரு உரையாடலின் முன்னேற்றமான பங்கினைப்பற்றியே. சிறுவர்களின் ஆட்சேர்ப்பு மற்றும் இராணுவ பயன்பாடு என்பன சிறுவர்களை, சமூகத்தின் அறிவுடைய அங்கத்தவர்களான ஆசிரியர்கள்,குருமார்கள், மற்றும் ஏனைய சமூகத் தலைவர்கள் போன்றவர்களுடன் இணைவதை மட்டுப்படுத்துகின்றன. இந்த சிறுவர் போராளிகளுக்கு கல்வி அல்லது அறிவுசார் தூண்டுதல்கள் எதுவும் கிடைப்பதில்லை. வாகொட்ஸ்கி தெரிவிப்பது சிறுவர்கள் இந்த இடைத் தொடர்புகள் மூலமாக தங்கள் சமூகத்தின் கலாச்சாரங்களை கற்றுக் கொள்கிறார்கள் என்று.

சிறுவர் போராளிகளுக்கு இந்த இடைத்தொடர்புகள் கட்டுப்படுத்தப்பட்டு உள்ளதுடன் அவர்களினது உலகம் போராட்டம் மற்றும் வன்முறை என்பனவற்றுடன் மட்டுப்படுத்தப் சிறுவர்கள் காலப் போக்கில் வளமான சொல்லகராதி அறிவுள்ள அவர்களது சகாக்களைக் காட்டிலும் மிக மெதுவாகத்தான் முன்னேறுவார்கள். அநேகமான இளம் சிறுவர் போர்வீரர்களால், வாசித்து புரிந்துகொள்வது அல்லது கணிதச் சொற் பிரச்சினைகளை தீர்ப்பது, போன்ற அறிவாற்றல் பணிகளை அவர்கள் கிளர்ச்சியாளர்களுடன் இருந்த காலத்தில் அவர்களால் செய்ய முடியவில்லை எனக் கூறப்படுகிறது. அநேகமான சிறுவர் போராளிகளிடம் பகட்டுக்காக கைக்கடிகாரங்கள் இருந்தபோதிலும் அவர்களால் நேரத்தை வாசிக்க இயலாது.

## கற்றல் சிரமங்கள்

புனர்வாழ்வளிக்கப்பட்டதும் சிறுவர் போராளிகள் திரும்பவும் பாடசாலைகளுக்கு செல்ல ஆரம்பிக்கிறார்கள். அவர்கள் பாடசாலைச் சூழலிருந்து பல வருடங்களாக வெளியேறி இருந்தார்கள். அவர்களது அறிவாற்றல் மற்றும் கற்கைப்பணிகள் ஒரு குறிப்பிடத்தக்க மட்டத்தில் போரினால் மிகமோசமாக பாதிக்கப்பட்டிருந்தது. இத்தகைய முரண்பாடுகள் இருந்த போதிலும் பிள்ளைகள் புதிய பல பணிகளை கற்றுக் கொள்வதற்காக படிப்பதற்கு போராடி வருகிறார்கள். ஆனாலும் யுத்த நினைவுகள் அவர்களைவிட்டு முற்றாக நீங்கிவிடவில்லை. உணர்ச்சிகரமான பிரச்சினைகளில் சந்தேகத்துக்கிடமான பதட்டம் சிறுவர்களிடம் இருப்பதை அவர்கள் எளிதில் நிரூபித்தார்கள்.

முன்னாள் சிறுவர் போராளிகளிடத்தில் பரந்த அளவிலான கற்றல் பிரச்சினைகள் இருப்பதை ஆசிரியர்கள் அவதானித்தார்கள்.அவர்களின் வழிகாட்டிகளிடமிருந்து

கற்றல் உத்திகளுக்கான பயிற்சி அல்லது சிகிச்சை போன்றன உட்பட பொருத்தமான உதவி கற்றல் சிரமங்களுக்கு ஆளாகும் இந்த முன்னாள் சிறுவர்



போராளிகளுக்கு வழங்கப் பட வேண்டும். ஒப்பீட்டளவில் சில அடிப்படை கல்வியறிவு மற்றும் அரம்ப மட்ட தகுதிகள் என்பனவற்றை ஒரு குறுகிய கால அளவில் அடைவதற்காக அவர்கள் திரும்பவும் செயல்படக் கூடியதாக இருப்பதால்,கல்விப் பாலமான திட்டங்கள் இந்த அமைப்பில் நன்கு செயல்படும். கல்விப் பாலத் திட்டங்கள், பிள்ளை அடுத்த கற்றல் தெரிவை நோக்கி நகரக்கூடிய விதத்தை அடிப்படையாகக் கொண்டு திறமையான முறையில் உருவாக்கப்பட வேண்டும்.அநேகமான விடயங்களில் சிறுவர்கள் தொழிற்பயிற்சியை நோக்கி முன்னேறுகிறார்கள். இப்போதுள்ள தொழிற் பயிற்சிகள் விவசாயம், கால்நடை வளர்ப்பு, வெதுப்பு, தச்சுவேலை, கைவினை, கட்டிடவேலை, இயந்திரவியல் ,தையல்,மற்றும் பலவகையான இதர தொழில்களில் சிறுவர்கள் தொழில் அனுபவம் பெறுவதில் உதவக்கூடியனவாக உள்ளன.



**நடத்தை சிக்கல்கள்**

முன்னாள் சிறுவர் போராளிகள் போர் தொடர்பான வன்முறையின் கொடுமையான காட்சிகளை வெளிப்படுத்

களங்கம், மோசமான மனநிலை வெளிப்பாடுகளை உருவாக்குவதற் கான பங்களிப்பினை வழங்கக்கூடும் என்கிற முடிவுக்கு வந்தார்கள். அவர் மாதிரிக்கு எடுத்துக் கொண்ட முன்னாள் சிறுவர் போராளிகள், அதிர்ச்சிகரமான நிகழ்வுகளின் வெளிப்பாடுகளை கட்டுப்படுத்திய பின்பும் ஒப்பீட்டளவில் மன அழுத்தம் மற்றும் பி.ரி.எஸ்.டி போன்றவற்றுக்கு குறிப்பிடத்தக்களவு உயர்


காப்பாற்றிய பின்னர் கண்டது, அவர்கள் மீள ஒருங்கிணைக்கப் படவேண்டிய சமூகத்தை சேர்ந்த யாரும் அங்கு காணப்படாததையே. சரணடைந்த அல்லது பிடிபட்ட

சிறுவர் போராளிகளை அல்ல தண்டிக்க வேண்டியது, சிறுவர் போராளிகளை சேர்ப்பதற்கும், பயிற்சி வழங்கி அவர்களை சிறுவர் போர்வீரர்களாக மாற்றுவதற்கும் பொறுப்பாக இருந்தவர்களைத்தான் யுத்தக் குற்றவாளிகளாகக் கருதி தண்டிக்க வேண்டும், என்று வலியுறுத்த வேண்டும். சரணடைந்த அல்லது பிடிபட்ட சிறுவர் போராளிகளை, குற்றவாளிகளைப்போலவோ அல்லது இளங் குற்றவாளிகளைப் போலவோ நடத்தக் கூடாது, ஆனால் பொருத்தமான உளவியல் சிகிச்சை,சமூக பொருளாதார, மற்றும் கல்வி வாய்ப்புகளை புனர் வாழ்வாக வழங்க வேண்டும். சமூகத்துடன் சிறுவர் போராளிகளின் மீள் ஒருங்கிணைப்பு, உலகின் பல நாடுகளில் வெற்றிகரமாக நிறைவேறியுள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

1995 முதல் 1997 வரை இடம்பெற்ற அங்கோலாவின் படைக்கலைப்பு நடவடிக்கை ஐக்கிய நாடுகள் சபையின் வரலாற்றிலேயே மிகவும் விரிவான ஒரு நடவடிக்கை. ஒருவேளை அதுதான் முதல் தடவையாக சிறுவர்களை சமாதான நடவடிக்கைகளில் தனித்தன்மையாக சேர்த்துக் கொள்ளப்பட்ட செயல்பாடு என்றும் கூறலாம்.

அதேவேளை 1994 லுசாக்கா விதிப்படி வெளிப்படுத்தப் படாவிட்டாலும்,அவர்களது படைக்கலைப்பு மற்றும் மீள ஒருங்கிணைப்பு என்பன சமாதான ஒப்பந்தத்தை நடைமுறைப் படுத்துவதற்கு அமைக்கப்பட்ட ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட முதல் தீர்மானத்துக்கு முன்னுரிமையளித்து

> ‘நிபுணர்கள் கல்விதான் சமூக ஒருங்கிணைப்புக்கான சக்திமிக்க ஒரு அமைப்பு மற்றும் புனர்வாழ்வுக்கான ஒரு கருவியின் வடிவம் என்று நம்புகிறார்கள். எனவே போரினால் பாதிப்படைந்த அநேகமானவர்களுக்கு வெளிச்செல்லும் ஒரே வழியாக இருப்பது கல்விதான். எனினும் மேலதிக ஆய்வுகளிலிருந்து கண்டறிந்திருப்பது, பெரும்பான்மையான சிறுவர்கள் கல்விக்கான வழியில் அதிக நன்மைகளைப் அடைந்தாலும், சில முன்னாள் சிறுவர் போர்வீரர்கள் தங்கள் கல்வியை தொடர்வதில் ஆர்வமற்று இருக்கிறார்கள் என்று.’



தியிருப்பதால் ஒரு வரையறைக்குட்பட்ட நடத்தை சிக்கல்களை எதிர்கொள்கிறார்கள். அதற்கு மேலதிகமாக மோதலின் பின்னான காரணிகள், பாதிக்கப் படக்கூடிய மோசமான நடத்தைகளின் வெளிப்பாட்டை மாறுபாடான கோணங்களில் பங்களிப்பு செய்யவும்கூடும். லெவ் வாகொட்ஸ்கியின் கூற்றுப்படி, சிறுவன் வாழும் அவனது கலாச்சாரம் மற்றும் சமூகம், அவனது மாற்றம் காரணமாக பெருமளவில் பாதிக்கப்படுகிறது.

வாகொட்ஸ்கி சிறுவன் கற்றுக்கொள்ளும் முக்கிய பாடம் சமூக ஒருங்கிணைப்பு மூலமே ஏற்படுகிறது என நம்பினார்.

பல வருடங்களாக சிறுவர் போராளிகள் தங்கள் நேரத்தை வளர்ந்த போராளிகளுடன் கடுமையான சட்டதிட்டங்களின் கீழ் கழித்துள்ளார்கள். அந்த சிறுவர்கள் தங்களின் உளவியல் நலன்களுக்கு எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய முரண்பாடான போராட்ட சூழ்நிலைகளையே தொடர்ந்து வெளிப்படுத்தி வந்துள்ளார்கள். அந்த சிறுவர்களின் சிந்தனை வடிவம், மற்றும் அறிவாற்றல் அமைப்புகள், மிகவும் தீவிரமான வன்முறையான திசையை நோக்கித் திரும்பிவிட்டது. சிறுவர்கள், கேள்விகள் எதையும் கேட்காமலே அட்டூழியங்களைப் புரிவதற்கு போதிக்கப்பட்டுள்ளார்கள். தங்கள் நடத்தையில் மோசமான மாற்றங்களை ஏற்படுத்திய இருண்ட



யதார்த்தத்துக்கு அவர்கள் சாட்சியாக இருந்துள்ளார்கள். கடந்த காலங்களில் அட்டூழியங்களைப் புரிந்துள்ள சிறுவர்களின் மனநல சுகாதார பிரச்சினைகள் பொருத்தமான முறையில் தீர்க்கப்படாவிட்டால், அவர்களின் நடத்தையில் கோளாறுகள், அல்லது சமூக விரோத ஆளுமை கோளாறுகள், மற்றும் போதை மருந்துக்கு அடிமையாகும் பிரச்சினைகள் போன்றவை உருவாவதற்கான அதிகளவு ஆபத்து உள்ளது.

நேபாளத்தில் கோர்ட்டும் அவரது குழுவும் 2008ல், மோதலின் பின்னான காரணிகள் அதாவது அதனால் ஏற்பட்ட

விகிதத்திலான நோய் அறிகுறி களைக் காண்பித்தார்கள்.

உளவியலாளர் யூரி புரௌண்பென்பிரீனர் விளக்கியதன் படி சமூகத் தொடர்புகள் பிள்ளைகளின் நடத்தையில் ஒரு முக்கிய பங்கினை வகிக்கிறது. சமூக உறவுகளின் உட்பொதிவு தொடர்பான கோளங்கள், சமூக சூழலியலில் பகுப்பாய்வு செய்வதற்கான அடிப்படை கூறுகளாக தனிப்பட்ட நடத்தைகள் மற்றும் நலன்களையே தீர்மானிக்கிறது. இந்த சிறுவர்களை கடத்திச்சென்று முகாம்களில் வைத்திருந்த வேளைகளில்,ஆரோக்கியமான சமூக உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு அவர்களுக்கு ஒரு வழியும் இருக்கவில்லை.

**சிறுவர் போராளிகள் மற்றும் சமூகத்தில் அவர்களை மீள ஒருங்கிணைப்பதில் உள்ள சிக்கல்கள்**

முன்னாள் சிறுவர் போர்வீரர்களை மீள ஒருங்கிணைப்பது சவாலான ஒரு விடயம். சிறுவர் போராளிகள் அநேகமாக உளவியல், மற்றும் சமூகவியல், சிக்கல்களை எதிர் கொள்கிறார்கள். சிலவேளைகளில் அவர்களது சமூக அங்கத்தவர்கள் அவர்களது யுத்தகால நடவடிக்கைகளையிட்டு அச்சம் கொண்டு அவர்களை ஊரைவிட்டே ஒதுக்கி வைக்கிறார்கள். இந்தப் பிள்ளைகளில் சிலர் அவாகளது உறவினர்களை கொலையோ சித்திரவதையோ செய்திருக்கலாம். இந்தக்காரணிகள் சிறுவர் போராளிகளை திரும்பவும் சமூகத்துடன் மீள ஒருங்கிணைப்பது, மற்றும் அர்த்தமுள்ள மற்றும் உற்பத்தியான வாழ்க்கையை வாழ்வதை தடை செய்யலாம்.

ஆபிரிக்கா, ஆசியா,மற்றும் இலத்தீன் அமெரிக்கா நாடுகளில் மேற்கொண்ட ஏராளமான ஆய்வுகள் தெளிவு படுத்துவது, முன்னாள் சிறுவர் போராளிகள் சமூகத்தில் மீள ஒருங்கிணைக்கப் படும்போது இதுபோன்ற சவால் களை எதிர்நோக்குகிறார்கள் என்று. சில நாடுகளில் மோதல் இன்னமும் நிலவுகிறது, மற்றும் விடுதலையான சிறுவர் போராளிகள் இன்னமும் கிளர்ச்சியாளர்களால் திரும்பவும் பிடிபடும் அச்சுறுத்தல்களை எதிர்நோக்கி உள்ளதுடன், அதிகாரிகளின் அடக்குமுறை, மற்றும் கடந்தகால அட்டூழியங்களுக்காக அவர்களின் சமூகத்தவர்கள் அவர்களைத் தாக்க முயற்சிப்பது, போன்ற ஆபத்துக்களுக்கும் ஆளாகி உள்ளார்கள்.

உகண்டாவின் குலு மாவட்டத்தில் உள்ள சிறுவர்களை காப்பாற்றுங்கள் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர்கள், 2004 2005ல், சுமார் 300 முன்னாள் சிறுவர் போராளிகளைக்

பிரகடனப் படுத்தப்பட்டது. உள்ளூர் சிவில் சமூக வலையமைப்புகளுடன் ஏற்படுத்திய கூட்டு,அநேக சிறுவர்களுக்கு தங்கள் வீடுகளுக்குத் திரும்புவதற்கு சாத்தியமான வழியை அமைத்தது.

மோதலின் பின்னான அனுபவங்களைப்பற்றி மேற்கொண்ட ஒரு நீண்டகால ஆய்வின்படி பதிவு செய்யப்பட்டிருப்பது, குடும்ப ஆதரவு, மற்றும் பொருளாதார வாய்ப்பு போன்ற மோதலின் பின் அனுபவங்கள் மனநல ஆரோக்கியத்தில் முக்கிய பங்காற்றி உள்ளது என்பதை, மீள் ஒருங்கிணைப்பு செய்யப்பட்ட 39 மொசாம்பியன் ஆண்களை 16 வருடங்களின் பின்னர் மீண்டும் நேர்காணல் செய்தபோது அறிய முடிந்தது என்று. மோதலின் பின்னான புனர்வாழ்வு முன்னாள் சிறுவர் போராளிகளின் வாழ்க்கையில் மிகவும் முக்கியமானதாகும்.அதிர்ச்சியின் பாதிப்பிலிருக்கும் இந்த சிறுவர்கள் அதிலிருந்து மீண்டு உற்பத்தி திறன் கொண்ட அங்கத்தவர்களாக சமூகத்துடன் மீள ஒருங்கிணைவதற்கு, சமூகமானது அவர்களைப்பற்றிய நல்லெண்ணங்களைக் கொண்டிருப்பதுடன் அதற்காக ஒரு ஆரோக்கியமான சூழலையும் உருவாக்க வேண்டும்.

கபில்

ஆராய்ச்சியாளரான பெற்றன்கோட்டின் கண்ணோட்டத்தில்,முன்னாள் சிறுவர் போராளிகளின் கடுமையான யுத்த அனுபவங்கள், நீண்டகால பின்விளைவுகளைக் கொண்டிருக்கும்,ஆனால் இந்த விளைவுகளின் இயல்பும் மற்றும் அதன் விரிவாக்கமும் மோதலின் பின்னான ஆபத்தினதும் மற்றும் பாதுகாப்பு காரணிகளினதும் தாக்கத்திலேயே தங்கியிருக்கின்றன. அநேக நிபுணர்கள் சிறுவர் போராளிகளின் மீள் ஒருங்கிணைப்பு மூன்று கூறுகளை வலியுறுத்துவதாக முதன்மைப்படுத்தி சொல்லியிருக்கிறார்கள் அவையாவன: குடும்ப மீள் ஒருங்கிணைப்பு, சமூக உளவியல் ஆதரவு, கல்வி மற்றும்பொருளாதார வாய்ப்புகள் என்பனவே.





சிரேஸ்ட சட்டத்திரணி மு.சிற்றம்பலத்தின் 45 வருட கால சட்டத்துறை மற்றும் சமூக சேவையை பாராட்டி வவுனியாவில் ஏற்பாடு செய்யப்பட்ட சேவைநலன் பாராட்டு விழாவின் போது, வவுனியா சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் அன்ரன் புனிதநாயகம் உரையாற்றுவதையும், விழா நாயகன் வரவேற்கப்படுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: கபிலன்)

# யாழ்.மருத்துவமனைக்கு அதிகளவில் இரத்தம் வழங்குவது படையினரே

## யாழ்.கட்டளைத் தளபதி

பெரும்பாலான யாழ்ப்பாண மக்களில் ஓடுவது சிங்களவர்களின் இரத்தம் தான் என்று இலங்கை இராணுவத்தின் யாழ்.படைத் தலைமையக கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார். கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வி ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். யாழ்.போதனா மருத்துவமனை இரத்த வங்கிக்கு அதிகளவில் பங்களிப்புச் செய்பவர்கள் படையினரே. ஒவ்வொரு மாதமும் இராணுவம், இரத்ததான முகாம்களை ஏற்பாடு செய்கிறது. இதன் மூலம் மாதம் ஒன்றுக்கு 125 தொடக்கம் 150 லீற்றர் வரையான இரத்தம் படையனரால் வழங்கப்படுகிறது. இப்போது பெரும் பாலான யாழ்ப்பாண மக்கிடம் ஓடுவது சிங்களவர்களின் இரத்தம் தான்" என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# வவுனியாவில் இடம்பெற்ற விபத்தில் இளைஞன் பலி

வவுனியா

வவுனியா நொச்சிமோட்டை பாலத்தில் இடம்பெற்ற விபத்தொன்றில் மிதிவெடி அகற்றும் நிறுவனத்தில் பணியாற்றும் இளைஞன் ஒருவன் பலியாகியுள்ளார்.

நேற்று (25.6) அதிகாலை இடம்பெற்ற இவ்விபத்திலேயே திருகோணமலையை சேர்ந்த ஜே.புஸ்பராஜா வயது 32 என்பவர் பலியாகியுள்ளார்.

மோட்டார் சைகிளில் பயணித்த இவர் எவ்வாறு பலத்தினுள் வீழ்ந்தார் என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வரும் நிலையில் சம்பவ இடத்தில் இருந்து சடலத்தினை ஓமந்தை பொலிஸார் வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைத்திருந்தனர்.

# திருடர்கள் கைவரிசை

குப்பிளான் பகுதியில் உள்ள வீட்டில் நள்ளிரவு நேரம் நுழைந்த திருடர்கள் சுமார் மூன்றரை லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் கையடக்க தொலைபேசிகள் மற்றும் பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளார்கள்.

இந்த சம்பவம் குப்பிளான் கன்னிமார் கோவிலயடிக்கு அண்மையாக ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இடம் பெற்றுள்ளது.

வீட்டின் புகைக் கூட்டின் வழியாக உள்நுழைந்த தீருடர்கள் வீட்டில் உறங்கிக்கொண்டு இருந்த பெண்களின் இரண்டு சங்கிலிகள் மற்றும் காப்புக்கள்ள கழற்றியெடுத்ததுடன் காதுத் தோடுகளை கழற்ற முற்பட்ட வேளையில் ஒரு பெண் விழிப்படைந்ததைத் தொடர்ந்து திருடர்கள் தப்பி ஓடியுள்ளார்கள்.

குறிப்பிட்ட திருட்டு சம்பவம் சம்பந்தமாக சுன்னாகம் பொலிசில் செய்யப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து பொலிசார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

## அயன் படப்பாணியில் இலங்கைக்கு

# வயிற்றினுள் ஹெரோயின் கடத்தி வந்த பாகிஸ்தான் பிரஜை கைது

பாகிஸ்தானில் இருந்து இலங்கைக்கு ஹெரோயின் கடத்தி வந்த பாகிஸ்தான் பிரஜை ஒருவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் கராச்சியில் இருந்து புறப்பட்ட விமானத்தில் பயணித்தவர்கள் வழக்கம்போல பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது, ஒருவர் சந்தேகத்தின் பேரில் கட்டுநாயக்க விமான நிலைய போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவால் கைது செய்யப்பட்டார்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் அவரது வயிற்றில் ஹெரோயின் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினர் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




சுன்னாகம் மயிலணி முருகன் ஆலய வருடாந்த மகோற்சவத்தின் பத்தாம் நாள் திருவிழாவின் பொது சுவாமி வீதி உலா வருவதையும், சுவாமி வேட்டை ஆடுவதையும் படங்களில் காணலாம்

# முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு தே.அடையாள அட்டை வழங்கப்படும்

## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

புனர்வாழ்வு பெற்று வெளியேறிய முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு இலங்கைப் பிரஜைகள் என்ற அடிப்படையில் தேசிய அடையாள அட்டைகள் வழங்கப்படுவதாகவும் இதைப் பெற்றுக் கொடுப்பதில் எவ்விதமான முரண்பாடுகளும் இல்லையென இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வனிகசூரிய தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக மேலும் தகவல் வெளியிட்டுள்ள ராணுவப் பேச்சாளர் சமூகமயப்படுத்தப்பட்டுள்ள முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு சமூகத்தில் தனியான பிரிவினராக இனங்காணப்படுவதை தவிர்ப்பதற்கு பாதுகாப்புத் தரப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் இதனடிப்படையில் அவர்கள் தங்களின் கடந்தகால வாழ்க்கையை கடந்து சமூகத்தில் ஏனைய மக்களைப் போன்று இயல்பாக வாழ்வதற்குரிய சூழலை ஏற்படுத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# யாழ்.வைத்தியசாலை பணிப்பாளரை நீக்கம் செய்யுமாறு கையெழுத்து வேட்டை

யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் திருமதி பவானி பசுபதிராஜாவை அப்பதவியிலிருந்து நிறுத்துமாறு கோரி யாழ். மருத்துவ சங்கம் திங்கட்கிழமை யாழ்.வைத்தியர்களிடம் கையெழுத்து சேகரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. யாழ்.போதனா வைத்தியசாலையில்நடைபெற்ற ஊழல் மற்றும் மோசடிக்கும் யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளருக்கும் தொடர்பு இருப்பதாகத் தெரிவித்தே இந்தப் பதவி நீக்கத்தை வலியுறுத்துவதாக யாழ்.மருத்துவ சங்கம் தெரிவித்தது.

எனவே அந்தப் பதவியில் அவர் இருப்பதற்கு தகுதியற்றவர். அதனால் அவரை அப்பதவியிலிருந்து நீக்குவதற்கு வைத்தியர்களின் சம்மதத்துடன் கையெழுத்து பெறப்பட்டு வருகின்றதாக யாழ். மருத்துவர் சங்கம் மேலும் தெரிவித்தது.

# செப்புத் தகடுகள் களவு

உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள இலங்கை சீமேந்துக் கூட்டத்தாபன வளாகத்தில் இருந்து 25 செப்புத் தகடுகள் களவாடப்பட்டுள்ளதாக காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தில் சீமேந்து தொழிற்சாலைப் பாகாப்பு ஊழியரினால் முறையிடப்பட்டுள்ளது.

கடந்த 18 ஆம்திகதி இந்த முறைப்பாட்டை காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தில் பாதுகாப்பு ஊழியர் செய்துள்ளார். தற்போது குறிப்பிட்ட முன்னாள் காங்கேசன்துறை சீமேந்து தொழிற்சாலை ஊழியர்கள் உள்ளே சென்று வேலை செய்துவரும் நிலையில் பாதுகாப்பு ஊழியர் இத்தகைய முறைப்பாட்டை செய்துள்ளார்.

காங்கேசன்துறை சீமேந்து தொழிற்சாலையில் இடம்பெற்ற களவு தொடர்பாக காங்கேசன்துறைப் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

# முல்லை.புதுக்குடியிருப்பில் ஆயுதங்கள் மீட்பு

முல்லைத்திவு புதுக்குடியிருப்பு அம்பலவன்பொக்கனைப் பகுதியில் இருந்து விடுதலைப்புலிகளினால் பாதகாப்பான முறையில் நிலத்தின் கீழ் புதைத்து வைக்கப்பட்ட வாகனங்கள் மற்றும் ஒரு தொகுதி ஆயுதங்களை விசேட அதிரடிப் படையினர் மீட்டுள்ளார்கள்.

கடந்த 20 ஆம் திகதி விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக இத்தகைய பொருட்கள் கைப்பற்றப்பட்டதாக யாழ்ப்பாணம் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் -ஸ்ரீ குகனேசன் தெரிவித்தள்ளார்.


யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற ஊடக்வியலாளர் சந்திப்பின்போது இத்தகவலை தெரிவித்த சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் தொடர்ந்து இந்தச் சம்பவம் சம்பந்தாமக குறிப்பிடும் போது,

பின்வரும் இலக்கங்களைக் கொண்ட றிப்பா வாகனங்கள் மூன்று என்சி 2636 என்பி 1358 ஆர்பி 4397 இலக்கங்களைக் கொண்ட வாகனங்கள் உழவுயந்திரம் தேக்கு மரங்கள் 104 மற்றும் கைக்குண்டுகள் 124 மோட்டர் குண்டுகள் 135 82 இலக்கக் குண்டுகள் 37 வெடி மருந்து 50 கிலோ 7.62 துப்பாக்கி ரவ்வைகள் 431 12.7மில்லி மீற்றர் றவைகள் 14 120 மில்லிமீற்றர் மோட்டர் குண்டுகள் 12 உட்பட மற்றும் உபகரணங்களம் கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

# ஆரோக்கிய நாதம்

## நோய் பற்றிய சித்தர்களின் தத்துவம்!

ஆன்மிக வரலாற்றிலேயே எங்கும் காணாத அளவில் உடம்பு பற்றிய கவனம் சித்த தத்துவத்தில் தெரிகிறது. உடலற்ற ஆன்மாவின் விடுதலை அவர்களது குறிக்கோளாக இருக்கவில்லை. பிணி, மூப்பு, சாக்காடு இவற்றிலிருந்து இந்த உடம்பைப் பாதுகாத்து அதை அழியாப் பொருளாக்குவது




எப்படி என்பதே சித்தர்களின் ஞானத்தேடல்களின் முக்கிய இலக்கு.

சித்தர்கள் ஐந்து வகையான உடம்புகள் அல்லது கோசங்கள் பற்றிப் பேசியுள்ளார்கள். எந்தப் பொருளால் ஊட்டம் பெறுகிறதோ அதைப் பொறுத்து உடம்பின் நியதிகள் அமைகின்றன. உணவால் ஆனது இந்த ஸ்தூல உடம்பு. மூச்சுக் காற்றால் ஆன வளியின் பாதை உறுப்புகளான வளி உடம்பு. காற்று சென்று திரும்பும் உடற்துவாரங்கள், அது போகும் குழாய்கள் மற்றும் அது இயக்கும் தொழில் உறுப்புகள் மற்றும் கர்மேந்திரியங்களின் நியதிகளுக்கு உட்பட்டது.

வர்ம சிகிச்சை, நுட்ப வைத்தியம், நாடி சாஸ்திரம் மற்றும் பிராணாயாம முறைகள் யாவும் வளி உடம்பின் செயல்பாட்டின் அடிப்படையில் உருவாயின. மூச்சுக்காற்றின் நியதிகளை உயிரற்ற சடலத்தில் படிக்க முடியாது உயிருள்ள மனிதன் தான் சித்த மருத்துவத்தின் அளவு கோல். அதனால்தான் சவத்தை அறுத்து உள் உறுப்புகளைக் காணுதல் சித்த மருத்துவத்திற்குப் பிரதானமல்ல. அடுத்தது, நினைவுகளாலும் சிந்தனைகளாலும் ஊட்டம் பெறும் மன உடம்பு. இதைக் கடந்து அறிவுடம்பு மற்றும் இவை யாவும் இயைந்த இன்ப உடம்பு என்று ஐந்து வகை உடம்புகளைச் சித்தர்கள் வரையறுத்தனர். இவற்றுக்குள்ள தொடர்பு, இப்படிமங்களை ஒருங்கிணைக்கும் வழிகள் ஆகியவை சித்தர்களின் மெய்ஞானத் தேடல்களாக இருந்தன. என்றாலும் இம்மருத்துவம் முதல் மூன்று உடம்புகளை மட்டுமே தீண்ட இயலும். பஞ்சபூதக் கொள்கையும் நோய் பற்றிய கோட்பாடுகளும் ஆயுர்வேதம், சித்த மருத்துவம் இரண்டிற்கும் அடிப்படையான கோட்பாடு பஞ்சபூதக்கொள்கை. உலகிலுள்ள பொருள்கள் அதாவது பதார்த்தங்கள் யாவும் ஐந்து பூதங்களாலானவை. மண், அனல், புனல், வளி, வெளி ஆகியவற்றின் கூட்டுச்சேர்க்கையால் பருப்பொருள்களும் கண்ணுக்குப் புலப்படாத - ஆனால் செயல்பாடு



களையுடைய - மனம் போன்ற சூட்சுமப் பொருள்களும் ஆக்கப்பட்டுள்ளன. ஆக உடலும் மனமும் இயைந்த மனிதனும் இந்தச் சரீரத்தின் வெளியே உள்ள இயற்கையும் ஒரே மாதிரி யான பொருள்களாலானவை.

பஞ்சபூதங்களாலான உலகை மனிதன் தன் ஐம்புலன்களால் அறிகிறான். மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய பொறிகள் முறையே ஊறு (ஸ்பரிசம்), சுவை (ரசம்), ஒளி (ரூபம்), நாற்றம் (கந்தம்), ஓசை (சப்தம்) ஆகிய பொருள்களைக் கிரகிக்க முடிகிறது. ஆனால் மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய பொறிகள் வெறும் உறுப்புகள்தாம் அவற்றால் தம்மைக்கூடத் தாமாக அறிய முடியாது. பொறிகளுடன் உள்ளுறையும் அந்தக்கரணமாகிய மனம் பொருந்தினால்தான் உணர்வும் நினைவும் ஏற்படும்.

மனிதனுக்கு அந்தக்கரணங்கள் நான்கு - மனம், புத்தி, அகங்காரம், சித்தம். அதாவது சூட்சுமமாகிய மனம் அதன் செயலைப் பொறுத்து நான்காகப் பிரிக்கப்படும். மனம் நினைக்கும், புத்தி ஒப்பிட்டு விசாரிக்கும், அகங்காரம் முனைப்பைத் தரும், சித்தம் செயலை முடிக்கும். இவற்றை இணைப்பது அறிவு. வலி வேதனை ஆகியவற்றை உறுப்புகள் உணர முடியாது. ஏனென்றால் அவை அசித்து, அந்தக்கரணங்களின் ஈடுபாட்டால் உறுப்புகளால் ஏற்படும் வாதையை உணர முடிகிறது. ஆக நோயுற்ற ஒவ்வொருவனும் ஓரளவுக்கு நோயறிபவனாக இருக்க முடியும். சாமானியர்கள் கூட உறுப்புகளின் இயக்கங்களான மூச்சுவிடுதல், செரிமானம், வெளியேற்றம், வலி போன்ற செயல்பாடுகளை நுட்பமாகக் கவனித்துவருவதால் ஓரளவு உணர முடியும். பல்வேறு உணவுகள், பழக்கவழக்கங்கள், கால மாறுபாடுகள் ஏற்படுத்தும் உடல் மாறுதல்களைத் தெரிந்துகொள்வதும் சாத்தியமாகும் இதற்குப் பழக்கம் தேவை. அந்தக்கரணங்களைக் கட்டுப்பாட்டாலும் பழக்கத்தாலும் கூர்மையாக வைத்துக்கொள்ளுதல் யாவருக்கும் சாத்தியமே. இத்தகைய கோட்பாடு நோயாளிக்கும் மருத்துவனுக்கும் அறிதலில் சமமான தொடக்க நிலையைக் கொடுக்கிறது.

உயிரை சரீரம், பொறிகள், மனம், அறிவு இவை யாவும் இணைந்திருக்கும் நிலையாகச் சித்தர்கள் கண்டதாலும் உடம்பைப் பல படிமங்களைக் கொண்டதாகக் கருதியதாலும் நோயை வெறும் பிண்டத்தாலான உறுப்புகளின் கோளாறாக அவர்கள் காணவில்லை. நோய்க்கூறு பற்றிய திரிதோசக் கொள்கையின்படி தன் ஸ்தூல உடலில் உள்ள ஏழு தாதுக்கள் - அதாவது ரசம், ரத்தம், மாமிசம், எலும்பு, கொழுப்பு, மூளை) மற்றும் சுக்கிலம் ஆகியவை - தம் நியதியின் குறியீட்டிலிருந்து தோஷத்தால் வேறுபட்டிருப்பதை ஒருவன் நோய் என்று உணருவதாகச் சொல்கிறது. தோ'ம் என்பது உணவு, சூழல் போன்ற பருப்பொருள்களின் குறை, மிகையால் மட்டுமன்றிக் கவலை, பயம் போன்ற உணர்ச்சிகளின் வீச்சாலும் ஏற்படுகிறது. பின்னர் தாதுக்களைப் பாதிக்கிறது. ஆக நோயை வரையறுப்பதிலேயே அதை முதலில் தனதுடலில் உணருபவனாகிய நோயாளியின் மனமும் அனுபவமும் இடம்பெறுகின்றன.

சித்த மருத்துவத் தத்துவக் கொள்கைகளும் நோய் பற்றிய கோட்பாடுகளும் நோயுறுபவனின் நிலையை அடிப்படையாகக் கொண்டுள்ளன என்பதைப் பார்த்தோம்.

இனி இது நோயாளிக்கும் மருத்துவனுக்கும் உள்ள உறவிலும், சிகிச்சையி லும் எப்படி வெளிப்படுகிறது எனப் பார்க்கலாம்.

# அறிவியல் பூர்வமற்ற

## மருத்துவ பரிந்துரைகள்!

அறிவு மற்றும் புரிந்து கொள்ளுதல் இவற்றை விளககாக ஏந்திக் ொகண்டு எந்த மருத்துவன் நோயாளியின் உடலுக்குள் நுழையத் தவறுகிறானோ, அவனால் வியாதிகளுக்கு அறிவுபூர்வமான சிகிச்சை அளிக்க முடியாது.

சரகா (120 - 162 கி.பி.)

மருத்துவப் பணியில் பகுத்தறிவிற்குப் புறம்பான நடவடிக்கைகளில் முதன்மையானதும் நன்கு அறியப்பட்டதுமான நடவடிக்கை அறிவியல் பூர்வமற்ற வகையில் மருந்துகளைப் பரிந்துரைப்பதுதான்.


தவறான பொருத்தமில்லாத, அதிகப்படியான அளவுள்ள தேவையற்ற போதுமான அளவற்ற மருந்துகள் பரிந்துரைக்கப்படுகின்றன. இவைகளெல்லாம் பகுத்தறிவிற்கு புறம்பான மருத்துவ பரிந்துரை என்று அழைக்கலாம்.

1.தவறான பரிந்துரை - தவறான மருந்துகளைத் தந்து நோய்க்கு சிகிச்சை அளிப்பது அல்லது மருந்தே தேவையில்லாமல் குணப்படுத்தக்கூடிய வியாதிக்கு மருந்து தருவது.

2.பொருத்தமில்லாத பரிந்துரை - குறிப்பிட்ட நோயாளிக்கு பொருந்தாத மருந்துகளை பரிந்துரை செய்வது. உதாரணமாக தாய்மையின் போது கெடுதல் விளைவிக்கக்கூடிய மருந்து சிறுவர், முதியவர்களுக்கு தீமை விளைவிக்கும் மருந்து.

3.அதிகப்படியான பரிந்துரை - உண்மையில் ஒரு குறிப்பிட்ட நோயைக் குணப்படுத்த ஒன்றோ அல்லது இரண்டோ மருந்துகள் போதுமானதாக இருந்தாலும் பல வகையான மருந்துகளைத் தருவது. மேலும் ஒரு மருந்தை தேவையான நாட்களுக்கு மேல் தருவது.

4.அதிகரிக்கப்பட்ட பரிந்துரை - ஒரு வியாதியைக் குணப்படுத்த ஒரே மாதிரியான பலன்களைக் கொடுக்கும் பல மருந்துகளைத் தருவது.



ரே.

5.போதுமான அறிவுரை - தேவைப்படும் காலத்தை விட மிகக் குறைந்த கால அளவுக்கோ அல்லது தேவைப்படும் அளவை விட கூடுதலான அளவிற்கோ பரிந்துரை செய்வது.

பெருகிவரும் அறிவியல் பூர்வமில்லாத, பயனற்ற மருந்துகள்

நம் தேவைக்கு போதுமான அளவுக்கு மேலதிகமாக மருந்துகள் சந்தையில் உள்ளன? அதிலும் தடை செய்யப்பட வேண்டிய ஆபத்தான மருந்துகள் கூட பல உள்ளனவே? - அதுதான் உங்களுக்கான சுதந்திரச் சந்தை.

டாக்டரிடம் நோயாளிக்குள்ள உரிமை இது! நோயாளி ஒருவரைப் பரிசோதிக்கும் எந்தவொரு மருத்துவரும் அந்த நோயாளிக்கு கீழ்க்கண்ட விபரங்கள் அடங்கிய சீட்டினைத் தர சட்டபூர்வமாகக் கடமைப்பட்டுள்ளார்.

1.நோயாளியின் பெயர், வயது. ஆணா, பெண்ணா?

2.நோயாளியைப் பரிசோதித்த பின் மருத்துவர் உணர்ந்துள்ள விபரங்கள் (ரத்த அழுத்தம், நாடித்துடிப்பு, இதய சம்பந்தப்பட்ட விபரம் போன்றவை)

3.நோய் நிர்ணயிப்பு - தற்காலிகமாக இருந்தாலும் மாற்றப்பட வேண்டியதாக இருந்தாலும்.

4.பரிந்துரைக்கப்பட்ட மருந்துகள் சாப்பிட வேண்டிய அளவுகள் எவ்வெப்பொழுது எவ்வளவு நாட்களுக்கு சாப்பிட வேண்டும் என்பது போன்ற அறிவுரைகள்.

5.மருந்துவர்கள் மாத்திரைகளை தானே கையில் கொடுத்தாலும் அது எழுதித் தரப்பட வேண்டும்.

6.மருத்துவரின் கையெழுத்து. கையெழுத்தின் கீழ் அவரது பெயர்.

மருத்துவர் அறிக்கை என்பது அவசியமானதாகவுள்ளது. அவரைத் தாக்கிய நோய் என்ன என்பது பற்றியோ அல்லது அவருக்கு அளித்த சிகிச்சை பற்றியோ நோயாளி ஒருவரிடம் எந்தக் குறிப்பும் இருக்காது. மீண்டும் நோய்வாய்ப்படும் பொழுதோ அல்லது நிலைமை மோசமாகி வேறொரு சிறப்பு மருத்துவரிடம் செல்லும் பொழுதோ இந்த விபரங்கள் எதுவுமின்றி போக வேண்டிய சூழ்நிலை. நிலைமை மோசமானால் என்ன மருந்து சாப்பிட்டார்? அதனால் ஏதும் ஏற்பட்ட பக்க விளைவினால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதா என்பது பற்றி தெரிய வாய்ப்பு இருப்பதில்லை. குறிப்பில்லாதது வேறொரு மருத்துவரிடம் ஆலோசனை கேட்பதற்கு பெரிய தடையாக உள்ளதோடு அதே மருத்துவரிடம் சில நாட்கள் கழித்து செல்லும்போது ஒரு பிரச்சினையாக உள்ளது.

மேலும் காணப்படும் ஒரு அபாயகரமான போக்கு என்பது மருத்துவரின் சீட்டு இல்லாமலேயே மருந்து கடைகளில் மருந்துகள் வழங்கப்படும் செயற்பாடாகும். மருந்துக் கடையில் மருந்துச் சீட்டு கொடுத்தால்தான் மருந்துகள் தரப்பட வேண்டும். பனடோல், ஆஸ்பிரின் போன்ற சில சாதாரணமான மருந்துகளை விட ஏனையவற்றிற்கு மருந்துச் சீட்டின் அடிப்படையி லேயே மருந்துகள் விற்கப்பட வேண்டும்.

# கிராமியப் பாடல்களில் மிளிரும் உயர் தத்துவங்கள்!

தாயின் ஆழம் காண முடியாத அன்பின் வெளிப்பாடாகப் பிறந்துள்ள இம்முன்னிலைப் பெயர்கள் யாவும், அவள் தன் குழந்தையின் மேல் கொண்டுள்ள பாசத்தின் பிரதி பிம்பங்களாகும். இயற்கையின் எழிலோவியங்களாக இருக்கும் கிராமத்தில் வாழும் மக்கள், படிப்பறிவில்லா பரம ஏழைகளாக இருந்தாலும், அவர்கள் தங்கள், அன்புக் குழந்தைகளைப் பற்றி அவர்களின் தாலாட்டில் விழிக்கும் முன்னிலைப் பெயர்கள், கற்பனையின் சிகரத்தை தொட்டு எங்களையெல்லாம் ஆச்சரியப்பட வைத்து விடுகின்றன.

முஸ்லிம்களுக்குள் சாதிப்பாகுபாடு கிடையாது. இவர்கள் உலகில் இறைவனால் படைக்கப்பட்ட மக்கள் எல்லோரும் சமம் என்ற உயர் தத்துவத்தில் வாழ்பவர்கள். இத்தாலாட்டில் வரும் 'சாதிகுலம்' என்னும் சொல் ஒழுக்கமும், பண்பும் நிறைந்த பிள்ளையாகத் தன் குழந்தை வரவேண்டுமென்ற கற்பனையின் எடுகோள் மட்டுமேயன்றி, பிற மதங்களில் உள்ள சாதிப்பாகுபாட்டினை மையமாகக் கொண்டு இச்சொல் அடையாளப்படுத்தப்பட்டதல்ல என்பது குறிப்பிடத்தக்கது.

தாலாட்டில் உள்ள பேச்சுமொழிச் சொற்களும் கருத்துக்களும்

அல்லா-இறைவன்/அரபு பதம்
பசிக்கிதென்டோ - பசிக்கிறது என்றோ
பெலாப்பழம் - பலாப்பழம்
பாக்கிசம் - நிறைசெல்வம்
சாதிகொலம் - சாதிப் பாகுபாடு / குலம்
கண்டோ - கன்றோ / கன்று

தாலாட்டு

ஆராரோ.... ஆரிவரோ...
ஆருபெத்த... பாலகரோ...?
சீதவியாள்... பெத்த என்ர...
செல்லமகன் நித்திரசெய்...
(ஆராரோ)

கற்பக் கருவறையில்
கண், காது, வாய், மூக்கு...
உப்பத்தி செஞ்ச ரப்ப...
உத்துணர்ந்து நித்திரசெய்
(ஆராரோ)

அல்லா தந்த..
ஆணிமுத்தே...
ஆளவந்த... ராசாவே...
நேசமுள்ள... மந்திரியே...
நெஞ்சிலநீ... நித்திரசெய்...
(ஆராரோ)

அல்லா... அளிச்ச எந்தன்
ஆணிமுத்தே... ராசாவே...
பொல்லாங்கு... செய்யாம
பொறுதியுடன் நித்திரசெய்...
(ஆராரோ)

தங்கக்கொடமே... என்ர...
தலவாசல்... மல்லிகையே...
வாசமுள்ள ரோசாவே...
வளர்பொறயே... நித்திர
செய்... (ஆராரோ)

மக்கத்து பட்டே... என்ர
மதினத்து மணி
வெளக்கே...
சொக்கத்து... சந்தணமே
என்ர ராசா
சுறுக்காக... நித்திரசெய்...
(ஆராரோ)

பாடல் உதவி
திருமதி அ. கதிஜா உம்மா
வயது / கல்வி 90 படிப்பறிவில்லை கிராமம் /
தொழில் பொத்துவில் -
தொழில் இல்லை

மேற்சொன்ன தாலாட்டுப் பாடலும் இலங்கைக் கிராமத்து முஸ்லிம் தாய்மார்களால் மிகப் பிரபல்யமாகப் பாடப்பட்டுவந்த பாடல்களில் ஒன்றாகும். இப்பாடலில் தாய் தன் குழந்தையின் மீது கொண்டுள்ள அன்பையும் பாசத்தையும், அவள் குழந்தையை விழிக்கப் பயன்படுத்தும் முன்னிலைப் பெயர்களைக் கொண்டு புரிந்து கொள்ளலாம். பொதுவாக தாலாட்டுப் பாடல்களுக்கு ஜீவனாக மிளிர்வது, தாய்மையிலிருந்து வெளிப்படும் முன்னிலைப் பெயர்களேயாகும். இப்பெயர்கள் யாவும் தாயின் கற்பனையின் உவமைகளாகும். இவளின் கற்பனைக்கு எல்லையே கிடையாது.



முன்னிலைப் பெயர்கள்

ஆணிமுத்து
தங்கக்குடம்
வளர்பிறை
மக்கத்துப் பட்டு
மதினத்து மணிவிளக்கு
சொர்க்கத்து சந்தனம்
ராசா
மந்திரி

இம்முன்னிலைப் பெயர்களில் உவமையும், உருவகமும் பின்னிப் பிணைந்து, தாய்மையின் அன்பின் சிகரத்தைப் புடம்போட்டு காட்டிக்கொண்டிருப்பதைக் காணலாம். இத்தாலாட்டுப் பாடலில் தாய், தன் குழந்தையை ஆழிக்கடலில் விளையும் முத்தாகக் கண்டு மகிழ்கிறாள். இன்னும் குழந்தையின் மேலுள்ள தன்பாசத்தை வெளிப்படுத்த தங்கத்தால் ஆக்கப்பட்ட குடமென்றும் தன் குழந்தையை முன்னிலைப்படுத்தி விழிக்கின்றாள். மேலும் வானத்து வளர்பிறையென்றும், மக்கமா நகரிலுள்ள கஅ்ஃபா? என்னும் இறையில்லத்தை வளைத்து சுற்றியுள்ள பட்டுச் சீலையாகவும், பெருமானார் முகம்மது நபி (ஸல்)

**கண்ணையும், கண்ணின் மனியையும் பூக்களையும், திரவியத்தையும், முத்தையும், பழத்தையும் தன் குழந்தைக்கு உவமையாக்கிக் பெருமைப்படும் இக்கிராமத்து ஏழைத்தாயின் அன்புக்கும், பாசத்திற்கும் என்னதான் ஈடாகும், பூக்களில் தான் இவள் எத்தனை வித்தியாசம் காண்கின்றாள். வாடாத, வதங்காத, சந்தன கொடி மல்லிகைப்பூவொன்று தன் சேய்க்கு புகழாரம் சூட்டிப் பெருமைப்படுகிறாள்.**

அவர்கள் வாழ்ந்து மரணித்து அடக்கம் செய்யப்பட்டுள்ள மதினமா நகரிலுள்ள (மஸ்ஜிதுல் நபவி) பள்ளிவாசலில் தொங்கிக் கொண்டிருக்கும் மணிவளக்காகவும், இறைவனால் படைக்கப்பட்டு,அவனுடைய நல்லடியார்களுக்காக அவனால் பாதுகாக்கப்பட்டு வரும் சுவர்க்கத்தின் மணமுள்ள சந்தனமாகவும், உருவகப்படுத்தி, உவகையுறுகின்றாள். பொதுவாக தாலாட்டுப் பாடல்கள் எல்லாம் தாயின் அல்லது தாலாட்டுப் பாடுபவர்களின் ஒருமுகக் கூற்றாகவே அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இது தாலாட்டின் மரபுவழிவந்த கூற்றாகக் கொள்ளலாம். எது எப்படியிருப்பினும் தாலாட்டின் முக்கிய நோக்கம் அழும் குழந்தைகளைக் கண்ணுறங்கச் செய்து, அமைதிப்படுத்து வதேயாகும்.

தாலாட்டில் உள்ள மண்வளச் சொற்களும் /அரபுப் பதங்களும் கருத்துக்களும்

உப்பத்தி - உற்பத்தி
வளர்பொற - வளர்பிறை
சொக்கத்து - சொர்க்கத்து / சுவர்க்கத்து
சுறுக்காக - விரைவாக
அல்லா - இறைவன்
செஞ்ச - செய்த
ரப்ப - இறையை
வெளக்கு - விளக்கு
ரோசா - ரோஜாப்பூ
அளிச்ச - அளித்த


தாலாட்டுப் பாடல்களுக்கு ஒரு குறிப்பிட்ட எண்ணளவு கிடையாது. குழந்தையின் அழுகை ஓய்ந்து குழந்தையை அமைதியடைந்து உறங்கும் வரை, தாய் ஓசையோடு தாலாட்டுப் பாடிக் கொண்டே இருப்பாள். இது தாய்மைக்கு இறைவனும், இயற்கையும் அளித்த கொடையாகும். தாலாட்டுப் பாடும் தாய்க்கு குழந்தையைப் பற்றிய முன்னிலைப் பெயர்களும், கற்பனையும், உவமையும், உருவகமும் பஞ்சமின்றி பொங்கி வழிந்து கொண்டே இருக்கும். தாலாடடுப் பாடும் தாயின் கற்பனைக்கு எல்லையே இல்லை. தாய் தன் உள்ளத்தில் எழுகின்ற உணர்ச்சிகளுக்கெல்லாம் உயிர் கொடுத்து தன் சேய்க்கு விண்மீனையும், சந்திரனையும், சூரியனையும், மானையும், குயிலையும், கிளியையும் முன்னிலைப் பெயர்களாக விழித்து குதூகலிக்கின்றாள்.

தாலாட்டு

**ஓரோரோ... ஓரகண்டே... நீ,**
**ஓராட்டக்... கேளாயோ...**
**வல்லோன் எனக்களித்த**
**வலம்புரியே நித்திரைசெய்...**
**(ஓரோரோ...)**

**பாலுக்கழுகிறதோ...?**
**கண்டார்... ஒனக்கு**
**பசிக்கிறதும் கேக்கிறதோ?**
**தாலாட்டச் செல்லிறதோ?**
**என்ர கண்டார்**
**தங்கமே நீ நித்திரசெய்...**
**நாகூர் மணி விளக்கே -**
**கண்டார் என்ர**
**நாகமணி ரெத்தினமே**
**ஆழிக்கடல் முத்தே... நீ**
**அழாம நித்திரசெய்**
**(ஓரோரோ...)**

(காலம் கருதி பாடல் முழுமையாக இங்கு தரப்படவில்லை) பாடல் உதவி
திருமதி கலந்தர் பாத்தும்மா
வயது / கல்வி 72



படிப்பறிவி ல்லை.கிராமம் : கூலி வேலை செய்தல்

**முன்னிலைப் பெயர்கள்**

கண்டார்
தங்கம்
வலம்புரி
நாகூர் மணிவிளக்கு
நாகமணி
இரத்தினம்
ஆழிக்கடல் முத்து

**மண்வளச் சொற்களும் கருத்துக்களும்**

செல்லிறதோ - சொல்கிறதோ
கேக்கிறதோ - கேட்கிறதோ
அழாம - அழாதே
நித்திர - நித்திரை

கண்டார் : இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் உள்ள கிராமப்புறங்களில் வாழும் முஸ்லிம்கள், மிகக்கூடிய அன்பின் நிமித்தம் குழந்தைகளை 'கண்டார்' என்று பாசத்தோடு அழைப்பார்கள். இவர்கள் சிறு குழந்தைகளை ஆசையோடு 'வாகண்டார், இரி கண்டார், குடிகண்டார், இழாத கண்டார்' என்று விழிப்பது வழக்கம். இதையொட்டியே இத்தாலாட்டைப் பாடிய தாயும் தன் குழந்தையைக் 'கண்டார்' என்று விழிக்கின்றாள்.

ஒரு தாயின் பாசத்தின் அதி உன்னதமான முன்னிலைச் சொல்லாகவே இதைக் கொள்ளலாம்.

இச்சொல்லை இப்பிராந்தியத்தில் வாழும் ஏழைக் கிராமத்து முஸ்லீம்க ளிடம் மட்டுமே கேட்கலாம். மேலும் 'தங்கம்', இரத்தினம், முத்து, ஆழியில் விளையம் வலம்புரிச் சங்கு' போன்ற முன்னிலைச் சொற்களைக் கொண்டும் தன் சேயை இவள் விழிக்கின்றாள்.

உலகில் மிகப் பெறுமதியான இப்பொருட்களையெல்லாம் தன் குழந்தைக்கு சூட்டி மகிழும் இத்தாயின் அன்புக் குத்தாள் நிகரேது? அவளின் கற்பனை வடிவங்களுக்குத்தான் ஈடேது?

நாகமணி : சோலைக் காடுகளில் மறைந்துறையும் கொடிய நாகபாம்பின் இடத்தில் உள்ள ஒளியுள்ள நாகமணியை யாரும் கண்டதாகவோ அல்லது பெற்றதாகவோ தெரியவில்லை. ஆனால், புராணக் கதைகளில் மட்டும் இந்த நாகமணியைப் பற்றி கூறப்படுவதையும், அதன் பெறுமதியையும், சக்தியையும் சொல்லப்படுவதையும் கேள்விப்படுகின்றோம்.

**எஸ். முத்துமீரான்**

## இன்று தீர்த்தோற்சவம்

# கோப்பாய் தெற்கு தனிப்பனை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் சமேத வீரபத்திர சுவாமி திருக்கோயில்



சிவபெருமான் ஆன்மாக்கள் மீது கொண்ட பெருங் கருணைத் திறந்தால் தடத்த நிலையில் அடியவர்களுக்கு அருள்பாலிக்கும் வகையில் வீரபத்திரர் வடிவத்தை தாங்கியுள்ளார். தக்கனின் கர்வத்தை அடக்கும் வகையில், அவனது யாகத்தை அழிப்பதற்கு சிவன் வீரபத்திரர் வடிவத்தை எடுத்துக்கொண்டதாக சமய வரலாறு சொல்கிறது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் ஆசிரியர்களில் ஒருவராகிய சேனாதிராஜ முதலியார் வாழ்ந்த கோப்பாய் மண்ணில் 19ஆம் நூற்றாண்டில் கந்த புராண படிப்புடன் ஆரம்பமான வழிபாடு காலப்போகத்தில் வீரபத்திரர் வழிபாடாக மாறியது. தனியான பனைமரத்தின் கீழ் வேல் வைத்து கந்தபுராண படனம் சிறப்பாக நடைபெற்றது. இப் புராண படனத்தைக் கேட்ட அடியவர்கள் தங்களின் கர்வத்தை அடக்கிய வீரபத்திரரை தம் காவல் தெய்வமாக வைத்து வழிபடத் தொடங்கினார்கள்.

இவர்களின் வழி வந்தவர் தான் சேர்.கந்தையா வைத்தியநாதன் ஆவர்.

திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிச் சபையிலிருந்து அரும்பணி ஆற்றிய சேர் கந்தையா வைத்தியநாதன் இந்த ஆலயத்திலும் திருப் பணி வேலைகளைச் செய்வித்தார்கள். இது கற்கோவிலாக கட்டப்பட்டு 1932ஆம் ஆண்டில் சைவ ஆகம நெறிமுறையிலே மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. பின்னர் காலத்துக்குக் காலம் திருப்பணி வேலைகள் இடம்பெற்று 1980, 1999 ஆகிய ஆண்டுகளிலும் மகா கும்பாபிஷேகங்கள் செய்யப்பட்டன.

தனியாரின் நிர்வாகத்தின் கீழிருந்த இந்தக் கோயிலில் 1976ஆம் ஆண்டு முதல் பரிபாலனசபை அமைத்து திருப்பணி வேலைகளைச் செய்வித்து வருகின்றார்கள். 2009ஆம் ஆண்டில் ஊர்மக்கள் எல்லோரும் சேர்ந்து சித்திரத் தேரொன்றை செய்வித் தார்கள்.

இந்த ஆலயத்தில் பரம்பரைப் பூசகர்களாக அந்தணக் குருமார்கள் இருக்கிறார்கள். அந்த வகையில் 1999ஆம் ஆண்டு மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்ட காலத்திலிருந்து இன்றுவரை வேதாகம கிரியா பானு சிவஸ்ரீ சோ.இ.பிரண தார்த்திஹரக் குருக்கள் பணியாற்றி வருவதுடன் ஆலய குருவாக பிரமஸ்ரீ பி.ஸ்ரீ நிகேத சர்மா இணைந்திருந்து பெரும் பங்காற்றி வருகிறார்.

இந்த ஆலயத்திற்கென சிவஸ்ரீ முத்துக்குமார சுவாமி ஐயர் ஊஞ்சல் பாடல்களையும், கொக்குவில் குமாரசாமிப் புலவர் வீரபத்திரர் பதிகத்தையும் பாடியுள்ளார்கள்.

இந்த ஆலயத்தில் வலி கிழக்கு சைவ சமய அருள்நெறி மன்றத்தின் ஆதரவில் சைவ சமய சொற்பொழிவுகள், கதாப்பிரசங்கம், சங்கீதக் கச்சேரிகள் என்பவற்றுடன் மாணவர்களின் சைவசமய அறிவை விருத்தி செய்யும் பொருட்டு சமய அறிவுப் போட்டியும் நடாத்தப்பட்டு வருகிறது. இவ்வருடம் தீர்த்த மண்டபம் புனரமைப்பு செய்யப்பட்டு புதுப் பொலிவுடன் விளங்குகிறது.

வீரபத்திர சுவாமி ஆலயத்தில் வருடந்தோறும் ஆனி உத்தர தினத்தை தீர்த்தமாகக் கொண்டு பத்து நாட்கள் மகோற்சவம் நடைபெற்று வருவது வழக்கம்.

இவ்வருட மகோற்சவம் கடந்த 17ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

நேற்று இரதோற்சவம் நடைபெற்றது. இன்று இடம்பெறும் தீர்த்தோற்சவத்துடன் மகோற்சவம் நிறைவு பெறுகிறது.


**சைவப் புலவர் செ. கந்த சத்தியதாசன்**

---

ஆனி உத்தரம், ஆடல்வல்லானாகிய ஸ்ரீ நடராஜப் பெருமானின் விசேட அபிஷேகத் தினங்களுள் ஒன்றாகும். சிவனுக்குத் தீர்த்தன் என்ற பெயரையும் மாணிக்கவாசக சுவாமிகள் "தீர்த்தன் நற்றில்லைச் சிற்றம்பலத்துட் தீயாடும் கூத்தன்" என்ற திருவெம்பாவை வரிகளிலே சுட்டியுரைத்துள்ளார்.

## இன்று ஆனி உத்தரம்

# நடராஜப் பெருமானுக்குரிய பெருவிழா



ஆடல்வல்லானின் அபிஷேகங்கள் ஆறு, மார்கழி மாதத்திலே நிகழும் ஆருத்ரா தரிசனம் வைகறை வழிபாடாக அமைகிறது. மாசி மாத பூர்வபட்ச சதுர்த்தசியில் வருவது மத்தியான அபிஷேகமாக உள்ளது. சித்திரை மாதத்துத் திருவோண நட்ஷத்திர அபிஷேகம் உச்சிக்கால வழியீடாகவும் ஆனி மாதத்து உத்திர நட்ஷத்திரத்தில் வருவது திருமஞ்சனத் திருநாளாகவும் அமைந்து மாலை வழிபாட்டுநாளாக மிளிர்கிறது. ஆவணி மாதத்து பூர்வபட்ச சதுர்த்தசி அபிஷேகம் அர்த்தசாம வழிபாடாகவும் உள்ளது. ஆறுகாலப் பூசைகள் எவ்வகையில் சிவாகம முறைகளுக்கு அமைய குறிப்பிட்ட நேரத்தில் நடைபெற வேண்டுமோ அதே போன்றுதான் ஸ்ரீ நடராஜப் பெருமானின் அபிஷேக தரிசனமும் மிகமிக பக்திபூர்வமான வகையில் முக்கியம் வாய்ந்ததாகும்.

அம்பலத்தரசனின் ஆனந்த தாண்டவ அபிஷேக தரிசனம் கோடானுகோடி புண்ணிய பலன்களைத் தரவல்லன.


அனவரத தாண்டவம், ஆனந்த தாண்டவம், சிவதாண்டவம், சபாபதி தாண்டவம், காலைத் தூக்கி ஆடும் தெய்வத்தின் தரிசனம், கனகசபாபதிக்கு நமஸ்காரம் செய்வது என்பதெல்லாம் உலகை ஆடலால் இயக்கும் - பஞ்சகிருத்தியமென்பது விஞ்ஞானப் பேருண்மை. 'மன்றுளாடும் மணி' என்பர் பெரியோர். அணுக் கொள்கையுடன் ஆராய்ச்சித் தொடர்புடையது சிவதாண்டவம். நடராஜப் பெருமான் திருவுருவை வர்ணித்த அப்பர் சுவாமிகள் "குனித்தபுருவம் கொவ்வைச் செவ்வாயிற் குமின் சிரிப்பு, பனித்த நடை, பவளம் போல் மேனியிற் பால்வெண்ணீறு, தூக்கிய திருவடி - எடுத்த பொற்பாதம் என இவற்றைக் காணப்பெறுவதற்கு மனித்தப்பிறவி வேண்டும்" என்று பாடியுள்ளார். ஆடலரசனின் வலது கையில் உடுக்கை உள்ளது. இது தோற்றமாகிய படைத்தற்றொழிலைக் கூறிக்கொண்டுள்ளது. அபய கரம் அஞ்சேல் எனக்கூறிய வண்ணம் காத்தற்றொழிலைச் செய்கிறது. திருக்கரத்திலுள்ள தீச்சுடரானது பஞ்ச பூதங்களினாலும் மும்மலங்களினாலும் எழும் தீயசக்திகளைப் பொசுக்கிச் சாம்பல் ஆக்கும் அழித்தற்றொழிலைச் செய்கிறது. ஊன்றிய திருவடியானது மறைத்தற்றொழிலைக் காட்டுகிறது. தூக்கிய திருவடியானது அருளற்றொழிலை எடுத்தியம்புகிறது. ஓம் என்னும் ஓங்காரப் பிரணவம் திருவாசியாக உள்ளது. திருவாசியின் தீச்சுடர் தீயவைகளை அழிக்கும் தத்துவத்தை எடுத்துவிளக்கி நிற்கின்றது. சாந்தகுணமும், மலர்ச்சியும் தவழும் முகமானது பெருங்கருணைப் பேராளனுக்கே உரியது எனப் படுகிறது. ஞானச் சிறப்பையும், தவ ஒழுக்கச் சிறப்பையும் ஜடாமுடியில் காணலாம். சிவன் பேராற்றல் படைத்தவர் என்பதற்கு இலக்கணமாகக் கங்கை அவரின் திருமுடியிலே உள்ளது. அஞ்சேல் என அபயமளித்துத் தம்மைச் சரண் அடைந்தவர்களை அரவணைக்கும் பெரும் பண்பினைத் திருமுடியில் இருக்கும் இளம்பிறைச் சந்திரன் உணர்த்திக்கொண்டிருக்கின்றது. ஆன்மாக்களின் கர்ம வினைகள், தவறுகள், குற்றங்களைத் தமது உள்ளத்தினால் களைந்து அவற்றை இல்லாமற் செய்யும் பேராற்றலை நீலகண்டம் எடுத்துக் காட்டுகிறது. ஸ்ரீ நடராஜப் பெருமான் ஆடலிறை சிவகாம சுந்தரியோடு தெற்கு நோக்கி வீற்றிருக்கிறார். தென்திசைக்கு அதிபதி யமன். ஆகவே தம்மை நாடித், தேடி, ஓடிவந்தடையும் அடியார்களது யமபயத்தை நீக்கும் தத்துவத்தைத் தென் முகக் கடவுளான ஸ்ரீ நடராஜப் பெருமான் உணர்த்தியவாறு வீற்றிருக்கிறார். ஆனிமாத மகோற்சவம் சிதம்பரத்திலே கோலாகலமாக நிகழ்கின்றது. இலங்கையிலும் பல சிவாலயங்களில் ஆனி உத்தரப் பெருவிழா அபிஷேகங்களுடன் சிறப்பாக நடைபெறுகிறது.

"மன்னிய தில்லை தன்னுள் ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்பலமே இடமாகப் பாவித்து நட்டம் பயிலவல்லானுக்கே பல்லாண்டு கூறுதுமே" என்கிறது திருப்பல்லாண்டு. ஆகவே திருமஞ்சனத் தினமாகிய இன்றைய ஆனி உத்தர நன்னாளிலே நடராஜப் பெருமானை விரத அனுட்டானங்களுடன் வழிபாடு செய்து அவனருளைப் பெறுவோமாக!

கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன், M.A., Ph.D
முதுநிலை விரிவுரையாளர்
மொழித்துறை, சப்ரகமுவ பல்கலைக்கழகம்

# சீனத் தலைவர் மாவோ என்னை மகனாகக் கருதினார்

## தலாய்லாமா கருத்து



சீனத் தலைவர் மாவோ சிடாங்கை, நான் தந்தையாகத் தான் கருதினேன். அவரும், என்னை மகனாகத் தான் நினைத் தார் என, திபெத்திய புத்த மத தலைவர் தலாய்லாமா தெரிவித் துள்ளார்.

பிரிட்டனில் பயணம் மேற்கொண் டுள்ள தலாய்லாமா, பி.பி.சி. டிவி யில் நடந்த நிகழ்ச்சியில் கூறிய தாவது:


சீனத் தலைவர் மாவோவுக்கும், எனக்கும் நல்ல இணக்கம் இருந் தது. நான் அவரை தந்தையாக மதித்தேன். அவரும் என்னை மகனாகத் தான் கருதினார். அரசு விருந்து நடக்கும்போது பிரச்னை ஏற்படும். விருந்தின் போது, என்னை அவர் பக்கம் அழைத்து, அவ ருடைய தட்டில் உள்ள உணவை எனக்கு எடுத்து போடுவார். இது, சீன பாரம்பரியப்படி கவுரவமா னது.

ஆனால், எனக்கு உள்ளூர் ஒரு பயம். ஏனென்றால், அவர் எப் போது பார்த்தாலும், புகைத்துக் கொண்டிருப்பார். இதனால், அவ ருக்கு இருமல் உண்டு. அத னால், அவர் கொடுத்த உண வில், கிருமிகள் தொற்றிக் கொண்டி ருக்குமோ எனப் பயப்படுவேன்.

திபெத்தில் உள்ள எனது ஆதரவாளர்கள், அவர்கள் இறப் பதற்குள், நான் அங்கு திரும்ப வேண்டும் என விரும்புகின்றனர். உணர்வுப்பூர்வமாக சிந்திக்கும் சிலர், நான் சுதந்திரமான நாட்டில் இருப்பதையே விரும்புகின்றனர். ஏனென்றால், நான் திபெத் சென்றால், நானும் ஒரு கைதி போலத் தான், காலம் கழிக்க வேண்டி வரும் என, அவர்கள் நினைக்கின்றனர். திபெத்திய விடு தலைக்காக போராடுபவர்கள், சீன அரசை எதிர்த்து தீக்குளிப் பது வேதனையானது. அரசியலில் இருந்து, நான் விலகி விட்டதால், இது குறித்து கருத்து தெரிவிக்க விரும்பவில்லை.

# உலக பார்வை

## பதவியேற்று ஒரே மாதத்தில் மக்களின் செல்வாக்கை இழந்த புதிய ஜனாதிபதி



பிரான்சில் சமீபத்தில் நடந்த ஜனாதிபதி தேர் தலில் சோசலிஸ்ட் கட சியை சேர்ந்த பிராங் கோய்ஸ் ஹோலண்டே வெற்றிபெற்று கடந்த மாதம் பதவி ஏற்றார்.

அதன் பின் கடந்த வாரம் நடைபெற்ற நாடாளு மன்ற தேர்தலிலும் அவருடைய கட்சி அமோக வெற்றி பெற்றது.

இந்நிலையில் ஜனாதிபதி ஹோலண்டேயின் செயல்பாடு களை முன்வைத்து, ஜுன் 14ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரை இணையத்தளம் மக்களிடையே கருத் துக் கணிப்பு ஒன்றை நடத்தியது.

இதில் ஜனாதிபதி யின் செல்வாக்கு 2 சதவிகிதம் சரிந்திருப் பது தெரிய வந்தது.

அதாவது 61 சதவிகிதத்தில் இருந்து 59 சதவிகிதமாக குறைந் தது.

ஆனால் பிரதமர் ஜியன்மார்க் செல்வாக்கு 65 சதவிகிதத்தில் அப்படியே தொடர்ந்து நீடிக்கி றது.

# சிரியாவில் பொதுமக்கள் மீதான தாக்குதல் தீவிரம்

## ஒரு வாரத்தில் 660 பேர் பலி

சிரியாவில் ஜனாதிபதி பஷார் அல் அசாத்திற்கு எதிரான போராட் டம் நாளுக்கு நாள் வலுவடைந்து வருகிறது.

இந்நிலையில் போராட்டக்காரர் கள் மீது இராணுவம் நடத்திய தாக்குதலில் கடந்த ஒரு வாரத் தில் மட்டும் 660 பேர் பலியான தாக மனித உரிமை அமைப் புகள் தெரிவித்துள்ளன.

சிரியாவில் ஜனாதிபதி பஷார் அல் ஆசாத் பதவி விலகக் கோரி கடந்த ஓராண்டுக்கும் மேலாக போராட்டம் நடைபெற்று வருகிறது. ஐ.நா.சபை சமரச முயற்சியில் ஈடுபட்டபோதிலும் பலன் கிடைக்கவில்லை.

இந்நிலையில், அலப்போ மாகா ணத்தின் தா'அசா மற்றும் அல்-அடாரிப் உள்ளிட்ட பகுதிகளில் போராட்டக்காரர்கள் அரசுக்கு எதிராக ஞாயிறன்று போராட்டத் தில் ஈடுபட்டனர். இவர்களை ஒடுக்குவதற்காக இராணுவம் நடத்திய தாக்குதலில் 16 பேர் உயிரிழந்ததாக மனித உரிமை அமைப்பைச் சேர்ந்த அப்துல் ரஹ்மான் தெரிவித்தார்.

அண்டை நாடுகளுடன் போர் நடைபெற்ற காலத்தில் கூட,



சராசரியாக ஒரு நாளைக்கு 20 பேர் கூட கொல்லப்படவில்லை. ஆனால் உள்நாட்டுப் போரில் தினமும் 100க்கும் மேற்பட்டோர் பலியாகின்றனர்.

கடந்த வாரத்தில் மட்டும் இரா ணுவத் தாக்குதலில் மொத்தம் 660 பேர் பலியாகி உள்ளனர்.

## சீனாவில் நிலநடுக்கம் 2 பேர் பலி, 100 பேர் காயம்

சீனாவில் நேற்று முன்தினம் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. இதில் 2 பேர் உயிரிழந்தனர், 100க்கும் மேற்பட்டோர் காயம டைந்தனர்.

சீனாவின் தென் மேற்குப் பகு தியில் உள்ள யுன்னான் மற்றும் சிசுவான் எல்லைப் பகுதியில் நேற்று மாலை 4 மணிக்கு நில நடுக்கம் ஏற்பட்டது.

ரிக்டர் அளவுகோலில் 5.7ஆக பதிவான இந்த நிலநடுக்கத்தில் 2 பேர் பலியானார்கள், 100 பேர் காயம் அடைந்தனர்.

மலைப்பகுதி என்பதால் வீடு



கள் இடிந்து சரிந்தன, தொலைத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுவிட்டன.

கட்டிட இடிபாடுகளுள் சிக்கி பலர் தவித்தனர். நிலநடுக்கத் தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மீட்புக் குழுவினரும், நிவாரணப் பொருட்களும் அனுப்பி வைக்கப் பட்டன.



பராகுவேயின் அஸ்சன்சியன் நகரில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்ட புதிய அதிபர் பெடரிகோ பிரான்கோ.

# சுட்டு வீழ்த்தப்பட்ட போர் விமானம்: சிரியாவுக்கு துருக்கி கடும் கண்டனம்

போர் விமானத்தை சிரியா சுட்டு வீழ்த்தியதற்கு துருக்கி கடும் கண்டனம் தெரிவித்துள் ளது, மேலும் நேட்டோ நாடுகளு டன் பேசி அடுத்த கட்ட நடவ டிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சிரியாவில் ஜனாதிபதி அசாத் துக்கு எதிரான போராட்டம் நாளுக்கு நாள் வலுத்து வரும் நிலையில், பாதிக்கப்பட்ட லட்சக்கணக்கான மக்கள் அகதிகளாக வெளியேறி துருக்கியில் தஞ்சம் புகுந்து வரு கிறார்கள்.

இதுமட்டுமல்லாமல் போராட்டக் காரர்களுக்கு துருக்கி உதவி செய்து வருவதாக சிரியா கூறி வருகிறது, இதன் காரணமாக இரு நாடுகளுக்கும் இடையில் பிரச் சினை நிலவுகிறது.

இந்நிலையில் கடந்த சில நாட் களுக்கு முன்பு துருக்கி போர் விமானம் ஒன்று எல்லைப் பகுதியில் பறந்த சென்றது. இந்த விமானத்தை சிரியா சுட்டு வீழ்த்தி விட்டது.

இதற்கு சிரியா தரப்பில் கூறு கையில், தங்கள் நாட்டு எல் லைக்குள் நுழைந்ததால் விமா னத்தை சுட்டு வீழ்த்தியதாக கூறியது.

இந்தச் சம்பவம் தொடர்பாக துருக்கி தீவிர விசாரணை நடத்தி விட்டு சிரியாவுக்கு கடும் கண்ட னம் தெரிவித்தது.

## எகிப்தின் புதிய ஜனாதிபதி முகமது முர்சி



எகிப்தின் புதிய ஜனாதிப தியாக முஸ்லிம் சகோதரத்துவ கட்சியின் தலைவர் முகமது முர்சி அறிவிக்கப்பட்டார். எகிப் தில் ஜனாதிபதித் தேர்தல் 16,17 ஆகிய திகதிகளில் இரு கட்டங்களாக நடைபெற்றது தேர்தல் முடிவை அந்நாட்டின் தேர்தல் ஆணையகத்தின் செய லாளர் பருக் சுல்தான் அதிகார பூர்வமாக வெளியிட்டார். இதில் முஸ்லிம் சகோதரத்துவ கட்சி 51வீத வாக்குகளை பெற்று அக் கட்சியின் தலைவரான முகமது முர்சி, எகிப்தில் புதிய ஜனாதி பதியாக பதவியேற்க உள்ளார். இதன் மூலம் எகிப்தில் கடந்த 16 மாதங்களாக நிலவி வந்த அரசியல் சிக்கல் முடிவுக்கு வந்துள்ளது. தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டதுடன் சில நக ரங்களில் உள்ள மக்கள் உற் சாகமாக கொண்டாடினர். எனி னும் தேர்தல் முடிவின் எதிரொலி யாக சில இடங்களில் வன்முறை வெடிக்கலாம் என அஞ்சப்படுகி றது. இதனால் தலைநகர் கெய்ரோ மற்றும் முக்கிய நகரங்களில் இராணுவம் குவிக்கப்பட்டு பலத்த பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட் டுள்ளது.

# ஆப்கானில் பயங்கர வெள்ளம்

## 30 பேர் பலி



ஆப்கானிஸ்தானில் கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் இதுவரை 30 பேர் இறந்துள்ள னர், பலர் காணாமல் போயுள்ள னர்.

ஆப்கானிஸ்தானின் கோர் மாகாணத்தில் கடந்த சில நாட்க ளாக பயங்கர சூறாவளி மற்றும் கடும் மழை பெய்து வருகிறது.

இதில் பல கிராமங்கள் வெள் ளத்தில் மூழ்கி உள்ளன. நூற் றுக்கணக்கான விவசாய நிலங்க ளில் பயிர்கள் நாசம் அடைந் துள்ளன. பல வீடுகள் வெள்ளத் தில் இடிந்து நொறுங்கி உள் ளன.

இதுகுறித்து மாகாண அரசு செய்தித் தொடர்பாளர் அப்துல்ஹை காட்டி கூறுகையில்,

வெள்ளத்தில் இதுவரை 30 பேர் பலியாகி உள்ளனர். பலர் காணாமல் போயுள்ளனர்.

அவர்களை தேடும் பணி முடுக்கி விடப்பட்டுள்ளது. வெள் ளம் பாதித்த பகுதிகளில் மீட்புப் படையினர் தீவிர நடவடிக்கை யில் இறங்கி உள்ளனர் என்றார்.

பேரிடர் மேலாண்மை துறை அதிகாரிகள் கூறுகையில், வெள் ளம் பாதித்த பகுதிகளில் வசித்த மக்கள் பாதுகாப்பான இடங் களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இதுபோன்ற கடும் சூறாவளி, மழை ஆண்டுதோறும் இந்த மாதத்தில் வழக்கமானதுதான். எனவே முன்னெச்சரிக்கை நடவ டிக்கை எடுக்கப்பட்டது. அதனால் பலி எண்ணிக்கை குறைந்துள்ளது என்றனர்.

# இந்திய செய்திகள்


## கழிப்பறை வசதி இல்லாமல் ஏவுகணை செலுத்துவதில் என்ன பயன்?

- ஜெய்ராம் ரமேஷ்

சுகாதாரப் பிரச்னைகளை சரிவர நிவர்த்தி செய்யாத பட்சத்தில், அக்னி போன்ற ஏவுகணைகளை செலுத்துவதால் எந்த நன்மையும் ஏற்பட்டுவிடாது, என மத்திய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஜெய்ராம் ரமே' தெரிவித்துள்ளார்.

ஒடிசா மாநிலம், தம்ராவில் உள்ள ராணுவ ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி கழகம் சார்பில் நடைபெற்ற விழாவில், சுற்றுச் சூழலுக்கு உகந்த கழிப்பறை திட்டத்தை துவக்கி வைத்து,

மத்திய அமைச்சர் ஜெய்ராம் ரமே' பேசியதாவது:விண்ணிற்கு அக்னி போன்ற ஏவுகணைகளை அனுப்புவதை விட, ஒவ்வொருவரது வீட்டிலும் கழிப்பறையை அமைப்பது தான் முக்கியம். சுகாதாரத்தை தவிர்த்து விட்டு, ஏவுகணைகளை அனுப்புவதால் எந்த விதமான நன்மையும் ஏற்படப் போவதில்லை. ஒவ்வொருவரது வீட்டிலும் கழிப்பறையை ஏற்படுத்தித் தருவது தான் அரசுக்கு இப்போதுள்ள மிகப்பெரிய சவால் இப்



பிரச்னையை எப்படி சமாளிப்பது என, நாள் ஒன்றுக்கு நான் 18 மணி நேரம் சிந்திக்கிறேன்.

சுற்றுச்சூழலுக்கு உகந்த உயிரி கழிப்பறை திட்டத்தை நடை முறைக்கு கொண்டு வருவது, நாட்டில் சுத்தம் மற்றும் சுகாதாரத்திற்காக விழிப்புணர்வு ஏற்படுத்திய மகா த்மா காந்திக்கு நாம் செலுத்தும் அஞ்சலி யாகும். ராணுவத்துக்கு ஒதுக்க ப்படும் நிதியைப் போலவே, பொதுநல நடவடிக்கை களுக்கும் ஒதுக்கப பட வேண்டும். பட்ஜெ ட்டில், ஊரக வளர்ச்சித் துறைக்கு ஒதுக்கப்பட்டது 99 ஆயிரம் கோடி ரூபாய். ஆனால், ராணுவ த்துக்கு இரண்டு மடங்கு அதாவது, 1 லட்சத்து 93 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டு ள்ளது. ராணுவ அமைச்சக த்துக்கு நிதி ஒதுக்கீட்டை குறை க்க வேண்டும் என, நான் கூறவி ல்லை. அதே நேரத்தில், பொது நலத்திற்கும் அதே அளவிற்கு நிதி ஒதுக்க வேண்டும் என்று தான் கூறுகிறேன். இவ்வாறு ஜெய்ராம் ரமேஷ் கூறினார்.

## சாப்பாடு கேட்டு வந்த முதியவரை உதைத்த நித்தியானந்தாவின் சீடர்

சாப்பாடு கேட்டு வந்த முதியவர் ஒருவரை மதுரை ஆதீன மடத்திலிருந்து வெளியே தள்ளி, அவரை நித்தியானந்தாவின் சீடர் தாக்கும் கொடூர காணொளிகள் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நடிகை ரஞ்சிதா, பெண் சீடர் ஆர்த்தி கற்பழிப்பு, பொது அமைதிக்கு குந்தகம் விளைவித்தது என தொடர் வழக்குகளில் சிக்கியுள்ள நித்தியானந்தா, தற்போது பிணையில் உள்ளார்.

கர்நாடக பிடதி ஆசிரமத்திற்கு சீல் வைக்கப்பட்டுள்ளதால் தற்போது மதுரை ஆதீனத்தில் தஞ்சமடைந்துள்ளதாக கூறப்படுகிறது.



இந்நிலையில் அவரது சீடர் ஒருவர், கடந்த 10ம் திகதி சாப்பாடு கேட்டு வந்த முதியவர் ஒருவரை தாக்கிய சம்பவம் தமிழக செய்தி நிறுவனமான சன்நியூசில் ஒளி பரப்பாகி உள்ளது. இதில் ஒன்றுக்கும் மேற்பட்ட தடவை அந்த சீடர் முதியவர் கன்னத்தில் அறைந்தும் காலால் உதைத்தும் கொடூரமாக தாக்கியிருக்கிறார்.

## முல்லைப் பெரியாறு துளை அடைக்கும் பணிகள் நிறைவு : அமைச்சர் தகவல்

முல்லைப் பெரியாறு அணையில், துளைகளை அடைக்கும் பணி நிறைவடைந்துள்ளது, என, தமிழக பொதுப்பணித் துறை அமைச்சர் ராமலிங்கம் தெரிவித்தார். ஈரோட்டில் நேற்று அவர் அளித்த பேட்டி: அமராவதி-பாலாறு வாய்க்கால் படுகையில் உள்ள தடுப்பணைகள், கரை-களை பலப்படுத்தவும், சீரமைத்து, புதுப்பிக்கும் பணி திட்டம், 146 கோடி 'ரூபாய் மதிப்பில், செயல் படுத்தப்பட உள்ளது. முல்லைப் பெரியாறு அணையில், 1,000 மூட்டை சிமெண்ட் கொண்டு, ஏழு இடங்களில் துளைகளை அடைக்கும் பணிகள், நேற்று முன்தினம் நிறைவடைந்துள்ளது. கேரளாவில், சிறுவாணியின் குறுக்கே, தடுப்பணை கட்டுவதை தடுக்க, முதல்வர், மத்திய அரசுக்கு கடிதம் எழுதியுள்ளார். இடுக்கி திட்டத்தை செயல்படுத்துவது உட்பட, தமிழகத்தை பாதிக்கும் திட்டங்களை நிறுத்தவும் முதல்வர் உறுதியான நடவடிக்கை எடுத்துள்ளார். அதை மீறி, திட்டங்களை, கேரள அரசு செயல்படுத்த முயற்சித்தால், உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து, நிவாரணம் பெறப்படும். கேரள அரசு என்ன இடையூறு செய்தாலும், அவற்றை முதல்வர் தவிடு பொடியாக்கி விடுவார். தமிழகத்தில் அனுமதியின்றி மணல் அள்ளுவது, 90 சதவீதம் வரை தடுக்கப்பட்டுள்ளது. திருட்டுத்தனமாக மணல் எடுத்த, 70 பேர் வரை குண்டர் தடுப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். நீதிமன்ற உத்தரவிட்ட அளவுப்படியே மணல் எடுக்கப்படுகிறது. கடந்த ஆட்சியில் நடந்தது போல, கணக்கில் வராமல்



கூடுதல் யூனிட் மணல் வழங்கப்படுவதில்லை. பொறியாளர் நியமனம்: மணலை விற்பதற்க்கு, தனியே, "ஸ்டாக் பாயின்ட்" அமைக்க, கலெக்டர் அனுமதி பெற்றிருக்க வேண்டும். மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பகுதியில், 4.5 லட்சம் ஏக்கர் பாசன வசதி பெறுகிறது. தண்ணீர் திறக்காத நிலையில், நிலத்தடி நீராதம் உள்ளிட்டவை மூலம், 2.5 லட்சம் ஏக்கர், பாசன வசதி பெற்று, சாகுபடி துவங்கியுள்ளது. தற்போது பொறியாளர்கள் நியமனம், டி.என்.பி.எஸ்.சி., மூலம் நியாயமான முறையில் நடக்கிறது. பொதுப்பணித் துறையில் பொறியா-ளர்கள் நியமனம், ''மாமூல்'' கலெக்ஷன் பெற்று நியமிப்பதால், தாமதம் ஏற்படுவதாக கூறும் கருணாநிதி தான், இதற்கு முன், அத்துறையை வைத்திருந்தார். அவரது காலத்தில், இதுபோன்ற மாமூல் பெற்று நியமிக்கும் நடைமுறை இருந்துள்ளது. அதனடிப்படையில், பழைய நினைப்பில் தற்போதும் பொறியாளர்களை பணம் பெற்றுக் கொண்டு நியமிப்பதாக கூறுகிறார்." இவ்வாறு அவர் கூறினார்.

ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள, மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி, நேற்று முன்தினம், மேற்கு வங்க மாநிலம், பிர்பம் மாவட்டம் மிராட்டி கிராமத்தில் உள்ள தன் மூதாதையர் வீட்டிற்கு சென்றார். அங்கு, தன் மூத்த சகோதரி அன்னபூர்ணா பந்தபாத்யாயிடம் ஆசி பெற்றார்.

## அதிசயம் நிகழ்ந்தால் நான்தான் ஜனாதிபதி: பி.ஏ.சங்மா



அதிசயம் நிகழ்ந்தால் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறுவேன் என்றும் அதிசயங்கள் நிகழும் என்பதில் தமக்கு நம்பிக்கை உண்டு எனவும் பி.ஏ. சங்மா தெரிவித்துள்ளார்.

அதிமுக, பிஜு ஜனதா தளம் ஆகிய கட்சிகளால் ஜனாதிபதி தேர்தல் வேட்பாளராக மக்களவை முன்னாள் சபாநாயகர் பி.ஏ. சங்மா முன்னிறுத்தப்பட்டார்.

பின்னர் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அவரை தனது வேட்பாளராக அதிகாரப்பூர்வமாக முன்னிறுத்தியுள்ளது.

எனினும் ஜனாதிபதி தேர்தலில் காங்கிரஸ் கூட்டணி வேட்பாளரான பிரணாப் முகர்ஜி வெற்றி பெறவே அதிக வாய்ப்பு உள்ளது.

இந்நிலையில் தனியார் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் சங்மா கூறியிருப்பது: உலகில் அதிசயங்கள் நிகழ்வது உண்மை தான். எனக்கும் அதிசயங்கள் நிகழ்வதில் நம்பிக்கை உண்டு. எனவே குடியரசுத் தலைவர் தேர்தலிலும் அதிசயம் நடக்க வாய்ப்பு உள்ளது.

கடவுள் எனது பக்கம் இருக்கும் பட்சத்தில் தேர்தல் முடியும் முன்னரே நான் தோல்வியடைவேன் என்று கூற முடியாது.

அரசியலில் காட்சிகள் மிகவேகமாக மாறும். எப்போது வேண்டுமானாலும், எது வேண்டுமானாலும் நிகழலாம். தேர்தல் என்பது அரசியல். எனவே இங்கும் மாற்றங்கள் நிகழும். என்ன மாற்றங்கள் வருகின்றன என்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டும் என்றார்.

## மும்பை தாக்குதல் முக்கிய சதிகாரன் டில்லி விமான நிலையத்தில் கைது

மும்பையில் நடந்த கொடூர தாக்குதலில் சம்பந்தப்பட்ட முக்கிய சதிகாரனை இன்று சிறப்பு படை போலீசார் கைது செய்தனர். இவன் இந்தியன் முஜாகிதீன் அமைப்பை சேர்ந்தவன் என்று தெரிய வந்துள்ளது.

மும்பை தாஜ் ஓட்டல் மற்றும் முக்கிய இடங்களில் கடந்த 2008 நவ 26 ம்தேதி பயங்கரவாதிகள் துப்பாக்கி மற்றும் குண்டுகள் மூலம் பயங்கர தாக்குதல் நடத்தினர். 164 பேர் கொல்லப்பட்டனர். 300க்கும் மேற்பட்டோர் காயமுற்றனர். இதில் ஈடுபட்டவர்களில் அஜ்மல் கசாப் மட்டும் உயிருடன் பிடிபட்டான்.

இந்நிலையில் டில்லி சர்வதேச விமான நிலையத்தில் சையீது ஜெயுபுதீன் என்ற அபு ஹம்சா என்பவன் பிடிபட்டுள்ளான். இவன் இந்தியன் முஜாகிதீன் அமைப்பை சேர்ந்த பாகிஸ்தான் நாட்டில் வசித்து வந்தவன். மும்பை தாக்குதல் நடந்தபோது பாகிஸ் தானில் இருந்தபடி தாக்குதலுக்கு சதி திட்டம் தீட்டி கொடுத்தவன் என்று தெரிய வந்துள்ளது.




ஹம்சாவுக்கு பெங்களூர் ஸ்டேடியம் தாக்கப்பட்ட வழக்கு, குஜராத்தில் நடந்த சில வன்சம்பவங்களுக்கும் இவனுக்கு தொடர்பு உள்ளளதாக போலீஸ் தரப்பில் கூறப்படுகிறது.

## பிரதீபா பட்டிலுக்காக புனேயில் பங்களா தெரிவு

ஜனாதிபதி பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பின், பிரதீபா பட்டீல், புனே நகரில் தங்குவதற்கான பங்களா, தெரிவு செய்யப்பட்டுள்ளது. புனே நகரில், ப'ன் சாலையில் உள்ள பங்களாவை, நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகம் தேர்வு செய்துள்ளது.

இது தொடர்பாக, நகர்ப்புற மேம்பாட்டுத் துறை செயலர் சுதிர் கிருஷ்ணா கூறியதாவது: புனேயில், மகாராஷ்டிர அரசுக்கு சொந்தமான பங்களா ஒன்றை, ஓய்வு பெற்ற பின், ஜனாதிபதி பிரதிபா பாட்டீல் தங்குவதற்காக தேர்வு செய்துள்ளோம். உள்ளூர் நிர்வாகத்தினர் மற்றும் மாநில அரசு நிர்வாகத்தினருடன் கலந்து ஆலோசித்து, இதைத் தேர்வு செய்துள்ளோம். பங்களா தொடர்பாக, மகாரா'டிர அரசுக்கு கடிதம் எழுதியுள்ளோம். அவர்களின் பதிலுக்காக காத்திருக்கிறோம். புனேயில், பிரதிபா பாட்டீல் தங்குவதற்கு ஏற்ற வேறு பங்களாக்கள் இல்லை என, மத்திய பொதுப்பணித் துறை கூறியதால், இந்தப் பங்களாவை தேர்வு செய்துள்ளோம்.

விரைவில் புதுப்பிப்பு:தற்போது தேர்வு செய்துள்ள பங்களா, எஸ்டேட்கள் இயக்குனரகத்திடம் ஒப்படைக்கப்பட்ட உடன், அதை புதுப்பிக்கும் வேலைகளை, மத்திய பொதுப்பணித் துறை துவகக்கும். முன்பு ஜனாதிபதியாக பதவி வகித்த பலர், பணி ஓய்வுக்குப் பின், டில்லியில் தங்கவே விருப்பம் தெரிவித்தனர்.ஆனால், ஒரு சிலர்



மட்டுமே, சொந்த மாநிலத்தில் தங்க விரும்பினர். முன்னாள் ஜனாதிபதி நீலம் சஞ்சீவ ரெட்டி, அவரது சொந்த மாநிலமான ஆந்திராவில் தங்க விரும்பியதால், மாநில அரசின் உதவியுடன், அங்கு ஒரு பங்களா ஏற்பாடு செய்யப்பட்டது. ஜனாதிபதி பதவியில் இருந்து ஓய்வு பெறும் பிரதிபா பாட்டீல், புனேயில் தேர்வு செய்யப்பட்டுள்ள பங்களா தயாராகும் வரை, டில்லி நம்பர் 2, துக்ளக் லேனில் உள்ள பங்களாவிற்கு, தற்காலிகமாக இடம் பெயர்வார். இவ்வாறு கிருஷ்ணா கூறினார்.

**ராஜஸ்தான் மாநிலம் ஜெய்பூரில் நடைபெற்ற துப்பாக்கி சுடுதல் போட்டியில் கலந்து கொண்ட 78 வயது பெண் பார்வையாளர்களை அதிசயிக்க செய்தார்.**



# இலங்கையிடம் சுருண்டது பாகிஸ்தான்



இலங்கை மற்றும் பாகிஸ் தான் அணிகளுக்கிடையிலான முதலா வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி யில் இலங்கை அணி 209 ஓட்டங்களினால் வெற்றியீட் டியது. காலியில் இடம் பெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியின் நான்காவது நாளான இன்று திங் கட்கிழமை இரண்டாவது இனிங் ஸில் 300 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டு க்களையும் இழந்தது பாகிஸ்தான் அணி.

இதனையடு த்தே இலங்கை அணி 209 ஓட்டங்களினால் வெற் றியீட்டியது.

இந்த டெஸ்ட் போட்டியின் முதல் இரண்டு இனிங்ஸ்களி லும் துடுப்பெடுத் தாடிய இலங் கை அணி முறை யே 472 மற்றும் 137 ஓட்டங்களுக்கு ஐந்து விக்கெட் டுக்களையும் இழ ந்தது.

பதிலுக்கு துப்படுத்தாடிய பாகிஸ்தான் அணி இரண்டு இனிங்ஸ்களிலும் முறையே 100 மற்றும் 300 ஓட்டங்களை பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

# சமபோஷ வெற்றிக் கிண்ண உதைப்பந்தாட்டம்



சமபோஷ வெற்றிக் கிண்ணத் திற்காக யாழ் மாவட்டப் பாடசா லை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 13 வயதுப் பிரிவின ருக்கான உதைப்பந்தாட்டப் போட்டியில் வயாவிளான் மத்திய மகா வித்தியாலய யாழ் மாவட்ட சம்பியனாக தெரிவு செய்யப் பட்டது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட் டரங்கில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரியும் வயாவி- ளான் மத்திய மகா வித்தி யாலயமும் ஞாயிற்றுக் கிழமை மோதிக்கொண்டன.

போட்டியில் இரு அணிகளும் ஏற்கனவே பலம்மிக்க பாட சாலை அணிகளை வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குள் நுழைந்த நிலையில் அரு அணிகளும் பலத்துடன் மிடுக்குடனும் விளையாடினார்கள்.

வெற்றியை நோக்காகக் கொண்டு உற்சாகத்துடன் இரு அணிகளும் ஆசிரியர்களின் வழிகாட்டலின் கீழ் களத்தில் மோதிக்கொண்ட போதிலும் வயாவிளான் மகா வித்தியாலய முன்னணி வீரன் அனிறின் ஒரு கோலை பெற்று தனது அணியை முன்னிலைக்கு கொண்டு வந்தார். இந்நிலையில் முதல் பாதி ஆட்டம் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் முன்னிலையில் நின்ற வேளை யில் முதல் பாதி ஆட்டம் முடிவ டைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் ஆசிரியர்களின் அறிவுரைகளுடன் களத்தில் இறங்கி மோதிக்கொண்டார்கள். இரு அணிகளும் சிறுவர்களாக இருந் தாலும் ஆசிரியர் எண்ணத்தி ற்கு ஏற்ப விளையாடிய போதி லும் இரண்டாம் பாதி ஆட்டத்தில் கோல் பெற முடியும் என்ற நம்பிக்கையுடன் களமிறங்கிய இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறாத நிலையில் ஆட்டம் முடிவ டைந்தது. ஆட்ட நிறைவில் வயாவி- ளான் மத்திய மகா வித்தியாலயம் 1 இற்கு 0 என்ற கோல் கணக்கில் யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல் லூரியை வெற்றி பெற்று யாழ் மாவட்ட சம்பியனாக தெரிவு செய்யப் பட்டதுடன் அடுத்த மாதம் திருகோண மலையில் நடைபெறவுள்ள தேசியமட்ட போட்டியில் விளையாட தகுதி பெற்றுள்ளமையும் குறிப்பிடத் தக்கது.

# வடமாகாண கூடைப்பந்தாட்டம்

## மன்னார் அணியின் கடும் எதிர்ப்பை மீறி யாழ் மாவட்ட அணி சம்பியன்



மன்னார் மாவட்ட அணியின் விளையாட்டுக்கு ஈடு கொடுக்க முடியாத நிலையில் தடுமாறிய முன்னாள் வடமாகாண சம்பியன் அணியான யாழ் மாவட்ட அணி பலத்த போராட்டத் தின் பின்னர் மீண்டும் வடமா காண சம்பியன- ாக தெரிவு செய்யப்பட்டது.

வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் மாவட்ட அணிக ளுக்கு இடையே நடத்திய ஆண் களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை மைதானத்தில் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் யாழ் மாவட்ட அணியும் மன்னார் மாவட்ட அணியும் மோதிக் கொண்டன.

போட்டியில் இரு அணிகளும் சம பலம் பொருந்திய அணி என்பதை நிரூபிக்கும் வகையில் இறுதிவரை வெற்றிக்காக போரா டியமையால் போட்டி என்றும் இல்லாதவாறு சுமார் இரண்டு மணித்தியாலத்திற்கு மேல் நீடித்தது.

இரு அணிகளும் மாறி மாறி புள்ளிகளைப் பெற்ற நிலையிலும் இறுதி நேரத்தில் மன்னார் மாவட் டத்தின் கைகள் ஓங்கிய நிலை யில் 25 இற்கு 18 புள்ளிகள் என்ற நிலையில் முடிவடைந்தது.

இரண்டாம் சுற்றை யாழ் மாவ ட்ட அணி இலகுவாக 25 இற்கு 15 புள்ளிகள் என்ற அடிப்ப டையில் வெற்றி பெற்ற போதிலும் மூன்றாம் சுற்றை மீண்டும் மன்னார் மாவட்ட அணி பலத்த எதிர்ப்பின் மத்தியில் 25 இற்கு 19 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றியை தனதாக்கிக் கொண்டது.

இரு அணிகளும் தலா இரண்டு சுற்றுக்களை பெற்ற நிலையில் இறுதிச் சுற்றுக்கான போட்டி இரு அணிகளுக்கும் முக்கியமானதாக காணப்பட்ட நிலையில் இரு அணி களும் வாழ்வா? சாவா? என்ற நிலையில் விளையாடி னார்கள்.

மைதானத்தில் இருந்த ரசிகர்க ளுக்கு பெரும் விருந்தாக அமைந்தது. ஆனாலும் வெற்றியை தனதாக கியே தீர வேண்டும் என்ற முனைப்பில் இரு அணிகளும் மாறி மாறி புள்ளிகளைப் பெற்ற மையால் 15 புள்ளிகளுடன் நிறைவு பெற வேண்டிய போட்டி 21 இற்கு 19 புள்ளிகள் என்ற அடிப்படையில் யாழ் மாவட்ட அணி பலத்த போராட்டத்தின் பின்னர் வெற்றி பெற்றது. ஐந்து சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் யாழ் மாவட்ட அணி 03 இற்கு 02 சுற்றுக்கள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்று மாகாண சம்பியன- ாகத் தெரிவு செய்யப்பட்டது.

# மாகாண வலைப்பந்தாட்டப் போட்டி

வடமாகாண திணைக்களத்தால் மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்படும் வலைப பந்தாட்டப் போட்டியில் 17 வயதுப் பிரிவினருக்கான போட்டி நேற்று முன்தினம் ஆரம்ப மாகியது.

அரியாலை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் மோதும் அணிக- ளின் விபரம் வருமாறு:

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் முல்லைத்தீவு செம்மலை மகா வித்தியாலயம், மன்னார் முருங்கன் மகா வித்தியாலயம் எதிர் வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, கிளிநொச்சி சென்.திரேசா மகளிர் கல்லூரி, எதிர் மன்னார் சென்.சேவியர் மகளிர் கல்லூரி, முல்லைத்தீவு ஐயன்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை எதிர் வவுனியா தரணிக்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை.

மன்னார் சென்.யோசேப்வாஸ் மகா வித்தியாலயம் எதிர் யாழ்ப் பாணம் கொக்குவில் இந்துக் கல்லூரி.

கிளிநொச்சி அக்கராயன் குளம் மகா வித்தியாலயம் எதிர் வவுனியா கனகராயன் குளம் மகா வித்தியாலம்

யாழ்ப்பாணம் அராலி சரஸ்வதி வித்தியாலயம் எதிர் கிளிநொச்சி வட்டக்கச்சி மகா வித்தியாலயம்

இரண்டாம் சுற்றில் இருந்து முல்லைத்தீவு முள்ளிவளை மகா வித்தியாலயம் மோதவுள்ளது.

# வேகம் கொண்ட முல்லைத்தீவு மாகாண சம்பியனை பறித்தது

வலிகாமம்

வேகம் கொண்ட முல்லைத்தீவு மாவட்ட பெண்கள் கிரிக்கெட் அணியின் முன்னர் சவாலாக அமையும் என எதிர்பார்க்கப்பட்ட மன்னார் மாவட்ட பெண்கள் கிரிக் கெட் அணி பணிந்தமையால் முல லைத்தீவு மாவட்ட அணி மாகாண சம்பியனாக தெரிவு செய்யப் பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற பெண் களுக்கான 5 ஓவர்கள் 6 பேர் பங்குபற்றும் கிரிக்கெட் போட டியின் இறுதி ஆட்டத்தில் மன்னார் மாவட்ட அணியும் முல்லைத்தீவு மாவட்ட அணியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய முல்லைத்தீவு மாவட்ட அணி 5 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட் டுக்களை இழந்து 50 ஓட்டங் களைப் பெற்றது.

சுதர்சனா ஒரு சிக்கர் 6 பௌண்டரிகளுடன் 35 ஓட்டங் களைப் பெற்றதுடன் உதிரிகளாக 9 ஓட்டங்களும் பெறப்பட்டன.

மன்னார் மாவட்ட அணியைச் சேர்ந்த பைரவி ஒரு ஓவர் பந்து வீசி 3 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், றேனஷா ஒரு ஓவர் பந்து வீசி 12 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டு டையும் கைப்பற்றினார்கள்.

51 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மன்னார் மாவட்ட அணி பொறுமையாக விளையாடாத நிலையில் தொடர்ந்து விக்கெட்டுக்களை பறி கொடுத்த மையால் 3.1 ஓவர் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 22 ஓட்டங்களைப் பெற்றது.

பகீரதி 6 ஓட்டங்களைப் பெற்ற துடன் உதிரிகளாக 7 ஓட்டங் களும் பெறப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த அனுசியா ஒரு ஓவர் பந்து வீசி 6 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் சுதர்சனா, துபிகா தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

# போராடி வென்றது வங்கம்

சிம்பாவேயில் இடம்பெற்று வரும் முக்கோண ருவென்ரி - 20 தொடரின் சனிக்கிழமை நடை- பெற்ற போட்டியில் பங்களாதேஷ் அணி வெற்றிபெற்றுள்ளது. தென்னா பிரிக்க அணிக்கெதிரான இப்போட்டியில் பங்களாதேஷ் அணி இறுதி ஓவரின் 5வது பந்தில் வெற்றியைப் பெற்றுக் கொண்டது.

ஹராரேயில் இடம்பெற்ற போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத் தாடிய தென்னாபிரிக்க அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 129 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் தென்னா பிரிக்க அணி சார்பாக ஜஸ்ரின் ஒன்ரொங் 36 பந்துகளில் 41 ஓட்டங்களையும், ஹசிம் அம்லா 19 பந்துகளில் 20 ஓட்டங்க ளையும் பெற்றனர்.

பந்து வீச்சில் பங்களாதேஷ் அணி சார்பாக எலியஸ் சணி 4 ஓவர்களில் 22 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், மஹமதுல்லா, மஷ்ரபி மோர்தஷா, ஷியவூர் ரஹமான் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

20 ஓவர்களில் 130 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 19.5 ஓவர்களில் 7 விக்கெட்டுக் களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் பங்களாதேஷ் அணி சார்பாக மொஹமட் அஷரபுல் 40 பந்துகளில் 40 ஓட்டங்களையும், மஹமதுல்லா 27 பந்துகளில் 28 ஓட்டங்களையும், ஷியவுர் ரஹ்மான் 26 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 27 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக மார்ச்சன்ட் டீ லாங்க 3 ஓவர்களில் 25 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், வெய்ன் பார்னெல் 4 ஓவர்களில் 18 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், அல்பி மோர்க்கல், கிறிஸ் மோரிஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றி னர். போட்டியின் நாயகனாக பங்களாதேஷின் மஹமதுல்லா தெரிவானார்.

# விம்பிள்டன் டென்னிஸ் போட்டிகள் நேற்று ஆரம்பம்

நான்கு கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் டென்னிஸ் பட்டத்துக்கான இந்த ஆண்டின் போட்டிகள் தென் மேற்கு லண்டனின் விம்பிள்டன் பகுதியிலுள்ள அகில இங்கி லாந்து டென்னிஸ் மைதானத்தில் நடைபெறுகிறது.

ஆடவர் பிரிவில் நடப்பு சாம்பியனான செர்பியாவின் நோவாக் யாக்கோவிச் நேற்று தனது முதல் ஆட்டத்தில் ஸ்பெயினின் யூவான் கார்லோஸ் ஃபெரேறோவை எதிர்த்து விளையாடினார்.

மகளிர் பிரிவில் தரப்பட டியலின் முதலிடத்தில் இருக்கும் ரஷ்யாவின் மரிய ஷரபோவாவும் தனது முதல் போட்டியில் இன்று விளையாடுகிறார்கள்.



மரபு ரீதியாக விம்பிள்டன் டென்னிஸ் போட்டிகள் புல்த ரையில் விளையாடப் படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.